

# மங்கலநாதம்



தொகுப்பு:-

சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம்

வெளியீடு :-

சாவகச்சேரி நகரசபை அருள்மிகு விறுமர் தேவஸ்தானம்

09-12-2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருக்கோயில் வழிபாட்டால் வரும் பலன்கள்

1. திருவீதியை வலம் வருவதனால் ஆன்மாவில் தங்கி இருக்கும் பாவங்கள் தேய்ந்து சிவ வியாபகம் உண்டாகும்.

2. நிலத்தில் வீழ்ந்து வணங்குவதனால் ஆன்ம தற்போதம் நீங்கி எண்குணம் விளங்கச் சிவத்தோடு அத்துவிதக் கலப்பு உண்டாகும்.

3. காலையில் திருவீதியை வலம் செய்வதால் நோய் நீங்கும் உச்சிப் பொழுதில் வலம் வந்தால் விரும்பிய சித்தி உண்டாம். சாயங்காலத்தில் வலம் செய்வதால் சர்வ பாவநீக்கம் உண்டாம். அர்த்தயாமத்தில் வலம் செய்வதனால் வீடு பெற்று சித்தி உண்டாம்.

4. அங்கப்பிரதட்சணம் (பிரதட்டை) செய்வதனால் தீவினைகள் எல்லாம் நீங்கப்பெற்று முத்தி சித்தியாகும்.

5. சிவார்ச்சனை செய்வித்தல் - ஆன்மாவைப் பீடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் அழித்தற்பொருட்டு அவற்றின் இயல்பைக் குறிக்கும் நிவேதனப் பொருட்களை இறைவன் திருவடியில் வைத்து ஞானாசாரியராகிய அர்ச்சகரினால் ஓதப்படும் வேத மந்திரங்களினால் திருவருட்சக்தி தோன்றி இவற்றை அழிக்க நிவேதனப் பொருட்களில் சிவஞானந்தோன்றும். அந்த ஞானப் பிரகாசத்தில் சிவத்தை காணலாம். அர்ச்சனையின்போது காட்டப்படும் கற்பூரதீபக் காட்சி ஞானப்பிரகாசத்தைக் குறிப்பதேயாம். இவ்வாறு திருவருள் பதிக்கப்பட்ட நிவேதனப் பொருட்களையே பிரசாதமாக வழங்குவர். அப்பிரசாதத்தை யாம் வாங்கி அணிவதினாலும், உட்கொள்வதனாலும் எம்மில் திருவருளைப் பதித்துக்கொள்கின்றோம் என்பது தத்துவ உண்மையாகும்.

6. சிவாசாரியரை வணங்கி வீபூதி பெறுதல் இறைவனிடமிருந்து திருவருளைப் பெறுதலுக்கு சமமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்


ஓம் மகாகணபதியே போற்றி

ஓம் விறுமநாதனே போற்றி

ஓம் சரவணபவனே போற்றி

ஓம் ஞானவைரவனே போற்றி

# மங்கலநாதம்



**சாவகச்சேரி நகரசபை**

**அருள்மிகு விறுமர் ஆலயம்**

**மணவாளக்கோலம்**

**09-12-2008**


தொகுப்பாசிரியர்:

குமாரசாமி சுமுகலிங்கம் சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பட்டியல்

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | "மங்கலநாதம்" |
| உரிமை | : | சாவகச்சேரி நகரசபை<br>அருள்மிகுவிறுமர் தேவஸ்தானம். |
| ஆசிரியர் | : | சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம். |
| காலம் | : | 09-12-2008 |
| வெளியீடு | : | சாவகச்சேரி நகரசபை<br>அருள்மிகு விறுமர் தேவஸ்தானம். |
| பிரதிகள் | : | 200 |
| பதிப்பு | : | ரம்யன் அச்சகம், மட்டுவில். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இதழ்களாக

1. ஆசிச்செய்திகள்/வாழ்த்துச் செய்திகள்
2. விநாயகர் திருப்பள்ளியெழுச்சி
3. கும்பாபிஷேகம் என்னும் பெரும் சாந்தியின் பயன்
4. கிராமிய வழிபாட்டில் அருள்தரும் விறுமர் பெருமான்
5. போர்த் தேங்காய் அடித்தல்
6. ஞானப்பிரகாச் முனிவர்
7. எமது வாழ்க்கையில் சமயம்
8. வாழவழிகாட்டும் தமிழாகமம்
9. சிவபூசை
10. மூர்த்திகளை அறிந்துகொள்வோம்
11. நாலடியார்
12. சிவராத்திரி
13. மாகேசுர பூசை
14. திருநீலகண்டப் பதிகம்
15. துயர் களையும் திரு ஆலவாய் திருப்பதிகம்
16. மலர்களும் பழங்களும்
17. கற்பூரதீப பலன்
18. மன அமைதிக்கு வழி ஓம் சாந்தி சாந்தி சாந்தி
19. பாவங்களும் ரோகங்களும்
20. அர்ச்சனைத் தட்டு
21. புனித தீர்த்தம் ஆடல்
22. சித்திரை பூரணை
23. ஆடி அமாவாசை
24. மாளயம்
25. மாசியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. நான்காம் பிறை
27. புண்ணியம் வளர துவாதசி
28. சூலவிரதம்
29. மானிடர்கள் அறிந்து கடைப்பிடித்து வாழ வழிகாட்டும் தகவல்கள்
30. இரண்டு விரதங்கள் சேர்ந்திருந்தால் அனுஷ்டிக்க வேண்டிய விரத விதி
31. சித்திரபுத்திரநாயனார் கதை
32. சித்திரபுத்திரனார் கணக்குப் பார்த்தல்
33. தைத்திரீய முனிவர் உபதேசம்
34. சூரன்தவம்
35. நல்வினை தீவினை
36. பிரேத ஜென்மம்
37. திருநீற்றை இடும்போது அனுசரிக்க வேண்டிய சில விதிகள்
38. நன்றியுரை
39. நூற்பயன்
40. மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# அருளாசிச் செய்தி



அடியார் பெருமக்களுக்கு!!

சாவகச்சேரிப் பிரதேசத்தில் நகரசபை வளாகத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சிபுரியும் விறுமர் என்கின்ற எம்பெருமானுக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை நிதர்சனப்படுத்திவைக்கும் பொருட்டு மங்கலநாதம் எனும் நூல் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பூவுலகில் அரிய பிறவியாகிய மானிடப் பிறவி எடுத்த நாம் இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டே ஆகும். இதனை நினைவுறுத்தும் பொருட்டு வீடுகள், கிராமங்கள், நகரங்கள் அனைத்திலும் ஆலயங்களை அமைத்தனர். இறைவனுடைய திருவடிவங்கள் பலவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் அமைந்திருக்கும் இறைவன் திருவுருவம் வேண்டுவார் வேண்டுவதை ஈய்கின்றவனாக விறுமர் என்கின்ற பெயருடன் எழுந்தருளியிருந்து பிரதேச மக்களின் வழிபாட்டிற்கு உரியதாக அமைந்துள்ளது. இன்று இவ்வாலயம் புதுப்பொலிவுடன் திருப்பணிகளைக்கொண்டு வளர்ச்சியடைந்திருப்பது இங்கு வாழும் மக்களுக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றது. இந்தப் பணியை நிறைவாகச் செய்திருக்கும் நகரசபை அனைத்து ஊழியர்களையும் வாழ்த்துகின்றோம். நகரசபை வளாகத்தில் இவ் ஆலயம் அமைந்திருப்பதனால் நகரசபைப் பணிகளுக்கு இறைவனுடைய ஆசி கிடைப்பதாகும். இன்று மங்கலநாதம் மலர் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையவும் மலராசிரியருக்கும், இப்புனிதப் பணியைச் செய்யும் அன்பு உள்ளங்களுக்கும் இறைவனுடைய ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

***ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்***

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மலரும் ஆசிகள்

பிரபஞ்சம் இயற்கையின் கூட்டு. இயற்கைகளே இறையாற்றல்களின் கருப்பை. இறையாற்றல்கள் மனிதனின் ஜீவசுருதி. இந்த ஜீவசுருதியே இன்றுவரை மனிதனை அழியாது பாதுகாக்கின்றது.

மனித ஜீவ ஆற்றலை உணர்த்துவது வழிபாடுகள். பலமார்க்கத்தில் இவையுண்டு இவ்வுலகில்.

இதயமாகிய இமயமலையில் உதித்தோடி நாகரிகம் சமைத்ததே இந்து. முறைசாராத, ஆகம முறைசார்ந்த வழிபாடுகள் என இரட்டை கண் கொண்டது இது.

நேரடியாக மக்களே இயற்கையில் இறைவனையுணர்ந்து இறையாகவே மாறி இறையாற்றலைச் சிறைபிடிக்க பக்தி வலை வீசும் சித்துக்கலை முறையே முறைசாரா வழிபாடுகள்.

இதில் ஐயனார் தொடங்கி பிடாரி ஈறாக பல தெய்வ வழிபாடுகள் உண்டு. விறுமர் என்பது அவற்றுள் ஒன்று.

வீரர்களின் விளைவால் விதைத்த வித்து இது. அட்ட வீரட்ட தலங்களில் அருள் அட்டகாசம் புரிந்த சிவனின் மரபுவழித் தொடர்ச்சி இது. சிவ வழிபாட்டின் பகுதியிது. காவல் செய்யும் வீரமனத்தின் வீரியம் இது. இன்றும் "விருமாண்டி" எனும் இனக்கூட்டம் இந்தியப் பாரம்பரியத்தில் இவ்வழிபாட்டின் மூலம்தான் தொன்மையைக் கட்டிக்காக்கிறது.

சாவகச்சேரி சிவன் வீதியில் பூத்த சிவலீலைத் தலமிதன் தனித்துவமும், அருட்தவமும் குன்றாது வளர, விறுமர் அருள்பெற்று அடியாரது ஆனந்த வாழ்வு, மங்கலநாதநூலோடு மலர்ந்து வாசனை வீச பெருமானின் இரட்டைப் பாதங்களுள் இதய மலரைச் சாற்றிச் சரணடைகின்றேன்.

***தியா.உமாசுதன் குருக்கள்***

பிரதமகுரு-அமிர்தபாசினி உடனுறை
சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் ஆலயம்
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

உலகமெல்லாம் உணர்ந்து உய்திபெற வேண்டுமென்ற பெருங்கருணையினால் எல்லையற்ற பரம்பொருள் எடுத்த வடிவங்கள் பல. இதனை உணரும் வாய்ப்பு பிறவிகளிலே மேம்பட்ட பிறவியாகிய மானிடப் பிறவி எடுத்த எமக்கே உரியதாகும்.

அந்தவகையில் சாவகச்சேரி நகரசபை அலுவலர்களுடன் நகரசபையின் செயலாளர் திருமதி.கு.ஆறுமுகம் அவர்களுடைய முக்கிய பங்களிப்புடன் நகரசபை வளாகத்தினுள் விறுமக் கடவுளின் ஆலயத்தை அமைத்து (22.11.2007) கார்த்திகை மாதம் 6ம் நாள் வியாழக்கிழமை காலை 7.52 - 10.00 மணி வரையுள்ள அச்சுவினி நட்சத்திரத்துடன் கூடிய சுபவேளையில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இவ்வாலயத்தின் ஓராண்டு நிறைவில் வெளியிடப்படும் மகாகும்பாபிஷேகச் சிறப்பு நூலான "மங்கலநாதம்" எனும் நூல் அமிர்தபாஷினி சமேத சந்திரசேகரப் பெருமானின் அருளுடன் விறுமக் கடவுளின் அருள் அகிலமெல்லாம் பரவ மக்கள் பயன்படுத்த வேண்டும் என அவர் திருப்பாதம் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

சாவகச்சேரி நகர்
அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத
சிவஆலய குரு "சிவப்பிரம்ப பூஷணம்"
**பிரம்மஸ்ரீ: செ.தெட்சணாமூர்த்தி சர்மா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசியுரை

அவனருளாலே அவன் தாள் வணங்கி வாழ்பவர் நாங்கள். ஆடுகின்றவன் ஆட்டுவிக்கின்றான். ஆடுகின்றோம். தில்லையில் திருநடனம் ஆடுகின்றான். ஐந்தொழில் புரிந்து ஆட்டுவிக்கின்றான். எம் கர்ம வினைக்கு ஏற்ப ஆடுகின்றோம். கர்ம வினையை போக்க இறை வழிபாடு முக்கியமாகும். வழிபாடு அதாவது வழியில்-படுதல் எனப்பொருள்படும்.

*"புண்ணியமாம் பாவம்போம் போன்நாட் செய்த அவை*
*மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்*
*ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோரும் சொல்லும்*
*தீதொழிய நன்மை செயல்"*

என்கின்றது வாக்குண்டாம் பாடல். புண்ணியம் என்றால் நல்ல செயல். பாவம் தீயசெயல். ஒருவர் செய்யும் செயலின் வடிவமே அவர்கள் அனுபவிக்கும் துன்ப இன்பங்கள். இதனையே எல்லா மதங்களும் போதிக்கின்றன எனலாம். எனவே நாம் நல்ல வழியில் வாழ வேண்டும். அந்த நல்ல வழிகள் எவைஎன உணர்ந்து அந்த நல்வழிகளில் ஒழுகுதலே வழிபாடு எனலாம்.

நன்னெறியைக் கடைப்பிடித்து இறைவன் அருளைப்பெற்று கர்ம மார்க்கம், ஞான மார்க்கம், பக்தி மார்க்கம் பால் ஒழுகினர். கர்ம மார்க்கமாவது வேதங்கள், ஆகமங்களில் கூறப்படும் சடங்குகள் அல்லது கிரியைகளைச் செய்தல். ஞான மார்க்கம் உபநிடதம் முதலிய தத்துவநூலைக் கற்று அறிவு முதிர்ச்சியால் இறைவன் அருள் கிடைத்து மனம் தெளிவுற்று மனத்தால் வழிபடுதல். மூன்றாவது பக்தி மார்க்கம். இடையறாத அன்பு செலுத்தி அவனது அருளைப் பெறுதல்.

பக்தி மார்க்கம் மானிடர்கள் எல்லோராலும் எளிதாகக் கடைப்பிடிக்க முடியும். பக்தி என்பது இறைவனிடத்து ஆழ்ந்த அன்புடனும், மனதை ஒருநிலைப்படுத்தி சிந்தனை சிதறாமல் போற்றித்துதித்து வணங்குதலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியானது பல நிலைகளைக் கொண்டது என்று பாகவத புராணம் விளக்குகின்றது. கடவுளது செயல்களைக் கேட்பது, அவரது திவ்விய நாமங்களையும், அவரையும் புகழ்ந்து பாடுதல். அவரது ஆற்றல்களையும் போற்றத் தகுந்த செயல்களையும் நினைவு கூருவது. அவரது சொரூபத்தை அமைத்து அவரின் திருப்பாதங்களில் மலரிட்டு பக்தியுடன் பூஜை செய்து திருவடிகளை வணங்குதல். தன்னையும், தனது உடமைகளையும் கடவுள் தந்ததாக எண்ணி அர்ப்பணித்தல். மானிட ஆன்மாக்கள் இவ்வுலகில் லயித்து (ஆன்மா + லயம்) ஆலயம் அமைத்தல் போன்றனவாகும்.

இந்தவகையில் சாவகச்சேரி நகரசபை வளவில் ஓர் ஆலயம் அமைத்து கும்பா அபிஷேகம் செய்வித்து அடியார்கள் வணங்க வசதிகள் செய்வித்து ஓர் ஆண்டு பூரத்தியாகிய வேளையில் மங்கலநாதம் நூல் வெளியிடுவது சாலச் சிறந்த சமூக சேவையும், சமய சேவையுமாகும். இப்புண்ணியச் செயலைச் செய்த நகரசபைச் செயலாளருக்கும், சக ஊழியர்கட்கும், அடியார்கட்கும் சாவகச்சேரி வாரிவனேஸ்வரரும், ஆதிசிவ வீரபத்திர சுவாமியும், ஸ்ரீமுத்துமாரி அம்மனும், விறுமர் பெருமானும் எல்லா ஐஸ்வரியங்களையும், வளங்களையும் கொடுக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து எனது ஆசிகளையும், நன்றிகளையும் கூறி வாழ்த்துவதுடன் நாட்டில், எமது நகரத்தில் அமைதியும், நீதியும், சாந்தியும், தர்மமும் நிலைபெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து ஆசியுரையை நிறைவுசெய்கின்றேன்.

“எல்லோரும் இன்புற்று வாழ்க”<br>- சுபமஸ்து -

“சிவசக்தி உபாசகர்” சோதிடர்<br>சிவஸ்ரீ சி.த.வீரபத்திரக் குருக்கள்<br>ஆதீனக்குரு முதல்வர்<br>சாவகச்சேரி ஆதிசிவ வீரபத்திரசுவாமி ஆலயம்<br>சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என்பது கச்சியப்ப சிவாச்சாரியாரின் அருள்வாக்காகும். இன்று உலக நாடுகள் எங்கிலும் சைவத் திருக்கோயில்களும் சைவ நிறுவனங்களும் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன.

மானிடப் பிறவி எடுத்த நாம் இறையருளைப் பெறுவதற்கு ஆலயங்களை அமைத்து வழிபாடுகளை ஆற்றிவருகின்றோம். இவ்வகையில் சாவகச்சேரி நகரசபை அலுவலர்களின் பங்களிப்புடன் யாவரும் ஒன்றிணைந்து நகரசபை அலுவலக வளாகத்தினுள் விறுமர் ஆலயம் அமைத்து 22.11.2007 அன்று பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்று ஓராண்டு நிறைவை முன்னிட்டு மகாகும்பாபிஷேக சிறப்பு நூலாக "மங்கலநாதம்" என்னும் நூல் வெளியிடுவதையிட்டு நான் மிகவும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சிறந்த கைங்கரியத்தை மேற்கொண்ட நகரசபை அலுவலர்களையும், அவர்களது பணிகளையும், இந்நகர மக்களையும் காத்தற்கடவுள் விறுமர் பெருமான் ஆசீர்வதிப்பாராக.

நன்றி.

**துர்க்காதேவி தேவஸ்தானம்**
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அருள் பெறுவோம்

ஆன்மீக வழி நெறியில் மனிதன் தன்னுடைய அடிப்படை எண்ணங்களை நல்லவைகளாக உருவாக்கிக்கொள்ளவேண்டும். தன் எண்ணத்தின் உணர்வுகளையும் அதன் செயற்பாடுகளையும் மிகச் சிறப்பாக தனக்குள் விளங்க முயற்சி செய்திட வேண்டும். பிறகு அவைகளை அவன் தனது நம்பிக்கையின் கருத்தாகக்கொண்டு உலகில் செயற்பட்டு விளங்கி வருதல் வேண்டும். இது உத்தமம்.

"இறைசக்தி நமக்கு எல்லா நலன்களையும் அருளிட வேண்டும். பிற உயிர்களும் இன்புற்று இருக்க வேண்டும்." என்று பிரார்த்தனை செய்வது காலமாகிய தர்மம் நிச்சயம் மனிதனுக்கு உதவி செய்திடும். இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை, உரிமையை, நம்பிக்கையை இறை வடிவங்கள், நாமங்கள், சிவசின்னங்கள் சிறப்பாக விடையளிக்கின்றது.

சிவனுடைய அம்சமாக விளங்கி அருள்பாலிக்கும் தெய்வம் விறுமர். அப்படியான அருள் தெய்வத்துக்கு நகரசபை வளாகத்துள் திருக்கோயில் அமைத்து கும்பாபிஷேகம் செய்த பணி போற்றுதற்குரியது. இன்று சைவ பணியின் உயர்வை சிந்தித்து சாவகச்சேரி நகரசபை செயலாளர், அலுவலர்கள் அனைவரது பெருமுயற்சியாலும் கும்பாபிஷேக சிறப்புமலராக மங்கலநாதம் எனும் நூல் வெளிவருவது சிறப்பு அம்சமாகும்.

"அனைவரையும் என்றென்றும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்."

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**கலாநிதி கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் J.P.**
பிரதமகுரு -மருதடி - வீரகத்திவிநாயகர்
விளைவேலி ஆதீனம்
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்த்துரை

சாவகச்சேரி நகரசபை வளாகத்துள் நகரசபைச் செயலாளரினதும், அங்கு பணிபுரியும் அலுவலர்களினதும் முயற்சியினால் விறுமர் பெருமானுக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்வது ஓராண்டு நிறைவை எய்தியுள்ளது.

காத்தற் கடவுளான விறுமர் பெருமான் நகரசபையைக் காவல் புரிவது மட்டுமன்றி அங்கு பணிபுரியும் சகல அலுவலர்களையும் நகர மக்களையும் காப்பாற்றி, அவர்களது வாழ்வில் எதிர்நோக்கும் துன்பங்களை நீக்கி யாவரது உயர்விற்கும் அருட்பார்வை கிடைக்க விறுமரை வணங்கி அவர் பாதங்களைப் பணிகின்றேன்.

சாவகச்சேரி நகரசபையால் வெளியிடப்படும் கும்பாபிஷேக சிறப்பு மலரான "மங்கலநாதம்" என்னும் நூலுக்கு வாழ்த்துரை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

"வாழ்க வையகம்"
"வளர்க வளமுடன்"

**திருமதி.மதுமதி வசந்தகுமார்**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசியுரை

உலகில் சைவசமயத்தவர் யாவரும் தம் மனதிற்கு ஏற்பவும், காலத்திற்கேற்பவும் ஆண்டவனைப் பல உருவங்களில் வழிபட்டு தமது வாழ்க்கையிலிருக்கக்கூடிய எல்லாவித கஸ்டங்களையும் நீக்குதற்பொருட்டு நல்லருள்பெற்று இறை நம்பிக்கையுடன் வாழ்கிறார்கள்.

அதுபோல் பண்டைய கிராம மக்கள் கிராமியத் தெய்வங்களை வழிபட்டு அதனால் சிறப்புற்றுள்ளார்கள்.

எமது நகரசபை வளாகத்துள் விறுமர் ஆலயம் அமைத்து வழிபடவேண்டுமென்று இறைவனின் அனுக்கிரகம் கிடைத்ததன்பேரில் இதை அவரின் அற்புத அருள்வடிவமாக நான் கருதி ஆலயம் அமைக்கத் தீர்மானித்து அப்பெருமானின் அருட்கடாட்சத்தால் எதுவித இடர்பாடின்றியும் அமைக்கப்பெற்று அதன்பால் பிள்ளையார், விறுமர், முருகன் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு 22.11.2007ல் கும்பாபிஷேக வைபவமும் சிறப்பாக நடைபெற்றது.

எமது நகரசபை அலுவலர்களும், இந்நகர மக்களும் இத்தெய்வங்களை வணங்கி அருள்பெறவும், எமது நகரசபையும், நகரசபையின் பணிகளும் மேலும் சிறப்புறவும் எமது விறுமர் காத்தற்கடவுளாக நகரசபை வளாகத்தில் வீற்றிருந்து அருள்புரிந்துகொண்டிருப்பார் என்பது எனது திடமான நம்பிக்கை ஆகும்.

இவ்வாலயம் சிறியதாயினும் விறுமர் கடவுளின் பேரருளையும், அவரின் மகிமையையும் எமது அலுவலர்கள் யாவரும் அறிந்திருப்பார்கள். செய்ய முடியாதெனக் கருதும் விடயங்களைக்கூட செய்வதற்கு விறுமர் பெருமான் பெருமனதுடன் எமக்கு அருள்சுரந்தவண்ணமுள்ளார். அலுவலர்களின் ஒத்துழைப்புடன் எமது பெருமுயற்சியின் காரணமாக புனரமைப்புச் செய்யப்பட்ட இவ்வாலயத்தின் ஓராண்டு பூர்த்தி தினமான 09.12.2008ம் திகதி மணவாளக்கோல விழா சிறப்பாக நடைபெற விறுமர் அருள்பாலிப்பாராக.

மேலும் விறுமரின் மணி ஓசையுடன் மங்கலநாத ஓசையும் காற்றோடு கலந்து நகரசபை அலுவலர்களினதும், இந்நகர மக்களினதும் செவிகளில் ரீங்காரமாக ஒலிக்கும்போது மனம் அமைதியும், ஆறுதலும் அடையவும், அவர்களின் வாழ்வு வளம் பெறவும், உத்தியோகத்தர்களுக்கு நிலையான மகிழ்ச்சிகரமான வாழ்வினையும், நிரந்தர சமாதானத்தினையும் வழங்கவேண்டி விறுமரின் பொற்பாதங்களைப் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

**திருமதி.கு.ஆறுமுகம்,**
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசியுரை

ஈழத்திருநாட்டிலே காவல் தெய்வ வழிபாட்டிற்கு தனித்துவமான ஓர் இடம் உண்டு. எங்குபார்த்தாலும் சிறிதோ பெரிதோ காவல் தெய்வங்களின் ஆலயங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அந்தவகையில் தென்மராட்சிப்பதியின் சாவகச்சேரிப் பிரதேசத்திலே நகரசபை வளாகத்தில் வீற்றிருந்து யாவருக்கும் அருள்பாலித்து வருகின்றார் விறுமர் பெருமான்.

இறை நம்பிக்கையானது எம்மை வாழ்க்கையிலே ஓர் பற்றுடனும், ஆன்ம ஈடேற்றத்துடனும் வாழ வழி சமைக்கின்றது. விறுமர் பெருமானின் பக்த அடியார்கள் தம்மை அர்ப்பணித்து பூசை வழிபாடுகள் செய்துவருகின்றமை போற்றுதற்குரியதாகும்.

குறிப்பாக நகரசபை அலுவலர் குழாம் விறுமர் பெருமானுக்கு ஆலயம் அமைத்து அரும்பணியாற்றி, அன்ன அபிஷேகங்கள் ஆற்றி கும்பாபிஷேக சிறப்பு மலரான "மங்கலநாதம்" என்னும் நூலை வெளியிடுவது ஓர் சிறந்த கைங்கரியமாகும்.

சின்னஞ்சிறார்களுக்கும், இளம் தலைமுறையினருக்கும் இறை சக்தியின் தன்மையையும், ஆன்மீக வாழ்க்கைத் தத்துவங்களையும் புரியவைப்பது அவசியமாகும். இதற்கு இவ்வாறு வரலாற்று ஆவணங்களாக அமையும் மலர்களே உறுதுணையாக இருக்கின்றன.

எனவே மலரவிருக்கும் மங்கலநாதம் ஆன்மீக நறுமணத்துடனும், எதிர்கால நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் நல்லதோர் ஒளிவிளக்காகவும் அமைந்து வெளிவர ஆசிகூறி விறுமர் பெருமானை வணங்கி அமைகின்றேன்.

இம்மலரைத் தொகுத்தவருக்கும், சிறப்புற வெளியிட உதவிய அனைவர்க்கும் ஆசிகளும், பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

தொடரும் இப்பணிகள் தொடர்ந்தே சிறக்க நல்வாழ்த்துக்கள்!!

திருமதி.அ.சாந்தசீலன்.
உதவிப் பிரதேச செயலர்,
தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

"இந்துவாக வாழ்வோம் இந்து தர்மம் காப்போம்"

# தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றத்தின்

# வாழ்த்துச் செய்தி

"ஓம் அமிர்தபாசனி சமேத சந்திரசேகர வாரிவனநாத சுவாமியே போற்றி போற்றி"

சைவசமயத்தின் முடிந்த முடிவான கொள்கையே சைவ சித்தாந்தம் எனப்படும். சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருட்கள் மூன்று. பதி, பசு, பாசம் என்பனவாம். பசுவின் குறிக்கோள் பாசத்திலிருந்து விடுபட்டு பதியினை உணர்ந்து அழுந்தி இன்பம் துய்த்தல் ஆகும். இதுவே முத்தி ஆகும். முத்தி என்பது வீடுபேறு என்று கூறுவர். வீடுபேறு என்பது விடுதல், பெறுதல் என்ற இரு சொற்களின் புணர்ச்சியாகும். விடுதல் பாசத்தை விடுதல், பெறுதல் சிவத்தைப் பெறுதல். உயிர் சிவனை உணர்ந்து அழுந்தி அனுபவிக்கும் ஆனந்த நிலையே முத்தி எனப்படும்.

இப்பேறடையவேண்டிய வழியை சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் அம்மா திருமதி. கு. ஆறுமுகம் அவர்களும் சக உத்தியோகத்தர்களும் தமக்கும் நாட்டு மக்களுக்கும் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் அருள்மொழி வாக்குக்கு அமைய தெய்வீக நிலையமாக நகரசபை வளாகத்தை அமைத்துள்ளனர்.

இதனை வெளிப்படுத்தி உட்பொருளை உணரவைக்க புராணிகர், சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் ஆசிரியர் அவர்கள் தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் அனுசரணையுடன் பாடசாலைகளில், ஆலயங்களில் சமய சொற்பொழிவு, சைவசமய தீட்சை, நூல்வெளியீடுகள் செய்துவரும் பணி சிவப்பணியாகும்.

இப்பணியுடன் நகரசபையினர் விறுமர்மேல்வைத்த அதீத அன்பு இன்று விறுமர் பெயரால் "மங்கலநாதம்" என்னும் அரிய சிவமயமான நூல் வெளிக்கொணர்வது விறுமர் பெருமான் திருவருள் என்றால் மிகையாகாது.

"கல்லேன் மலரேன் கனிந்த அன்பே பூசை என்ற
நல்லோர் பொல்லாவெனையும் நாடுவரோ பைங்கிளியே"

தாயுமானவர் –பைங்கிளிக் கண்ணி (14)

கனிந்த அன்பினாலேயே விறுமர் பெருமான் பூசைகள் நடைபெறுவது எங்கள் கண்முன் காணமுடிகின்றது. சிவப்பணி, திருப்பணி, அருட்பணி என்றுணர்ந்து இக்கைங்கரியங்களில் ஈடுபட்ட அனைத்து நல் உள்ளங்கட்கும் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து நல்வாழ்த்துக்களைக் கூறுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றது எமது மன்றம்.

"பொய்யுணர் வாயிந்தப் புழுக்கூட்டை காத்திருந்தேன்
உய்யும் வகையும் உளதோ பராபரமே"

தாயுமானவா - பராபரக் கண்ணி (389)

திரு. M.C. குலசிங்கம்

தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் திருப்பள்ளி எழுச்சி

இராகம்: பூபாளம். தாளம்: ஆதி

திருநிறைச்செல்வா செழுங்குயில்பாடித்
திகழ்வன வானிடை எங்கும்
உருநிறை காகம் ஒண்சிறை யடித்திங்
கொலிதரக் கரைந்தக மகிழும்
கருநிறக் கங்குல் விடிந்தது பகலோன்
கரங்களும் தடவின உலகில்
பருணிதர் போற்றும் ஐங்கரச் செல்வா
பள்ளியெழுந் தருளாயே

இன்னமுந் துயில்வாய் ஈதென்ன உறக்கம்
எழுந்தருள் எழுந்தருள் ஐயா
கன்னலும் தேனும் கட்டியும் பாலும்
கடலையும் அப்பமும் கொணர்ந்தோம்
நென்னலே இரவில் வந்து காத்திருந்தோம்
நெடும் புளைக்கைக் கஜமுகனே
பன்னரும் புகழ்சேர் பரம்பொருட் செல்வா
பள்ளியெழுந்தருளாயே

பயன்:

1. நினைத்தனவெல்லாம் நிறைவேற வேண்டுமெனில் வினைத்தழையெல்லாம் வேரற வேண்டுமெனில் திணைத்தினை அளவேனும் தேவன் கணபதியை நினைத்திடலே போதும் நிச்சயம் கைகூடும்

2. அற்புதக் கீர்த்தி வேண்டின் ஆனந்த வாழ்க்கை வேண்டின் நற்பொருள் குவிதல் வேண்டின் நலமெலாம் பெருக வேண்டின் கற்பக மூர்த்தி தெய்வக் களஞ்சியத்திருக்கை சென்று பொற்பதம் பணிந்து பாரீர் பொய்யிலைக் கண்ட உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முகவுரை

"ஓம் ஸ்ரீ வெள்ளிப் பள்ளத்து வீரகத்தி விநாயகனே போற்றி" என்றும் என்னை வழிநடாத்தும் வீரகத்தி விநாயகனையும், மாதா, பிதா, குரு, குலதெய்வங்களை என் சிரமேற்கொள்கின்றேன்.

தென்மராட்சி சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் ஒரு தெய்வீக சாந்நித்தியம் உறைய அரும்பணியாற்றும் அனைவரும் நேரிய சிந்தனையாளர்களாவார்கள். இதனை உணர்த்தவே எம் சமய முறையில் (ஆகமங்களின் வழியே) இராசகோபுரம், கொடிமரம் என்பன வாசலில் முதற்பார்வையில் நிமிர்ந்து நேரிய வடிவாக அமைய வேண்டும் என்ற விதியை இறைவனே வேதாகமங்களினூடாக உணர்த்தியுள்ளான் என்பது சிந்தித்து தெளிவுபெறவேண்டிய விடயமாகும். அஞ்சுவயலாதியையோது" என்ற ஔவையார் வாக்குக்கு அமைவாக ஆதியையோதி வழிபாடு செய்தவர்கள் இன்று ஆதியை தொழ வழிகாட்டிகளாக அமைந்துள்ளனர். சாவகச்சேரி நகரசபை செயலாளர் அம்மா திருமதி கு. ஆறுமுகம் அவர்களும் அவர் தம் குடும்பமும் தெய்வீக சேவை உணர்வு இங்கு காணமுடிகிறது. அதன் வழியாக நூலகர் அம்மா திருமதி. க. கணேசானந்தம், தம்பிமார் அ.கேசவலிங்கம், வே.யோகராசா, விறுமர் ஆலய பொருளாளர் அம்மா திருமதி க. கணேசலிங்கம் அவர்களுடன் நகரசபை அலுவலகப் பணியாளர்கள், வெளிக்களப்பணியாளர்கள் நகரமக்கள் அனைவரையும் என்மனக்கண் முன் பார்க்கின்றேன். இவர்கள் அனைவரும் தென்மராட்சி கந்தபுராண கலாசாரம் கைக்கொண்ட பூமி என்பதனை உணரச்செய்துள்ளனர்.

இந்நூல் வெளிவர ஒப்புநோக்குதலுக்கு உதவி செய்த செல்வி பா.சுதர்சினி அறநெறிப் பாடசாலை ஆசிரியை, செல்வன் சி. சிவநிரோஜன் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் ஆகியோரையும் மனதில் நிலைநிறுத்துகின்றேன்.

கடவுள்தான் உலகில் பெரிய நூதனம். சண்டையும் சமாதானமும், கூடுதலும் பிரிதலும், பேச்சுக்கள் மௌனங்கள், ஆணும் பெண்ணும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் வன்பும், இன்பமும் துன்பமும் இவை யாவும் அதுவே.

வேத சாத்திரங்கள் எல்லாம் எண்ணிலாக்கலாம். எண்ணிலாவகையாக கூறியதும், இன்னும் எண்ணிலாக்காலம் கூறப்போவது அதுவே.

ஒன்று தான்பலவாயது. உபதேசிப்பவராகவும், உபதேசங் கேட்பவராகவும், சண்டை செய்பவராகவும், சமாதானம் செய்பவராகவும், காமாதிகுணங்களாகவும் இவற்றை வெல்லும் இயமநியமாதி சாதனைகளாகவும் வியாபித்திருப்பதும் அதுவே. நானும் அதுதான், நீயும் அதுதான். வேண்டாம் என்பதும் வேண்டுமென்பதும் அதுவே.

எல்லாமாகவும், அல்லவுமாகவும் விளங்கும் அதுவே உலகில் என்றுமுளது. ஏனையவெல்லாம் அதனின்றும் தோன்றி அதனினில் நிலைத்து அதனில் ஒடுங்குபவைகளேயாகும். அதற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. அஃதல்லாதவஸ்து வேறெதுவுமில்லை. அஃதில்லாத இடமும் இல்லை.

இவ்வகைப்படவே விறுமர் என்னும் நாமம் கொண்டவர் மேல் கொண்ட அன்பும் விறுமர் உங்கள் மேல்கொண்ட அன்பும் இன்று அதிமுக்கிய வாழ்வியல் அம்சங்களை உள்ளடக்கிய "மங்கலநாதம்" என்னும் நூலை வெளியீடு செய்யும் பாக்கியத்தை நீங்கள் பெறுகிறீர்கள். இந்நூல்வழி நல்லுணர்வு பெறுவதும் அவரவர் நியதியை பொறுத்து அமைவதாகும். இந்நூல் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் என்ற நம்பிக்கையுடன், அனைத்து உள்ளங்களும் நல்வாழ்வு வாழவாழ்த்தி குரு பாதம் பணிந்து அமைகின்றேன்.

*நின்றுமிருந்துங் கிடந்து நடந்து நினை*
*என்றும் சிவன்றாளிணை*

நன்றி.

"பொய் சொல்லாதே" புறங்கூறாதே"

ஓம் தத்சத் ஓம்.

*சைவப்புலவர்*
**குமாரசாமி சுமுகலிங்கம் சாமி**
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக நிகழ்வின்போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள்




**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)**

திரு. கு. செல்வரட்ணம், திருமதி. க. கணேசலிங்கம், திருமதி. கு. ஆறுமுகம், செல்வி. வீ. சிவக்கொழுந்து, திரு. ச. சுப்பையா.

**நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)**

திருமதி. இ. பரமசிவம், திரு. ந. சுந்தரலிங்கம், திரு. ஐ கிருஸ்ணன், திரு. மா. தயாகுமாரன், திரு. நா. நல்லதம்பி, திரு. கா. சிறீரஞ்சன், திரு. வி. பாசுப்பிரமணியம், திருமதி. க. கணேசானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம் என்னும் பெரும் சாந்தியின் பயன்

நாம் தெரிந்தோ - தெரியாமலோ அன்றாடம் பல தவறுகளைச் செய்கின்றோம். மனம் - வாக்கு - காயம் (மனம்-சொல்-உடல்) ஆகியவற்றால் செய்யும் தீமைகளுக்கு சாந்தி - சாந்திராயணம் கிரிகரம் முதலிய பிராயச்சித்தம் செய்துகொள்வது ஒரு வழி. மற்றது செய்த தீவினைகளின் தீர்வைக் குறித்து அனுட்டிக்கும் பிராயச்சித்தமாக மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைத் தரிசித்தல். இதில் ஏதேனும் கைங்கரியம் எனப்படும் திருப்பணி செய்தல் ஆகியவைகளே தீர்வுகள் ஆகும். நாம் செய்த தீவினைகளுக்கு நாம் செய்யும் நல்வினைகளே தீர்வு. இக்கருத்தை சிவப்பிரகாசம் என்னும் நூல் விளக்குகிறது.

தீவினைகளுக்கெல்லாம் தலையாயது சில அபராதம். நாள்தோறும் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்யவேண்டும். இது இன்றைய காலகட்டத்தில் நம்மால் செய்ய முடிவதில்லை. அப்படியே சென்றாலும் அமைதியற்ற மனநிலையால் ஆலயத்தில் தெரிந்தோ, தெரியாமலோ சில தவறுகள் செய்கின்றோம். இது கூட சிவ அபராதமே. இவற்றை நீக்கிக்கொள்ள பிராயச்சித்தங்களை - சாந்திகளைச் செய்துகொள்ளவும் நமது முன்னோர்கள் வழிகாட்டியுள்ளனர்.

ஒருவன் தனது வாழ்க்கயில் தன்னையறியாமல் தினந்தோறும் செய்த தீவினைகள் நாடோறும் செய்யும் சிவாலய தரிசனத்தால் நீங்கும். நாள்தோறும் சிவதரிசனம் செய்யாமல் பெரும் தீவினைகள் உற்சவ தரிசனத்தால் தீரும். அந்த உற்சவ தரிசனத்தில் நேரும் பிழைகளும், தீவினைகளும் மகா கும்பாபிஷேக தரிசனத்தால் நீங்கும்.

ஆகையால்தான் எல்லாவகையாலும் தீராத சிவாபராதங்களைத் தீர்க்கும் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி என்று சைவ நூல் உணர்ந்தோர் கூறுவர். இதனை திருஞானசம்பந்த சுவாமிகள் தமது தமிழ்மறையில் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தியென்று திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமயிலைத் தேவாரம்:**

*உரிஞ்சாய வாழ்க்கை யமனுடையைப்போக்கும்*
*இருஞ்சாக்கி யாகளெடுத்து ரைப்ப நாட்டில்*
*கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர் மமர்ந்தான்*
*பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.*

ஆதலால் கும்பாபிஷேக தரிசன பலன் அளவிடற்கரியது. போக மோக்ஷங்களின்றி பேரானந்த மோக்ஷத்தையே கொடுக்கவல்லது. இத்தகு சிறப்பு மிகுந்த கும்பாபிஷேகத்தை தரிசித்து தீவினைகள் நீங்கி இகத்திற்கு வேண்டிய புத்திரப்பேற்றையும் - பரத்திற்கு வேண்டிய சிவப்பேற்றையும் பெறுவோமாக.

## கடவுளுக்குப் பிரியமான நிவேதனப் பொருட்கள்

| | | |
|---|---|---|
| **விநாயகருக்கு** | - | கொழுக்கட்டை, சர்க்கரைப் பொங்கல், கொண்டைக் கடலை. |
| **சிவபெருமானுக்கு** | - | வெண் பொங்கல், வடை, திங்கட்கிழமைகளில் தோசை. |
| **பார்வதிக்கு** | - | சர்க்கரைப் பொங்கல், உழுத்தம் வடை |
| **முருகனுக்கு** | - | சர்க்கரைப் பொங்கல், புளியோதரை |
| **விஷ்ணுவுக்கு** | - | வெண் பொங்கல், இலட்டு, தோசை, புளியோதரை |
| **துர்க்கைக்கு** | - | பாயசம், சர்க்கரைப் பொங்கல் |
| **ஆஞ்சநேயர்** | - | மிளகுவடை, தயிர்சாதம் |
| **நந்திகேஸ்வரர்** | - | காப்பரிசி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய வழிபாட்டில் அருள்தரும் விறுமர் பெருமான்

*நற்குஞ்சரக் கன்று நண்ணிற் கலைஞானம்*
*கற்குஞ்சரக் கன்று காண்*

இலங்கைத் திருநாட்டில் கிராமிய வழிபாடுகள் தொன்றுதொட்டு முக்கிய வழிபாடாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இறை அருளைப் பெறுவது ஓர் அமைதியான சூழலில் என்பதற்கமைய கிராமிய வழிபாடானது ஓர் அமைதியான அருள்பெறும் வழிபாடாகும். கிராமிய வழிபாட்டில் தெய்வங்களை மூன்று பக்கமும் சுற்றியடைக்கப்பட்ட சிறு கொல்லைகளிலும், சிறிய கட்டடங்களிலும், மரநிழல்களிலும் தத்தமது வசதிகளுக்கேற்ப கல்லினையோ அல்லது சூலத்தினையோ, கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிலைகளையோ வைத்து வழிபாடாற்றுவர். மக்களாகப் பிறந்தவர்கள் தத்தம் சமய வழிபாட்டினை ஒருநாளும் கைவிடமாட்டார்கள். இக்கொள்கையினை கடைப்பிடித்துத்தான் கிராமங்கள், நகரங்கள் தோறும் கோயிலமைத்து வழிபாடாற்றுகிறார்கள். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனும் அருள்மொழிக்கிணங்க புண்ணியத்தைப் பெறவேண்டுமாயின் கோயிலமைத்து வழிபாடாற்ற வேண்டும்.

எங்கும் நிறைந்த பரம்பொருளை பக்தர்கள் தமது பக்குவ நிலைக்கும், மனவிருப்புக்கேற்றமுறையில்தான் இன்று வடமராட்சி, தென்மராட்சி எங்கும் கோயிலமைத்து வழிபாடாற்றுகிறார்கள்.

அடுத்து விறுமனாரின் அவதாரம் எப்படி ஆரம்பித்ததென ஆராயும்போது சிவனின் படைப்புக்களில் உருவான ஒரு ஆண் தெய்வமென நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கிறது. சிவ அவதாரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்தெய்வங்கள் பின்வருமாறு -

1. ஐயனார்
2. காத்தவராயன்
3. பெரியதம்பிரான்
4. அண்ணமார்
5. நரசிங்கர்
6. வீரபத்திரர்
7. வயிரவர்
8. முனியப்பர்
9. கல்லறிமாடன்
10. சுடலைமாடன்
11. விறுமனார்
12. அனுமான்
13. பூதராயர்
14. வதனமார்
15. பிறத்தி அங்கிலி
16. வால்ராஜா
17. கம்பிமுனி
18. மாடாசாமி
19. மதுரைவீரன்

ஐயனார் வழிபாடு எல்லா இடங்களிலும் அதிகமாக உண்டு. இவ்வழிபாட்டினைப் பற்றி சபாரத்தினம் ஆசிரியர் அவர்கள் (முன்னாள் சா/இந்துக்கல்லூரி ஆசிரியர்) நூல்வடிவில் வெளியிட்டுள்ளார். இதேபோன்று இவ் ஆண் தெய்வங்களிலொன்றான விறுமர் தெய்வத்தின் மகிமையையும் அவரின் அருள்பாலிப்பையும் தென்மராட்சியின் சாவகச்சேரி, பகுதியிலும், வடமாராட்சி, தென்மராட்சியின் கச்சாய் கிராமத்திலும் காணக்கூடியதாகவுள்ளது.

கச்சாய் கிராமத்திலுள்ள விறுமர் ஆலயத்தில் அவரின் பரிவாரங்களாக அனுமான், காத்தவராயர் போன்ற ஆண் தெய்வங்களும் வைத்து வழிபாடாற்றுகிறார்கள். இக்கிராமிய தெய்வங்களின் வழிபாட்டில் வருடமொருமுறை பொங்கல் நடைபெறும். இப்பொங்கலின் போது சில நடைமுறைகளுண்டு.

1. மடைப்பண்டம் எடுத்தல்.
2. மடை பரவுதல்.
3. தூளி பிடித்தல்.
4. பரிகலம் அமைத்தல்
5. வழிவிடுதல் (வழிவெட்டுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய சடங்குகளை நடைமுறைப்படுத்தி சித்திரை - ஆவணி மாதங்களில் பொங்கல் செய்து வழிபடுவர்.

இவ்வாறாக விறுமர் பெருமான் மீது கொண்ட நம்பிக்கையின் பிரதிபலனாக சாவகச்சேரி நகரசபை வளாகத்தினுள் ஓர் விறுமர் ஆலயம் அமைக்கப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்று ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு கும்பாபிஷேக சிறப்பு மலராக வெளியிடப்படும் “மாங்கலநாதம்” எனும் நூலின் மூலம் தென்மராட்சி மக்களும், அகிலமுமே ஆன்ம ஈடேற்றம் பெறவேண்டும்.

இத்தெய்வத்தின் தெய்வீகத் தன்மையை நாம் உணர்ந்து எந்நாளும் இருகரம் கூப்பி அருள்பெற்று இன்புறுவோமாக.

நாட்டில் சாந்தி, சமாதானம் மலர, மங்கலநாதம் அருளும் விறுமர் பெருமான் அருள்பாலிப்பாராக.

பொங்கும் மங்களம் எங்கும் ஓங்குக
மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

**திருமதி.க.கணேசானந்தம்**
பிரதம நூலகர்,
பொது நூலகம்,
நகரசபை, சாவகச்சேரி.

## எந்தெந்தக் கடவுள் என்னென்ன பிரியப்படுவார்கள் எனும் விளக்கம்

| | | |
|---|---|---|
| அபிஷேகப் பிரியர் | - | சிவன் |
| அலங்காரப் பிரியர் | - | மகா விஷ்ணு |
| நமஸ்காரப் பிரியர் | - | சூரிய பகவான் |
| நைவேத்தியப் பிரியர் | - | விநாயகர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ வெள்ளிப்பள்ளத்து
வீரகத்தி விநாயகா போற்றி போற்றி

# போர்த் தேங்காய் அடித்தல்

சித்திரை புதுவருடப் பிறப்பின் ஆரம்பத்தில் விநாயகரை வணங்குவதற்காக போர்த்தேங்காய் அடித்தல் பாரம்பரிய விளையாட்டுப்போன்ற நிகழ்ச்சியாகும். பிள்ளையாருக்கு தேங்காயுடைத்தல் என்பது எல்லா நல்ல விடயங்களின் முதல் நிகழ்வாக அமைவது சைவ பாரம்பரியமாகும்.

சித்திரை மாதம் முழுவதும் கோயில்கள், வித்தியாலயங்கள், சமயநிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றில் ஆதிகாலங்களில் வருடம் பிறந்து முதல் நடைபெறும் நிகழ்வுகளில் ஆரம்ப நிகழ்வு இப்போர்த் தேங்காய் அடித்தல் நிகழ்ச்சியாகும். இது விளையாடும் போதும் பிள்ளையாருக்கு முதல் வணக்கம் நடைபெற வேண்டும் என்பது உணரப்பட வேண்டியதாகும்.

மகிழ்ச்சியான விடயங்களின் வெளிப்பாடுகள் மங்கலகரமாக அமைவது என்பதன் எடுத்துக்காட்டு, பாரம்பரிய விளையாட்டுக்களிலும் போர்த்தேங்காய் அடித்தல் முன்னுரிமை பெற்றிருக்க வேண்டும். மனிதனின் வீர தீர பராக்கிரமச் செயலை எடுத்தியம்புவதுடன் தெய்வ வணக்கத்தையும் நினைவில் நிலைநிறுத்துகின்றது.

பாடசாலைக்கு சித்திரை புதுவருடம் தொடங்கி வரும் முதல் நாள் மாணவர்கள் கைவிஷேசம், தேங்காய் என்னும் மங்கலப் பொருட்களை தமது கைகளில் ஏந்தி வருவார்கள். வகுப்பு தேவார ஆராதனைகள் நிறைவுபெற்றதும் பாடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் வகுப்புவகுப்பாக குழுக்களாக தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தமது வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரை அழைத்து கைவிஷேசம் கொடுப்பர். கற்பூரம் கொழுத்தி ஒரு மாணவர் வைக்கும் தேங்காயை மற்ற மாணவர்கள் கொண்டுவரும் தேங்காயால் அடித்து உடைத்து விளையாடுவார்கள். இவ்வாறு ஆரம்ப காலத்தில் நடைபெற்று புதுவருட பாடம் ஆரம்ப நாள் அமைவது இன்றும் கிராமிய பாடசாலைகளில் கைக்கொள்கின்றனர்.

காலமாற்றங்களினால் இவ்வழக்கம் அருகிவருகின்றது. இப்போது பந்தடித்தல், வண்டிச்சவாரி என்பன இடம்பெறுகின்றது.

எங்கள் வாழ்வு மங்கலகரமாக அமைய இவ்விளையாட்டு இறைவனை வணங்கி கடமைகளை ஆரம்பிப்பது என்னும் சமய பாரம்பரியத்தை உணர்த்துகின்றது. மீளவும் ஆரம்பிப்பது கல்விச் சமூகத்தின், அனைத்துச் சமூகத்தினதும் தலையாய கடமையாகும்.

''மறைந்து'' - மறந்துபோன இவ்விளையாட்டை மறுபடியும் மறுமலர்ச்சி பெறச் செய்தல் நன்மையுடையதாகும்''

''கடவுளையும் அவரை வழிபடும் நெறியையும் அதனால் எய்தும் பயனையும், உமக்குப் போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியார் ஒருவரே உம் உயிர்த்துணை. ஆதலால் அவரையும் அவர் செயல்களையும் மறத்தலாகாது.''

## ஆலய வீதியை வலம் வருதல்

1. பிரமச்சாரிகள் – வலமாகவும்

2. கிருகஸ்தர்கள், 3. வானப்பிரஸ்தர்கள் – இருவரும் வலம், இடம் ஆகிய இருமுறையாகவும்

4. சந்நியாசிகள் – இடமாக மட்டும் பிரதட்சணம் செய்யக்கடவர்.

பிரதட்சணம் செய்யும்போது உட்பிரகாரத்தில் உள்ள பலிபீடம், இடபத்தையும் சேர்த்து செய்தல் வேண்டும். (குறுக்காகப் போதல்:- பலிபீடத்தின் மூலமூர்த்தி இடையே குறுக்காகப் போவது மாபெரும் சிவத்துரோகம் ஆகும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச முனிவர்

உயிர்க்கொலை பஞ்சமாபாதகங்களிற் கொடியது. பசுக்கொலை சைவசமயத்திற்கு பெரும் பாதகமாகக் கருதப்படுவது. பசுக்கொலைக்கு உடந்தையாக இருத்தலும் பெரும் பாதகச் செயலென உணர்ந்து தம் நாட்டையும் சுற்றத்தையும் நீத்துப் பிற நாடு சென்றவர் ஞானப்பிரகாசர்.

இற்றைக்கு நானூறு வருடங்களின் முன் யாழ்ப்பாணத்தில் பறங்கியரின் ஆட்சி நிலவிய காலத்திலே திருநெல்வேலியில் ஞானப்பிரகாச முனிவர் தோன்றினார். இவர் வேளாள குலத்தவரான காராளப்பிள்ளைக்கு அருமைக் குமாரனாகத் தோன்றினார். இளம் பராயத்திலே சைவ நூல்களைக் கற்று சிவநெறியில் ஒழுகிவந்தார். வடமொழி கற்கப் பெருவிருப்பங்கொண்டு அது நிறைவேறற்பொருட்டு பராசக்தியை வழிபட்டு வந்தார்.

தக்க பராயத்தில் தம் குலத்தில் ஒழுக்கத்திற் சிறந்த பெண்ணொருத்தியை மனைக்கிழத்தியாகக் கொண்டு இல்வாழ்வு நடாத்திவந்தார். அக்காலத்தில் பறங்கியர் சைவசமயத்தை ஒழிக்க முயன்று கோயில்களை இடித்தும், சைவர்களை வருத்தியும் சைவநெறிக்கு முரணான செயல்களைச் செய்யுமாறு சைவர்களைக் கட்டாயப்படுத்தியும், இன்னும் பல கொடுமைகளையும் செய்து வந்தனர். ஒவ்வொரு குடும்பத் தலைவரும் குறிப்பிட்ட தினங்களிற் பறங்கித் தேசாதிபதியின் உணவிற்காக ஒரு பசு கொடுக்கவேண்டுமெனப் பறங்கியர் கட்டளையிட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் ஞானப்பிரகாசர் தேசாதிபதிக்குப் பசு கொடுக்க வேண்டிய முறை வந்தது. சிவபக்தராகிய ஞானப்பிரகாசருக்கு அப்பாதகச் செயல் செய்ய மனம் வரவில்லை. பசுவைக் கொடாதிருந்தாற் பறங்கியரின் கொடுந்தண்டனைக்காளாகவேண்டி வரும். ஆகவே அவர் பசு கொடுக்கும் தினத்துக்கு முன்னாளிரவே தம்மனைவியையும், சுற்றத்தாரையும் துறந்து தோணியேறிக் கடல் மார்க்கமாக இந்தியாவிலுள்ள வேதாரணியத்தை அடைந்தார்.

அத்தலத்தை வணங்கிக்கொண்டு திருப்புகலூரையடைந்து அங்கிருந்து சிதம்பரஞ் சென்று சிவகாமசுந்தரியம்மை சந்நிதியில் நாற்பது நாள் அருந்தவமியற்றினார். சிவகாமசுந்தரியம்மையாரின் ஆணைப்படி கௌடநாடு சென்று ஒரு பிராமணச் சந்நியாசியிடம் வடமொழி கற்றார். பின்பு ஞான நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார்.

ஞானப்பிரகாசர் சிதம்பரத்துக்கு மீண்டும் வந்து பல சிவப்பணிகள் புரிந்துகொண்டிருந்தார். ஞானப்பிரகாசர் தம்குருவின் கட்டளைப்படி திருவண்ணாமலை ஆதீனத்தையடைந்து துறவு பெற்றார். அங்கே சைவ சிந்தாந்த நூல்களைக் கற்றுத் தெளிவு பெற்றார்.

ஒரு நாள் சிதம்பரத்திலே சிவகாமசுந்தரியம்மையை வணங்கி மீண்டுவரும் வழியிலே ஞானப்பிரகாச முனிவர் ஒரு பண முடிப்பைக் கண்டார். அதைக் கையாலுந்தீண்ட அவர் விரும்பவில்லை. சாணத்தினால் அம் முடிப்பை மூடிவிட்டுச் சென்றார்.

சிறிது நேரத்தில் அம்முடிப்பை இழந்தவர் பதைபதைப்புடன் வழியெல்லாம் எதையோ தேடுவதைக் கண்ட ஞானப்பிரகாச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர் அம்மனிதரையழைத்துப் "பண முடிப்புச் சாணத்தால் மூடப்பட்டிருக்கிறது. போய் எடுத்துக்கொள்ளும்" என்று கூறினார்.

அம்மனிதர் விரைந்து சென்று முனிவர் கூறிய இடத்திற் பணமுடிப்பைக் கண்டு ஆனந்தத்துடன் அதனையெடுத்துக்கொண்டு வந்து முனிவரிடமே கொடுத்தார். முனிவர் அதனை ஏற்க மறுத்தார். ஆனால் அம்மனிதர் அத்திரவியத்தைச் சிவதொண்டிற்குச் செலவிடுமாறு ஞானப்பிரகாசரிடம் வேண்டிக்கொண்டார். அவர் அப்பணத்தைக்கொண்டு சிதம்பரத்தில் ஒரு குளத்தைத் தோண்டுவித்தார். அக்குளம் ஞானப்பிரகாசர் குளமென இன்றும் அழைக்கப்படுகிறது.

இவர் சிதம்பரத்தில் பல மாணவர்கட்கு ஞான சாஸ்திரங்களை உபதேசித்தார். இவரிடம் கற்றவர்களில் யாழ்ப்பாணத்துத் தில்லைநாதத் தம்பிரானும், வைத்தியநாதத் தம்பிரானும் சிறந்தவர்களாவர். ஞானப்பிரகாச முனிவர் தமிழிலே சிவஞானசித்தியாருக்கு ஒரு சிறந்த உரை இயற்றியிருக்கிறார். வடமொழியிலே சித்தாந்த சிகாமணி என்னும் நூலையும் சிவஞானபோத விருத்தி என்ற நூலையும் இயற்றினார்.

சிதம்பரத்திலே சிவகாமசுந்தரியம்மை சந்நிதியிற் பலகாலம் வழிபாடு புரிந்து இறைவனடி சேர்ந்தார். இவரது குரு பூசைத்தினம் பங்குனி மாதத்துப் பூச நட்சத்திரமாகும்.

| |
|---|
| Unity is Divinity; Purity is wisdom<br>ஒருமைப்பாடு தெய்வீகம், பரிசுத்தம் ஞானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வாழ்க்கையில் சமயம்

மனிதர்கள் தமது சமய நெறிகளைப் பின்பற்றியே தமது வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர். படுக்கையிலிருந்து கண் விழிப்பது தொடக்கம் மீண்டும் படுக்கை செல்லும் வரையான செயற்பாடுகளை தமது சமய முறைகளைப் பின்பற்றியே நடக்கின்றனர். இதனால் சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று கருத முடியாத அளவுக்கு சமயம் மனித வாழ்வில் ஒன்றிவிட்டது.

சைவ சமயிகளான நாங்கள் நமது வாழ்வியற் கருமங்கள் அனைத்தையும் இறைசிந்தனையுடனேயே ஆரம்பித்து இறை சிந்தனையுடனேயே நிறைவேற்றுகின்றோம். நமது முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய வழியின்பால் நமது வாழ்வு சமயத்துடன் பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகிறது.

தமது அன்றாட கருமங்களை இறை சிந்தனையுடன் நெறிப்படுத்த வீடு, பாடசாலை, சமூக நிறுவனங்கள், ஆலயம் ஆகியவற்றினூடாக செயலுருவம் கொடுக்கின்றோம்.

நமது வீடுகளில் இடம்பெறும் அன்றாடக் கருமங்கள் யாவும் இறைசிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன. அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்ததும் சிவசிவ என்று சொல்லிக்கொண்டு எழுகின்றோம். எழுந்ததும் இரண்டு கைகளையும் பார்த்து லட்சுமி, சரஸ்வதி, பார்வதி, நாராயண மூர்த்தி என்று சொல்லி இரண்டு கைகளையும் கண்ணில் ஒற்றி கூப்பி வணங்கி எழுந்து எங்கள் கடமைகளை ஆரம்பிக்கலாம். அந்த நேரம் தொடக்கம் எங்களை அறியாமலே வழிபாடு தொடங் குகிறது. காலையில் சூரிய நமஸ்காரம் செய்வது, வீடுகளில் உள்ள சுவாமி அறையில் உள்ள தெய்வப் படங்களுக்கு பூவும் நீரும் வைத்து தோத்திரப் பாடல்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடி விபூதி அணிகின்றோம். அன்றாடம் நாம் மேற்கொள்ளும் அனைத்து கருமங்களையும் இறைபக்தியுடனேயே மேற்கொள்கின்றோம்.

விசேட தினங்களில் மேற்கொள்ளப்படும் செயல்களும் இறைசிந்தனையுடன் எமது கலாசாரத்தைத் தழுவியனவாக அமைகின்றன. விரதங்கள், பண்டிகைகள், சடங்குகள் போன்றவற்றில் இறை சிந்தனை மேலோங்கிக் காணப்படுகிறது.

சைவ சமயத்தவர் ஒருவரது பிறப்பிலிருந்து இறப்பு வரையும் அதன் பின்னரும் ஆற்றப்படும் அனைத்து சடங்குகளும் இறைசிந்தனையுடனேயே ஆற்றப்படுகின்றன.

உடலில் உயிர் இருக்கும்வரை ஆற்றப்படுகின்ற கிரியைகளை பூர்வ கிரியைகள் என்று சொல்லப்படுகிறது. பெயர் சூட்டுதல், ஏடு தொடக்குதல், திருமணச் சடங்குகள் உட்பட்ட கிரியைகள் இறைசிந்தனையுடனேயே மேற்கொள்ளப்படுகின்றன.

உயிர் உடலை விட்டுப் பிரிந்ததும் ஆற்றப்படுகின்ற கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். இதில் மரணச் சடங்கு பிரதானமானது. மரணக் கிரியைகள் இறைசிந்தனையுடன் மேற்கொள்வது ஆன்மா மோட்சத்திற்கு கொண்டு செல்வதற்காகச் செய்யும் கிரியைகள் எனக்கூறப்படுகின்றது. காடாற்றல், அந்தியேட்டி, சபீண்டீகரணம், மாளயம் போன்றவை இறந்த ஆன்மாவை நினைத்து மேற்கொள்ளப்படுபவையாகும்.

எமது பாடசாலை வாழ்க்கையை எடுத்துக்கொண்டால் அங்கேயும் இறைசிந்தனை செயற்பாடுகள் மேற்கொள்பவற்றை சிறிது நேரம் சிந்தித்துப் பார்ப்போம்.

ஆரம்பக் கல்விக்கு வித்திடும் ஏடு தொடக்கல் முதல், கல்விக் காலத்தில் எமது பெற்றோரால் புகட்டப்பட்ட சமய ஆன்மீக மரபுகளால் மேலும் மெருகூட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப் பிரார்த்தனை, குரு வணக்கம், பிள்ளையார் சுழியிடுதல் போன்றவை கல்விக்கூடங்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். அத்துடன் பாடசாலைகளில் நடாத்தப்படும் சரஸ்வதி பூசையை சமய வேறுபாடு இல்லாமல் அனைத்து மாணவர்களும் ஒன்றிணைந்து மேற்கொள்வது இறைபக்தியின் வெளிப்பாடாகும். அத்துடன் மாணவப் பருவத்தில் சமய அறிவினை மேம்படுத்தும் போட்டிகள் மேற்கொள்ளப்படுவது மாணவர்களுக்கு சமய சிந்தனை தொடர்பான அறிவு வளர ஏதுவாக அமைகிறது.

சைவ சமயத்தவர்களைப் பொறுத்தவரையில் சமய நெறியினை மேம்படுத்தும் இடமாக ஆலயங்கள் அமைகிறது. இறைவனைப் பல்வேறு வடிவங்களில் அமைத்து அவற்றுக்கென ஒழுக்க நெறிகளை வகுத்து அதன்வழியில் வாழும் பக்குவத்தினை சைவ சமயத்தவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். நமது முன்னோர்கள் காலத்திலிருந்தே இந்த ஒழுக்க நெறிகள் பேணப்பட்டு வருகின்றன.

ஆலயத்தின் ஒவ்வொரு அமைப்பிலும் சமயத்தின் தனித்தன்மை உள்ளடக்கியே காணப்படுகிறது. ஒவ்வொரு அமைப்பும் மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்ததாக உள்ளன.

"சைவ சமயம் பேணி
சைவனாய் வாழ்வோம்"

*ஐ. கிருஷ்ணன்,*
வருமானப் பரிசோதகர்,
நகரசபை, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழுவழிகாட்டும் தமிழாகமம்

வேதம், ஆகமம் என்னும் இரண்டும் இறைவனால் அருளிச் செய்யப்பட்டு செவிவழியாக பேணப்பட்டு வந்தமையால் "சுருதி" எனப்பட்டது. திருமூலர் திருமந்திரத்தில் "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்று திருமந்திரத்தில் சிறப்பித்திருப்பதும் சிந்தனைக்கு உரியது.

திருமூலர் திருமந்திரத்தை தமிழாகமம் என்று போற்றி வழிபடும் மக்களாகிய நாம், ஆலய அமைப்பு, வழிபாடு ஆகியவற்றை ஆகம முறைப்படி அமைத்து வழிபடுவது எமது சமய மரபாகும். அவற்றிற்கிணங்க திருமூலர் காட்டும் வாழ்வியல் நெறியில் நாம் நல்வாழ்வு வாழ்வோமாக.

1. *முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்*
*மன்னர்க்குத் தீங்குள வாரிவளம் குன்றும்*
*கள்ளம் களவு மிகுந்திடும் காசினி*
*என்னருள் நந்தி எடுத்துரைத்தானே.*

முதல்வனாகிய சிவனின் திருக்கோயில்களில் பூசைகளுக்கு இடையூறு ஏதேனும் நேர்ந்தால் நாட்டை ஆள்கின்ற அரசனுக்கு - அரசாங்கத்திற்கு தீங்கு உண்டாகும். குளங்களில் நீர் வளம் குறையும். வருவாய் குன்றும். கள்ளம், களவு மிகுந்து காணப்படும் என குருநாதர் நந்தி எடுத்துக்கூறியுள்ளார்.

அதனை நோக்கினால்! நாட்டிலும் வீட்டிலும், மன்னரும் மக்களும் நன்கு வளமுடன் வாழ வேண்டுமானால் எல்லாத் திருக்கோயில்களிலும் காலம் தவறாது அபிஷேகம் ஆராதனைகளுடன் பூசைக்கிரமம் சிறப்புற நடைபெற வேண்டும் என்பது திருமூலர் சிந்தனை என நாம் உணர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. *பேர்கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தால்*
*போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லாவிதியாம்*
*பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே*
*சீர்கொண்ட நந்தி தெரிந்துவைத்தானே.*

பேர்கொண்ட பார்ப்பான் என்று திருமூலநாயனார் சிறப்பித்துக் கூறுகையில் திருக்கோயில்களில் சிவபெருமானுக்குப் பூசைகள் செய்பவர்கள் பெயரளவில் மட்டும் அந்தணராக இருத்தல் கூடாது. அவர்களுக்கு உள்ள கடமைகளாகிய ஆகம நெறிமுறைகளையும், முப்பொருள் உண்மைகளையும், முழுதுமுணர்ந்து சமய தீட்சை முதலான சிவதீட்சைகளை உரிய முறைப்படி பெற்று நல்லொழுக்கம் காத்து சிவபெருமானை அர்ச்சித்தல் வேண்டும். பெயரளவில் மட்டும் சிவாச்சாரியர்களாக இருந்தால் அவர்களுக்கும், அரசர்க்கும் பொல்லாத நோய்கள் வருவதுடன் நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி நிறைந்து தீமைகள் உண்டாகும் என்று கூறுகிறார்.

## ஆலயங்களில் இசைக்கப்படும் வாத்திய இசைகளும் அவற்றால் ஏற்படும் பலன்களும்

| | | |
|---|---|---|
| மத்தளம் | - | சுகம் |
| பேரிகை | - | புஷ்டிவிருத்தி |
| தாளம் | - | கிலேச நாசம் |
| கைத்தாளம் | - | அபயம் |
| சல்லரி | - | காமிகபலன் |
| நரம்பு வாத்தியம் | - | காமிசுபலன் |
| துளை வாத்தியம் | - | புத்திர பௌத்திர விருத்தி |
| சங்கு | - | சத்துரு நாசம் |
| தோல் வாத்தியம் | - | பிணி தீர்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவபூசை

சைவம் சிவம் சம்பந்தமானது. சிவம் மங்கலகரமானது. நன்மக்கள் நல்வாழ்வு வாழ ஸ்ரீவாகீசப் பெருமான்,

"கைகால் கூப்பித் தொழீர் - கடிமாமலர் தூவி நின்று.
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகாள் கூப்பித் தொழீர்"

"ஆட்கையால் பயனென் அரண் கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றி யென்னாதலில் வாக்கையாற் பயனென்"

எனத் திராவிட வேதத்தில் அருளிச் செய்ததோடு ஏனைய சமயாசாரியர்களும் அத்தமிழ்த் திருமுறைகளில் அவ்வாறே உபதேசித்தருளினார். ஆப்தரருளிய சிவாகமங்களிலே சிவபூஜா விதிகளையும், அம்மகிமைகளையும் விளங்கவைத்து அருள் செய்துள்ளார். இவ்வகையாக சிவ பூசைகளையும், சிவ வழிபாடுகளையும் நாம் அறிந்து ஒழுக வேண்டும். நாமும் நாடும் நலம் பெற்று மங்களகரமானதாக வாழ்வதற்கு சிவபூசை செய்து ஆதி அந்தமில்லா பரம்பொருள் அருள்பெற்று சைவ வாழ்வு வாழ்வோமாக.

சிவபூசை என்பது (1) பரார்த்தம் (2) ஆன்மார்த்தம் என இருவகைப்படும்.

(1) பரார்த்தம்:- கோவில்களில் பிரதிட்டை செய்து இலிங்கத்தைப் பூசிப்பது.

(2) ஆன்மார்த்தம்:- (1) க்ஷணிகம் (2) உலோகம் (3) இரத்தினம் (4) சைலம் (5) வாணம் என்பவற்றிலாகிய இலிங்கங்களில் ஒன்றைப் பூசிப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1) க்ஷணிகம்

(1) மண் (2) அரிசி (3) அன்னம் (4) மணல் (5) கோமயம (6) வெண்ணெய் (7) உருத்திராக்கம் (8) சந்தனம் (9) கூர்ச்சம் (10) பூ (11) சருக்கரை (12) மா இவைகளில் ஏதாவதொன்றினால் அமைக்கப்பட்ட இலிங்கங்களைப் பூசிப்பது - க்ஷணிகம் = ட்சணிகம்:-சட் என்னும் பகுதியடியாகப் பிறந்த சொல். சட் என்பது எழுத்து நிலை மாறி ட்ச என்றாயிற்று.

சடுதியில் செய்து முடிக்கும் பூசை என்பது அச்சொல்லின் பொருள்.

## இன்னின்ன இலிங்கங்கள் இன்னின்ன பலன் கொடுக்கும்

| | | | |
|---|---|---|---|
| 1. | மண் | - | மோட்சம் |
| 2. | அரிசி | - | செல்வத்தையும் |
| 3. | அன்னம் | - | பிரமலோகத்தையும் |
| 4. | மணல் | - | பூமி லாபத்தையும் |
| 5. | கோமயம் | - | வியாதி நீக்கத்தையும் |
| 6. | வெண்ணெய் | - | விரும்பிய பலனையும் |
| 7. | உருத்திராக்கம் | - | ஞானத்தையும் |
| 8. | சந்தனம் | - | போகத்தையும் |
| 9. | கூர்ச்சம் | - | புத்திர விருத்தியும் |
| 10. | பூ | - | ஆயுள் விருத்தியும் |
| 11. | சருக்கரை | - | சித்திகளையும் |
| 12. | மா | - | சரீர புஷ்டியையும் |

கொடுக்கும் என்று அம்சுமான் ஆகமம் கூறுகிறது. அம்சுமான் காலோத்தரத்தின் உபபிரிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) உலோகம்

(1) பொன் (2) தாமிரம் (3) வெள்ளி (4) வெண்கலம் (5) பித்தளை (6) இரும்பு இவைகளில் ஒன்றினாலாகிய இலிங்கத்தைப் பூசிப்பதால் பெறப்படும் பலன்கள்.

| | | | |
|---|---|---|---|
| (1) | தங்கம் | - | மோட்சம் |
| (2) | செம்பு | - | நன்மக்கட்பேறு |
| (3) | வெள்ளி | - | செல்வம் |
| (4) | வெண்கலம் | - | சுகம் |
| (5) | பித்தளை | - | வியாதி நீக்கம் |
| (6) | இரும்பு | - | சத்துரு நாசம் |

என்பவற்றை கொடுக்கும் என்று சிந்தியாகமம் கூறுகின்றது.

## 3) இரத்தினங்களும் லிங்கபூசை பலன்களும்

| | | | |
|---|---|---|---|
| (1) | மரகதம் | - | புஷ்டி |
| (2) | பதுமராகம் | - | செல்வம் |
| (3) | வைடூரியம் | - | ஆயுள் விருத்தியும் |
| (4) | படிகம் | - | புத்திர விருத்தியையும் |
| (5) | புஷ்பராகம் | - | சத்துரு நாசத்தையும் |
| (6) | பவளம் | - | இராஜ வசியத்தையும் |
| (7) | வச்சிரம் | - | ஆகர்ஷணத்தையும்(வசீகரம்) |
| (8) | மாணிக்கம் | - | சித்திகளையும் |
| (9) | இந்திர நீலம் | - | மோட்சத்தையும் |

கொடுக்கும் என்று சிந்தியாகமத்தின் பிரிவாகிய விசுவாகமம் கூறுகின்றது.

## 4) சைலம்

சைலம் = சிலை = கல். கல்லால் அமைக்கப்பட்ட இலிங்க பூசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5) வாணம்

வாணம் என்னும் சொல்லுக்கு தீ - பாணம் (அம்பு) - மத்தாப்பு முதலிய பல்பொருள்கள் உண்டு.

உருகிய கல், மண், உலோகம் முதலியன தீச்சுடர் போன்று உருவாக்கப்பட்டு, பூகம்பங்களாலும், எரிமலைகளாலும் வெளியாக்கப்பட்டு நதிகளில் விழுந்து குளிர்ந்து கிடக்கும் இலிங்க உருவங்கள் வாணலிங்கம் எனப்படும்.

இத்தகைய உருவங்களில் பொன், வெள்ளி முதலிய உலோகங்களும் இரத்தினக் கற்களும் காணப்படும். இவைகள் எல்லாம் ஆவுடையாரின்றியே அகப்படும். இவைகளை நதிகளினின்றும் எடுத்துவந்து கல்லினால் ஆவுடையாரியற்றி அதில் அமைத்து வழிபடுகிறார்கள். வாணகப்பாடியை அரசாண்ட பானாசுரன் முதலியோர் இத்தகைய இலிங்கங்களையே பூசித்தார்கள்.

அகத்தியர் பூசித்த இலிங்கம் அகத்திய இலிங்கம் என்றும், இராமர் பூசித்த இலிங்கம் இராமலிங்கம் என்றும், தருமர் முதலியோர் பூசித்தது தருமலிங்கம், பீமலிங்கம், அர்ச்சுன இலிங்கம் என்றும் கூறப்படுவதுபோல பாணாசுரன் பூசித்தது அசுரலிங்கம் எனப்படும்.

சிலர் பாணாசுரன் பூசித்த இலிங்கம் பாணலிங்கம் அல்லது வாணலிங்கம் என்பர். அது பொருந்தாது. ஏனெனின் பானாசுரனுக்கு முன்னேயும் வாணலிங்கங்கள் உண்டு. ஆதலால் என்க.

வாண இலிங்கத்தில் சிவன் எப்போதும் உறைகின்றான் என்பது ஜதிகம். ஆகையால் வாணலிங்க பூசைக்கு ஆவாகனம், தாபனம், சந்நிதி தானம், சந்திரோதனம் வேண்டியதில்லையென்று காமிகம் கூறுகின்றது. ஆவுடையாரில் நடுவில் இருக்கும் இலிங்கத்துக்கு வாணம் அல்லது பாணம் என்று பெயர். வாணமும் ஆவுடையாரும் சேர்ந்ததே இலிங்கம்.

பரார்த்த இலிங்க பூசை செய்கிறவனுக்கும், ஏனையோருக்கும் பயன்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆன்மார்த்தம் செய்கிறவனுக்கு மாத்திரம் பயன்படும். ஆன்மார்த்தம் அல்லது இட்டலிங்க பூசை மூவகைப்படும்.**

(1) சுத்தம் (2) கேவலம் (3) மிசிரம்

**(1) சுத்தம்:-** சிவலிங்கம் ஒன்றை மாத்திரம் பூசித்தல். இது துறவிகட்கு மாத்திரம் உரியது.

**(2) கேவலம்:-** (1) சிவலிங்கத்தையும், உமாதேவியாரையும் பூசித்தல்.
(2) விநாயகர், கந்தர், இடபதேவர், சிவன், சத்தி என்னும் ஐவரையும் பூசித்தல்

**(3) மிசிரம் :-** சூரியாதி சண்டேசுராந்தம் பூசித்தல்.

கேவலம், மிசிரம் இரண்டும் இல்வாழ்வோனுக்கு உரியன. அடியார்கள் இம்மூன்றில் எதுவேண்டுமென்றாலும் செய்யலாம்.

ஆன்மார்த்தம் செய்யாமல் பரார்த்த பூசை செய்யக்கூடாது என்பது ஆகமத்தின் கட்டளை.

சிவபூசையை எப்போதும் வடக்கு முகமாக இருந்து செய்க.

ஆசனம்:- நிலம், கல், இலை, மூங்கிற்பாய் இவைகள் கூடாது.

## மூர்த்தங்கள்

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கொண்டருளிய சுத்த தத்துவங்கள் மூன்று:-

1) **சிவ தத்துவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) சாதாக்கிய தத்துவம்

3) மகேசுர தத்துவம்

இவற்றில்

(1) **சிவதத்துவம்:**

அருவத் திருமேனியடைய சிவ வடிவம் நிஷ்லசிவம் என்றும் சொல்லப்படும்.

(2) **சாதாக்கிய தத்துவம்**

(a) சிவ சாதாக்கியம்
(b) அமூர்த்தி சாதாக்கியம்
(c) மூர்த்தி சாதாக்கியம்
(d) கர்த்திரு சாதாக்கியம்
(e) கன்ம சாதாக்கியம்

சாதா = எப்பொழுதும், ஆக்கியம் = புகழப்படுவது

இவை அருவுருவத் திருமேனியுடைய சிவ வடிவங்கள் - சகளநிஷ்களம்.

## (3) மகேசுர தத்துவம்

*"உயர்மறை புகழ்சிவன், ஓங்குசதாசிவன், இயலுமகேசன் என மூன்றாம், அவை அருவே, அருவுரு, வுருவாயடைவே அரிதுணர் ஒன்று, ஐந்து ஐயைந்தாதி ஒரு தொகை முப்பத்தொன்றாகும்மே"*

(சதாசிவரூபம்)

மேலே கூறிய 31 மூர்த்தங்களிலே ஏதாவது ஒன்றைப் பூசித்தலே சிவபூசையாம்.

சிவதத்துவத்தில் உள்ள அருவத்திருமேனியைப் பூசித்தல் ஞானிகளுக்கே கூடும். அது பலனைக் கருதாத பூசையாகும்.

(= நிஷ்காமிய பூசை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகளைத் தவிர ஏனையோருக்கு சாதாக்கிய தத்துவத்திலுள்ள அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்க பூசையாம்.

மகேசுர தத்துவத்திலுள்ள உருவத் திருமேனியாகிய 25 மூர்த்தங்களில் ஏதாவதொன்றன் வழிபாடுமே உரியதாகும். இவற்றில் முன்னையது நிஷ்கள சகளபூசை என்றும், பின்னையது சகள பூசை என்றும் கூறப்படும்.

## 25 மூர்த்தங்களாவன

### மகேசுர தத்துவம் என்பது ஈசுவர தத்துவம் என்றும் பெயர்பெறும்.

சதாசிவமூர்த்தியினுடைய அம்சத்தைப் பெற்று, உருவத் திருமேனியுடையவராய் பஞ்சகிருத்திய அதிகாரம் பெற்று இருபத்தைந்து வடிவங்களாய் உள்ளவரும், பசுக்களாகிய பிரமவிண்டுக்கள் முதலியோரை அனுக்கிரகிப்பவரும், மெய்யன்போடு துதிக்கும் ஆன்மாக்களுடைய மயக்கத்தை நீக்கி மோட்சத்தைக் கொடுப்பவரும், சகளநிஷ்களம், சகளம் என்னும் திருமேனிகளைப் பொருந்தி, பேதமற்று ஒரு பொருளாயுள்ளவரும், மூன்று திருக்கண்களையும், நான்கு திருக்கரங்களில் மான், மழு, வரதம், அபயம் ஆகிய இவைகளை உடையவரும், மகேசரி என்னும் சக்தியை உடையவரும் ஆகிய மகேசுர மூர்த்தி ஈசுவர தத்துவத்தில் இருப்பார்.

**இவ்விதமான மூர்த்தங்கள் 25 பேதங்களாயுள்ளன. அவை வருமாறு:—**

1. **ஈசானம்:-** சோமாஸ்கந்தம், சபாபதி, இடபாரூடர், சந்திரசேகரர், கல்யாணசுந்தரர்.
2. **தற்புருடம்:-** பிட்சாடணர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராரி
3. **அகோரம்:-** கசாரி, வீரபத்திரம், தக்ஷணாமூர்த்தி, கிராதர், நீலகண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. வாமதேவம்:-** கங்காளர், சக்கரதானர், கஜமுகானுக்கிரகர், சண்டேசுரானுக்கிரகர், ஏகபாதர்.

**5. சத்தியோசாதம்:-** இலிங்கோற்பவர், சுகாசீனர், உமாமகேசர், அரியர்த்தர், அர்த்தநாரீச்சுரர்.

இவ்விருபத்தைந்து மூர்த்தங்களும் சதாசிவமூர்த்தியினுடைய பஞ்சமுகங்களினின்றுமே தோன்றியவையாகும்.

கணபதி, சுப்பிரமணியர், வைரவர், பூசைகளும் மகேசுர மூர்த்தி பூசையில் அடங்கும்.

## உபசாரம் 5

இவை பஞ்சோபசாரம் எனப்படும்.

அவையாவன:-

**(1) பார்த்திவோபசாரம்:-** சந்தன, பழம், கிழங்கு, புஷ்பம், அன்னம் முதலியவை சமர்ப்பித்தல்.

இவை பார் அல்லது பிருதிவி சம்பந்தம் ஆகையால் பார்த்திவோபசாரம் எனப்பட்டது.

**(2) சலோபசாரம்:-** திருமஞ்சனம், பால், தயிர், நெய் முதலியவைகளால் முழுக்காட்டல்.

இவை சல சம்பந்தமானதால் சலோபசாரம் எனப்பட்டது.

**(3) தைசசோபசாரம்:-** அருக்காலாத்தி முதலிய தீபங்கள் காட்டல். கற்பூர ஆராத்திகம் செய்தல்.

இவை தேயு சம்பந்தமாதலால் தைசசோபசாரம் எனப்பட்டது.

**(4) வாயவ்யோபசாரம்:-** தூபம் இடல், சாமரை போடல், விசிறி வீசல் முதலியன.

இவை காற்று சம்பந்தமாதலால் அப்பெயர் பெற்றன.

**(5) ஆசாசோபசாரம்:-** மணி அடித்தல், தோத்திரம் செய்தல், வாத்தியம் வாசித்தல் முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஆகாய சம்பந்தப்பட்டதால் அப்பெயர் பெற்றன.

சிவபூசையில் மேலே கூறிய ஐந்து உபசாரங்களுமே அல்லாமல் பதினாறு உபசாரங்கள் வேறு இருக்கின்றன.

## உபசாரம் 16

(1) ஆவாகனம் (2) தாபனம் (3) சந்நிதானம் (4) சந்நிரோதனம் (5) அவகுண்டனம் (6) தேனுமுத்திரை (7) பாத்தியம் (8) ஆசமனம் (9) அர்க்கியம் (10) புட்பதானம் (11) தூபம் (12) தீபம் (13)நைவேத்தியம் (14) பாணிபம் (15) ஆராத்திரிகம் (16) செபசமர்ப்பணம்.

மேலே கூறிய 21 வித உபசாரங்களே சிவபூசைக்குரிய கிரியைகள் ஆகும்.

இம்முறைகளை ஒருவன் சரியாகப் படித்து மனதில் பதியவைத்துக்கொண்டால் சிவபூசையை மிக எளிதாகவும், சரியாகவும், சீக்கிரமாகவும் செய்து முடித்துவிடலாம்.

ஆவாகனம் இரண்டு வகைப்படும். அவையாவன:-

**(1) சிற்பிரகாச ஆவாகனம்.**

**(2) தன்முகமாக்கும் (அபிமுகீகரண) ஆவாகனம்.**

கோவில்களில் புதிதாகப் பிரதிட்டை செய்யும் காலத்தில் தான் சிற்பிரகாச ஆவாகனம் செய்தல் வேண்டும்.

தினந்தோறும் பூசாகாலத்தில் தன்முகமாக்கும் ஆவாகனமே செய்தல் வேண்டும்.

## (1) சிற்பிரகாச ஆவாகனம்

சிற்பிரகாச ஆவாகனம் கோவில்களில் பிரதிட்டா காலத்தில் சர்வசங்கார காலம் வரை சிவலிங்கத்தில் சாந்நித்தியமாக இருத்தற்பொருட்டு தியானித்துச் செய்யப்படும். சீவநியாசம் தான் சிற்பிரகாச ஆவாகனம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (2) தன்முகமாக்கும் ஆவாகனம்

நாடோறும் பூசாகாலங்களில் சிவலிங்கத்தில் எழுந்தருளி இருக்கும் சதாசிவமூர்த்தியினுடைய நான்கு முகங்களிலும் வியாபித்திருக்கும் ஈசானமுகம் தன்னைப் பார்க்கும்படி செய்வதுதான் தன்முகமாக்கும் ஆவாகனம் எனப்படும்.

இவைகள் எல்லாம் (1) தூர்வாசசிவர் (2) பிங்களசிவர் (3) உக்கிரசிவர் (4) நீலகண்டசிவர் (5) விண்கண்டசிவர் (6) சுபோதசிவர் (7) வித்தைகண்டசிவர் (8) இராமண்டசிவர் (9) ஞானசிவர் (10) ஞானசங்கரசிவர் (11) சோமசும்புசிவர் (12) பிரமசம்புசிவர் (13) திரிலோகனசிவர் (14) அகோரசிவர் (15)வருணசிவர் (16) பிராசாதசிவர் (17) இராமநாதசிவர் (18) ஈசானசிவர் ஆகியவர்கள் செய்த பக்திகளில் கண்டவை.

சைவர்களாகிய நாம் சிவம், மங்கலகரமானவர் என்பதனை உணர்வதற்கு ஏதுவாக சிவபூசை பத்ததிகள் மூலம் ஆசிரியர்கள் எமக்கு வழிகாட்டி உள்ளனர். இவர்களை என்றும் ஏற்றி வழிபாடு செய்தாலே பெரும் புண்ணியம் பெறலாம்.

### மூர்த்திகளும் மலர்களும்

| | | |
|---|---|---|
| 1) | **விநாயகருக்கு** | : செம்பருத்தி, தாமரை, ரோஜா, மற்றும் அறுகம்புல் முதலியன. |
| 2) | **சிவனுக்கு** | : வில்வம், சங்கு மலர், தும்பை, தாமரை மலர், செம்பருத்தி. |
| 3) | **விஷ்ணுவுக்கு** | : பவளமல்லி, தாமரை, மருக்கொழுந்து, துளசி. |
| 4) | **அம்பிகைக்கு** | : வெண்தாமரை, மல்லிகை, முல்லை, சூரியகாந்தி, செவ்வரளி, செம்பவளமல்லி. |
| 5) | **முருகனுக்கு** | : முல்லை, மல்லிகை, சாமந்தி, சூரியகாந்தி, ரோஜா. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூர்த்திகளை அறிந்துகொள்வோம்

## மூர்த்திகள்:-

சிவாகமங்களிலே சிவபெருமானைத் தியானித்தற்பொருட்டும், வழிபடுதற் பொருட்டும், அவருக்கு சில உருவத் திருமேனிகள் கூறப்படுகின்றன. அவை:- சிவலிங்கம், நடராசமூர்த்தி, உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், வீரபத்திரர் முதலியனவாம்.

## விநாயகர்:-

உலகத்தோற்றத்திற்கு முதற்காரணமாகிய பிரணவத்தின் உருவமே விநாயகப் பெருமானின் திருவுருவாகும். சுத்தஞான வடிவம் எனப் போற்றப்படும் ஓம் என்னும் வரிவடிவில் அமைந்த யானை முகத்துடன் விநாயகப்பெருமானை வணங்குவர். விநாயகர் என்ற சொல் தனக்குத் தலைவர் இல்லாதவர் என்னும் பொருள் உடையது. சிவலிங்கம் பிரணவ வடிவினது என்று முன்பாடத்தில் படித்தோம். விநாயகர் பிரணவ வடிவினராதலின் அவர் சிவபெருமானின்றும் வேறானவரல்ல என்பது வெளிப்படை. விக்கினங்களை விநாயகப் பெருமான் நீக்கியருளுதலால் விக்கினேசுவரர் எனப் பெயர் பெறுவர். அவர் இட்ட சித்திகளை தந்து அருளுவதால் எக்கருமத்தைத் தொடங்கும் போதும் விநாயகப் பெருமானை வணங்கியே தொடங்குகிறோம். ஆலயங்களில் முதலில் விநாயகரை வணங்கியே ஏனைய மூர்த்திகளை வணங்குதல் வேண்டும்.

## சிவலிங்கம்:-

இறைவனது அருவுருவத் திருமேனி சிவலிங்கமாகும். லிங்கம் என்ற சொல் தோன்றுவதற்கும், ஒடுங்குவதற்குங் காரணமாயுள்ளது என்னுங் கருத்துடையது. சிவலிங்கம் வட்ட வடிவாகிய கோமுகியையும், மேலுள்ள தாகிய லிங்கத்தையும் கொண்டதாகும். கோமுகி சக்தியையும், லிங்கம் சிவத்தையுங் குறிப்பனவாகும். சிவலிங்கம் பிரணவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவிலமைந்தது. பூசிக்கப்படும்போது அது சதாசிவ மூர்த்தியாகக் கருதப்படுகிறது. ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்திஜோசாதம் ஆகிய ஐந்து திருமுகங்களையுடையது சதாசிவ வடிவம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால் வகை வழிபாட்டிற்கும் சிவலிங்கம் உரியதாகும். சரியையாளருக்குச் சிவபெருமான் சிவலிங்கத்தில் மறைந்து நின்றும், கிரியை, யோகம் என்ற இரு நெறியில் வழிபடுபவருக்குச் சிவலிங்கத்தில் வெளிப்பட்டு நின்றும் ஞானிகளுக்கு அன்புருவமாயும் அருள்புரிவர்.

## நடேசர்:—

நடேசப் பெருமானின் நடனம் பஞ்சகிருத்தியத்தை உணர்த்துவதாகும். அவரது திருமேனி பஞ்சாட்சர வடிவாயமைந்து நடராசப் பெருமானின் கையிலிருக்கும் உடுக்கை படைத்தல் தொழிலைக் குறிக்கும். அவரது அபயகரம் உயிர்களைக் காத்தலைக் குறிக்கும். அவரது கையிலேந்திய அக்கினி அழித்தற்றொழிலைக் குறிக்கும். ஊன்றிய திருவடி மறைத்தலை உணர்த்தும். எடுத்த திருவடி அருளலை உணர்த்தும். ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி கருணைக் கடலாகிய இறைவன் புரியும் பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பதால் இவ்வடிவம் இறைவனது திருவடிவங்களிற் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

## சுப்பிரமணியக் கடவுள்:—

தேவர்கள் சூரபன்மனால் அளவற்றகாலம் வருந்திச் சிவபெருமானை வணங்கித் தமது துன்பத்தை முறையிட்டனர். தேவர்களின் முறையீட்டைக் கேட்ட சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்று ஆறு தீப்பொறிகள் தோன்றிச் சரவணப் பொய்கையில் வீழ்ந்தன. அப்பொறிகள் ஆறு குழந்தைகளாக மாறக் கார்த்திகைப் பெண்களறுவர் அக் குழந்தைகளை எடுத்து உமாதேவியாரிடம் கொடுத்தனர். உமாதேவியார் அக்குழந்தைகளை அணைத்தபோது அவை ஒன்றுசேர்ந்து ஆறுமுகமும், பன்னிரு கைகளும், ஒருதிருமேனியும் கொண்டு விளங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகப் பெருமான் சிவபெருமானின் கட்டளைப்படி சூரபன்மனைப் போர் செய்து அழித்துத் தேவர்களை சிறைமீட்டு அவர்களுக்கு நல்வாழ்வளித்தார்.

இந்திரன் மகளாகிய தெய்வயானை அம்மையாரையும் வேடர்குலத்தில் உதித்த வள்ளிநாயகி அம்மையாரையும் தமது சக்திகளாகக் கொண்டருளினார். தெய்வநாயகி கிரியா சக்தியாகவும், வள்ளிநாயகி இச்சாசக்தியாகவும், முருகப்பெருமான் கையிலேகொண்டிருக்கும் வேல் ஞானாசக்தியாகவும் கருதி அடியவர்கள் வழிபடுவர்.

**வீரபத்திரக் கடவுள்:**

தக்கன் சிவபெருமானை மதியாமல் செய்த வேள்வியை அழிக்கும்பொருட்டு சிவபெருமானது நெற்றிக் கண்ணினின்றும் வீரபத்திரக் கடவுள் தோன்றினார். சிவத்துரோகஞ் செய்தவர்களை தண்டிக்கும் அருளுருவே வீரபத்திரக் கடவுளாவர்.

**நந்தி:**

நந்தி பலிபீடத்தை அடுத்துச் சிவபெருமானை நோக்கியிருக்கும். அது ஆன்மாவைக் குறிப்பதாகும். நந்தி என்றால் சிவபெருமானையும் குறிக்கும். ஆன்மா பாசத்தினீங்கி இறைவனுடன் ஒன்றியநிலையில் சிவத்துவம் அடைகிறது என்ற குறிப்பு நந்தி என்ற சொல்லில் அமைந்திருக்கின்றது.

**பலிபீடம்:**

பத்திரலிங்கம் எனப்படும் பலிபீடம் நந்திக்கும் பின்னமைந்திருக்கும். அதனை வணங்கும் போது நமது பாவங்களைப் பலியிடுகிறோம் என்ற கருத்தோடு வழிபட வேண்டும். பின்பு மனச்சுத்தி பெற்று இறைவனை வழிபட தகுதியுடையவராவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிமரம்:

கொடிமரத்தில் கயிற்றோடு சேர்ந்த ஒரு சீலை சுற்றப்பட்டிருக்கும். விழாக்காலத்தில் இச்சீலை மேலே தூக்கப்பட்டிருக்கும். விழாக்காலத்தில் இச்சீலை தூக்கப்படும்போது கயிறு கீழே இழுக்கப்படும். கொடித்தம்பம் சிவனாகவும் சீலையிலே எழுதப்பட்ட படம் ஆத்மாவாகவும், கயிறு பாசமாகவும் பாவனைசெய்து பாசத்தை நீக்கி ஆன்மாவை இறைவனுடன் சேர்த்தல் என்ற கருத்தில் கொடியேற்று விழா நடைபெறுகிறது. தெற்பைக் கயிறு பாசத்தையும், மஞ்சள் கயிறு திருவருள் சக்தியையும் குறிக்கும்.

## வைரவக் கடவுள்:

சக்தி வடிவினரான வைரவக் கடவுள் நீலத் திருமேனியும், மூன்று கண்களும், செஞ்சடையும், சூலம், பாசம், பிரமகபாலம், தமருகம் என்பவற்றைத் தரித்த நான்கு திருக்கரங்களும் வேதமாகிய நாய் வாகனமும் உடையவராவர்.

பிரமதேவர் "நானே முழுமுதல்" என்று அகந்தையுற்றபோது வைரவக் கடவுள் சிவபெருமானருளினால் தோன்றி பிரமதேவரது ஐந்து தலைகளில் உச்சித் தலையை நகத்தால் கிள்ளினார். அதனால் பிரமதேவர் அகந்தையகன்று நல்லுணர்வு உதிக்கப்பெற்றுச் சிவபெருமானை முழுமுதலாகப் போற்றினார். சிவத்தினம்சமாகத் தோன்றியமையால் வைரவக் கடவுளை "சிவகுமாரர்" என்பர்.

Service to man is service to God
மானிடர் சேவையே மாதவன் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலடியார்

"நாலடியார்" என்பதற்கு நான்கு அடிகளையுடைய வெண்பாவாகிய நூல் என்பது பொருள். இது நாலடி நானூறு எனவும், வேளான் வேதம் எனவும் வழங்கப்படும். இந்நூல் பதினெண் கீழ் கணக்கு நூல்களில் ஒன்றென்பதை

*"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணை முப்*
*பால்கடுகங்கோவை பழமொழி மாமூலம்*
*இன்னிலைய காஞ்சியோ(டு) ஏலாதியென்பவே*
*கைந்நிலையொ டாங்கீழ்க் கணக்கு."*

இச்செய்யுள் ஊடாக அறியலாம்.

இந்நூலாசிரியர்கள் சமணமுனிவர்களாவர். இவர்கள் பாண்டி நாட்டின் கண் மதுரைமா நகரத்து உக்கிரப்பெருவழுதி என்னும் அரசனால் ஆதரிக்கப்பட்ட புலவர்களாவார்கள். ஒரு காலத்தில் ஜயின முனிவர் எண்ணாயிரவர்கள் கொடிய பஞ்சத்தினால் சுதேசம் விட்டு பாண்டி நாடு அடைந்து அந்நாட்டு அரசனால் ஆதரிக்கப்பட்டு வந்தனர் என்றும், அவர்கள் சிலகாலம் சென்ற பின்பு தம் தேசம் பஞ்சம் நீங்கி செழிப்படைதல் கண்டு தங்கள் ஊருக்கு போக விடை தருதல் வேண்டும் என்று பாண்டிய மன்னனைக் கேட்டனர். பாண்டியன் அதற்கு ஒப்புதல் வழங்காது மறுத்த காரணத்தினால் அவர்கள் தாம் தங்கியிருந்த இடங்களில் இருந்து ஒவ்வொரு பாட்டுக்களை எழுதிவைத்துவிட்டு இரவோடு இரவாக பாண்டி நாட்டை விட்டகன்றனர். இதை அறிந்த பாண்டியன் அவர்களது உறைவிடங்களை சோதனை செய்துபார்த்தபோது ஒவ்வொருவர் இருக்கைகளிலும் ஒவ்வொரு பாடல்கள் இருக்கக்கண்டு அவை கருத்து ஒருமுகமில்லாத காரணத்தினால் அவற்றை வைகை நதியிலே வீசுமாறு கட்டளையிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் நானூறு பாடல்கள் எதிர் நின்று கரைசேர்ந்தன என்றும், அவற்றை நாலடியார் என்று பெயரிட்டு வழங்கினர் எனவும், மேலும் பல இடங்களில் கரைசேர்ந்தவற்றை தொகுத்து பழமொழி, அறநெறிசாரம் என்கின்ற பெயர்களால் வழங்கிவருகின்றனர்.

நாலடியாரை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று இயலாக வகுத்துள்ளனர். பொருட்பாலில் கல்வி என்பது 14வது அதிகாரத்தில் பத்து பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

# கல்வி

*01. குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டு அழகும்*
*மஞ்சள் அழகும் அழகு அல்ல- நெஞ்சத்து*
*நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்*
*கல்வி அழகே அழகு.*

**(ப-ரை)** குஞ்சி அழகும் கொமுந்தானைக் கோட்டு அழகும் மஞ்சள் அழகும் அழகு அல்ல - ஆண்களுடைய மயிர் முடியின் அழகும் சுற்றி உடுத்தப்பட்ட ஆடையின் கரை அழகும் பெண்கள் பூசிய அழகும் முடிவான அழகுகள் அல்ல, நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் - நாம் நன்னெறியில் ஒழுகுகின்றோம் என்று மனம் அறிய கடைப்பிடிக்கும் நடுவு நிலைமை என்ற குணத்தைப் பயத்தலால், கல்வி அழகே அழகு - மக்கட்குக் கல்வி அழகே சீரிய அழகாகும்.

**(க-ரை)** நற்குண நற்செயல்கள் அமைய உதவும் கல்வியே மக்களுக்கு உயர்ந்த அழகாகும். மற்றவை உண்மையான அழகுகள் அல்ல.

*02. இம்மை பயக்குமால் ஈயக் குறைவு இன்றால்*
*தம்மை விளக்குமால் தாம் உளராக்கேடு இன்றால்*
*எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்*
*மம்மர் அறுக்கும் மருந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ப-ரை)** இம்மை பயக்கும் - கல்வியானது மக்களுக்கு இப்பிறவியில் அடைய வேண்டிய இன்பங்களை அளிக்கும், ஈயக்குறைவு இன்று - பிறர்க்குக் கொடுப்பதால் குறையாது, தம்மை விளக்கும் - அறிவு தரும் புகழால் நெடுந்தூரம் தம்மை விளங்கச் செய்யும், தாம் உளராக்கேடு இன்று - தாம் உயிரோடு இருக்கும்வரை அதற்கு அழிவில்லை, ஆம் - ஆதலால், கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து - கல்வியைப்போல் அறியாமை மயக்கத்தை அறவே ஒழிக்கும் மருந்தை, எம்மை உலகத்தும் யாம் காணேம் - எவ்வுலகத்திலும் யாம் காணவில்லை.

**(க-ரை)** வாழ்க்கையின் துன்பங்களுக்கு காரணமான அறியாமையை நீக்கி ஒருவர் பெறவேண்டிய இன்பங்களையும், புகழையும் அளித்து அவர் உயிரோடு இருக்கும் வரை அழிவின்றி நிலைத்து நிற்பது கல்வியேயாகும்.

3. *களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்*
*விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்:*
*கடைநிலத்தோர் ஆயினும் கற்று அறிந்தோரைத்*
*தலைநிலத்து வைக்கப் படும்.*

**(ப-ரை)** களர் நிலத்துப் பிறந்த உப்பினை - உவர் நிலத்தில் விளைந்த உப்பை: சான்றோர் - உயர்ந்தோர்: விளை நிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்-நன்செய் நிலத்தில் உண்டாகும் நெல்லைக் காட்டிலும் மிக்க பயன் தருவதாகக் கருதுவார்கள், அதைப் போல: கடை நிலத்தோர் ஆயினும்- தாழ்ந்த குடியில் பிறந்தவராயினும்: கற்றறிந்தோரைத் தலை நிலத்து வைக்கப்படும்-கற்றறிந்தோரை உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்ற வேண்டும்.

**(க-ரை)** தாழ்ந்த குடியில் பிறந்தவரையும் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றச் செய்வது: அவர் கற்ற கல்வியே யாகும்.

4. *வைப்புழிக் கோள்படா: வாய்த்துஈயிற் கேடுஇல்லை*
*மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்:*
*எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன*
*விச்சை மற்று அல்லபிற.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ப-ரை)** வைப்புழிக் கோள்படா-வைத்த இடத்திலிருந்து பிறரால் கைப்பற்றிக்கொள்ளப்படாது: வாய்த்தூ-யின் கேடு இல்லை-தகுந்த மாணவர் அமையப்பெற்று அவருக்குக் கற்பித்தால் குறைவு இல்லை: மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்-தம்மைக் காட்டிலும் புகழ் சிறந்து விளங்குவதால் அரசர் வெகுண்டாலும் அவரால் அப்புகழ்க்குக் காரணமாகிய கல்விச் செல்வத்தைக் கவர இயலாது: எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன விச்சை-ஆதலால், தனக்குப் பிறகு எஞ்சி நின்று உதவும் பொருளாக ஒருவன் தன் மக்களுக்குச் செய்யத்தகுதியுடையன கல்வியே ஆகும்: மற்று அல்ல பிற-கல்வி அல்லாத பொன், மணி போன்ற பிற பொருட்கள் இல்லை.

**(க-ரை)** கல்வியின் சிறப்பறிந்து ஒருவன் தான் இறந்த பின்பும் நின்று உதவும் கல்வியையே தனக்குப் பின்னர் எஞ்சியிருக்கும் பொருளாகத் தேடி வைத்துச் செல்லவேண்டும்.

5. *கல்வி கரைஇல: கற்பவர் நாள் சில:*
*மெல்ல நினைக்கின் பிணிபல: தெள்ளிதின்*
*ஆராய்ந்து அமைவுஉடைய கற்பவே நீர்ஒழியப்*
*பால்உண் குருகின் தெரிந்து.*

**(ப-ரை)** கல்வி கரைஇல-கற்க வேண்டிய கல்விகள் முடிவில்லாதவை: கற்பவர் நாள் சில-ஆனால் கற்பவருடைய வாழ்நாட்கள் சிலவேயாகும்: மெல்ல நினைக்கின் பிணி பல-மேலும் அமைதியாக ஆராய்ந்து பார்த்தால் அச்சில வாழ்நாட்களிலும் கற்பவரைப் பீடிக்கும் பிணிகள் பலவாகும். ஆகவே: நீர் ஒழியப் பால்உண் குருகின்-நீரைப் பிரித்துப் பாலை மட்டும் உண்ணும் அன்னப் பறவையைப் போன்று: அமைவுஉடைய தெரிந்து தெள்ளிதின் ஆராய்ந்து கற்ப-வாழ்வுக்குப் பொருந்துவனவாகிய நூல்களைத் தெரிந்து அவற்றையே தெளிவாக ஆராய்ந்து கற்பார்களாக.

**(க-ரை)** முடிவேயில்லாத கல்விகள் எல்லாவற்றையும் ஒருவனுடைய குறைந்த வாழ்நாட்களில் கற்க முடியாது. ஆதலால் அக்கல்வி நூற்களில் வாழ்வுக்குப் பொருந்துவனவாகிய நூல்களைத் தெரிந்து அவற்றையே நன்கு ஆராய்ந்து தெளிவு ஏற்படக் கற்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. *தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்*
*காணின் கடைப்பட்டான் என்று இகழார்-காணாய்*
*அவன்துணையா ஆறுபோய் அற்றேநூல் கற்ற*
*மகன்துணையா நல்ல கொளல்.*

**(ப-ரை)** தோணி இயக்குவான்-படகு செலுத்துவோன்: தொல்லை வருணத்துக் காணின்-பழைமையான சாதிப்பாடுகளின் முறைப்படி பார்க்கும்பொழுது: கடைப்பட்டான் என்று இகழார்-கீழான சாதியைச் சேர்ந்தவன் என்று இகழாதவராய்: அவன்துணையா ஆறுபோயற்று-அவனைத் துணையாகக் கொண்டு ஆற்றைக் கடந்து செல்வதைப் போன்றதே: நூல்கற்ற மகன் துணையா நல்லகொளல்-தாழ்ந்த சாதியில் பிறந்தவனாயினும் அவன் அறிவு நூல்களைக் கற்ற பெருமகனாயிருப்பின் அவனைத் துணையாகக் கொண்டு நல்ல மெய்ப்பொருளை அறிந்துகொள்ளுதலும்: காணாய்-இதனை அறிந்து கொள்வாயாக.

**(க-ரை)** கற்றறிந்தாரது பிறப்பின் உயர்வு தாழ்வ கருதாமல் அவரது அறிவின் முதிர்ச்சியை அறிந்து அவரிடமிருந்து நல்ல நூற்பொருள்களைக் கேட்டறிந்து பயன்பெற வேண்டும்.

7. *தவல்அருந் தொல்கேள்வித் தன்மை உடையார்*
*இகல்இலர் எஃகுஉடையார் தம்முள் குழீஇ*
*நகலின் இனிதாயின் காண்பாம் அகல் வானத்து*
*உம்பர் உறைவார் பதி.*

**(ப-ரை)** தவல் அருந்தொல் கேள்வித் தன்மை உடையார்-அழிவில்லாத பழைமையான நூற்கேள்விகளை அறிந்த தன்மையை உடையவராய்: இகல் இலர்-உலக வழக்குகளோடு முரண் இல்லாதவராய்: எஃகு உடையார் தம்முள் முழீஇ-அறிவுக் கூர்மையுடையாராய் விளங்கும் கற்றறிந்தாரோடு கூடி: நகலின் இனிதாயின்-அளவளாவி மகிழ்தலைக் காட்டினும் இனிமையுடையதாயின்: அகல் வானத்து உம்பர் உறைவார் பதி காண்பாம்-அகன்ற வானத்தின் மேல்வாழும் தேவர்களுடைய திருநகரைக் காண முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(க-ரை)** கற்றறிந்த அறிஞர்களோடு கூடி அளவளாவி மகிழ்தலைக் காட்டிலும் இன்பம் வேறு எங்கும் கிடையாது.

8 *கனைகடல் தண்சேர்ப்ப கற்றுஅறிந்தார் கேண்மை*
*நுனியின் கரும்புதின் றற்றே:-நுனிநீக்கித்*
*தூரின்தின் றன்ன தகைத்துஅரோ பண்புஇலா*
*ஈரம் இலாளர் தொடர்பு.*

**(ப-ரை)** கனைகடல் தண் சேர்ப்ப-ஒலிக்கின்ற கடலின் குளிர்ந்த கரையை உடைய தலைவனே! கற்றறிந்தார் கேண்மை-கற்றறிந்தாரோடு கொள்ளும் நட்பு: நுனியின் கரும்பு தின்றற்று-கரும்பை அதன் நுனியிலிருந்து தின்று சுவைப்பதுபோல் இன்பம் பெருக்கும்: பண்பு இலா ஈரம் இலாளர் தொடர்பு-பண்பும் அன்பும் இல்லாதவரோடு கொள்ளும் நட்பு: நுனி நீக்கித் தூரின் தின்றன்ன தகைத்து-கரும்பின் நுனியை விடுத்து அதன் அடிப்பகுதியிலிருந்து அதனைத் தின்றாற் போன்று இன்பம் குறைந்துகொண்டே வரும் தன்மையை உடையது.

**(க-ரை)** நாட்கள் செல்லச் செல்ல கல்லாதார் தொடர்பினால் பெறும் இன்பம் குறைந்துகொண்டே வந்து முடிவில் துன்பமே பிடிக்கும்: கற்றறிந்தார் தொடர்பு மேன் மேலும் இன்பத்தைப் பெருக்கும்.

9. *கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்துஒழுகின்*
*நல்அறிவு நாளும் தலைப்படுவர்-தொல்சிறப்பின்*
*ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு*
*தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.*

**(ப-ரை)** தொல் சிறப்பின் ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புது ஓடு தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு-இயற்கையாக சிறந்த மணத்தையும் ஒளி பொருந்திய மணத்தையும் உடைய பாதிரிப்பூவைச் சேர்ந்ததால் புதிய மட்கலம் தன்னிடம் உள்ள தண்ணீருக்கு அப்பாதிரிப்பூவின் மணத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தந்தாற்போல: கல்லாரேயாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின் நல்லறிவு நாளும் தலைப்படுவர்-தாம் கல்லாதவரேயாயினும் கற்றுத்தேர்ந்த அறிஞர்களோடு சேர்ந்து பழகினால் நல்ல அறிவு நாள்தோறும் சிறிது சிறிதாகப் பெற்று உயர்வடைவர்.

**(க-ரை)** கல்வி கற்காத மூடர்களுக்கும் அவர்கள் கற்றறிந்த அறிஞர்களோடு சேர்ந்து பழகி வர வர நல்ல அறிவு உண்டாகும்.

*10. அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது*
*உலகநூல் ஓதுவது எல்லாம்-கலகல*
*கூஉந் துணைஅல்லால் கொண்டு தடுமாற்றம்*
*போஒந் துணைஅறிவார் இல்.*

**(ப-ரை)** அலகுசால் கற்பின் அறிவு நூல் கல்லாத-மிகுதியான பயன்தரும் நூற்களைக் கற்கவேண்டின் ஒருவன் மெய்யறிவு நூற்களைக் கற்றுத் தேறாமல்: உலக நூல் ஓதுவது எல்லாம்-உலக வாழ்க்கைக்குரிய செயல்முறைகளைக் கூறும் நூற்களைக் கற்பதெல்லாம்: கலகலவென்று கூவும் அளவுக்கே துணையாகும் அல்லாமல்: கொண்டு தடுமாற்றம் போம் துணைஅறிவார் இல்-அவ்வுலக நூற்களின் அறிவுத்துணை கொண்டு பிறவித் துன்பத்தை நீக்கி வீட்டின்பம் பெறும் முறையை அறியக்கூடியவர் எவரும் இல்லை.

**(க-ரை)** பிறவித்துன்பத்தைக்கடந்து விடுதலை பெறுவதற்கு உதவியாக இருக்கும் மெய்யுணர்வு புகட்டும் ஞான நூல்களையே மிகுதியாகக் கற்கவேண்டும்.

God is Love; Live in Love
**அன்பே கடவுள், அன்பில் வாழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி

"ராத்திர" என்ற சொல்லுக்கு யாவும் செயலற்று ஒடுங்கி நிற்றல் என்பது பொருளாகும். இதனால் உயிர்கள் செயலற்று ஒடுங்கி நிற்கும் காலம் ராத்திரி எனப்பட்டது. உண்மையான ராத்திரி என்பது உயிர்கள் ஒடுங்கி யாவும் செயலற்று விளங்கும் காலமாகும். அதுவே மகாசங்கார காலம், பிரளயகாலம், ஊழிக்காலம் எனப்படும். இந்த வேளையில் பஞ்சபூதங்களும் செயலற்று மாயையில் ஒடுங்கி எங்கும் இருள் செறிந்து காணப்படும். அந்த இருளில் உலகம் செயலற்று எங்கும் அமைதி நிலவும். இந்நிலையில் சிவபெருமான் ஒருவரே செயலாற்றுவார். அவரை அடுத்து தேவி அவருக்குப் பூசனை புரிவாள். அந்த அகண்டாகாரமாகிய இரவே சிவராத்திரி எனப்படும். அதனைக்குறிப்பிட எழுந்ததே சிவராத்திரியாகும்.

"ராத்ர" என்பதற்குப் பூசித்தல் என்பதும் ஒரு பொருளாகும். சிவனை பூசிக்கத்தகுந்த இரவே சிவராத்திரி எனப்படும்.

# இயமனும் சிவராத்திரியும்

சிவராத்திரிவேளையில் பெருமானைப் பூசிக்கும் மார்க்கண்டேயனைப் பிடிக்க வந்த யமன் உதைபடுவது, சிவராத்திரி காலங்களில் கொடுமை நிரம்பிய வேடன் விழித்திருந்து வில்வக்கிளையை உதிர்த்ததால் சிவலோகம் செல்ல அதனைத்தடுக்க வந்த யமன் உதைபடுவது பின்னாளில் அவனுக்கு சிவராத்திரி மகிமை உரைக்கப்படுவது என்பன போன்றவை குறித்த கதைகளில் காணப்படும் பொது அம்சமாகும். திருவைகாவூர்ப் புராணத்தில் முன்னர் யமன் விமோசன சுருக்கம் என்ற ஒருபகுதியும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை நோக்கி சிவராத்திரியின் அடிப்படைக் கருத்து ஆன்மாவானது தனது வினைகளை நீக்கிக்கொண்டு யமவாதனையை அகற்றி சிவபெருமானுடன் ஐக்கியமாவதேயாகும். சிவராத்திரியின் நான்காம் காலத்தில் மிருத்துஞ்சய மந்திரத்தை ஓத வேண்டும் என்று பெரியோர்கள் கூறுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

மிருத்துஞ்சய மந்திரம்

**த்ரியம்பகம் யஜாமஹே**
**சுகந்தம் புஷ்டிவர்தனம்**
**உர்வாருகமிவ பந்தனாத் ம்ருத்யோர்**
**முக்ஷீய மாம்ருதாத்**

பொருள்:-

இயற்கையான நறுமணமுடையவரும் கருணையால் அடியார்களை போசித்து வளர்ப்பவருமாகிய முக்கண்ணனை பூசித்து வழிபடுவோம். வெள்ளரிப்பழம் காம்பிலிருந்து விடுபடுவதுபோல சாவினுடைய பிடியிலிருந்து உமதருளால் விடுபடுவோமாக. மோட்சம் என்னும் மார்க்கத்தில் இருந்து விலகாமல் இருப்போமாக.

## சிவராத்திரி தத்துவம்:

உணவும், உறக்கமும் உயிர்க்குப் பகையாகும். இங்கு உணவு வினைகள் அதனைச் செய்யச் செய்ய வினைகள் மூண்டு திரும்பத் திரும்ப பிறக்க நேரும். உறக்கம் என்பது மாயைக்குட்பட்டு மயங்குதலாகும். ஆதலின் உணவு நீக்கம் என்பது வினைகளை அகற்றிக் கொள்வதும், விழித்திருத்தல் என்பது ஆன்மா தன்மை உணர்ந்து கொள்வதும் ஆகும்.

சிவராத்திரியில் ஊண், உறக்கம் ஒழிப்பதென்பது உண்மையில் ஆன்மா வினைகளை வென்று தன்னை உணர்ந்து கொள்வதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வம் லிங்கமயம்:

லிங்கத்திலிருந்தே அனைத்தும் உண்டாயின. அதே போலவே இறுதியில் லிங்கத்திலேயே எல்லாம் அடங்குகின்றன. படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய யாவும் அதிலேயே அடங்கியுள்ளன. எனவே அது லிங்கம் எனப்பட்டது.

## ஹோமங்கள் செய்வதால் ஏற்படும் நன்மைகள்

1. சங்கடஹர சதுர்த்தி தின கணபதி ஹோமம் : தடைகள், கஷ்டங்கள் நீங்க.
2. தட்சிணாமூர்த்தி ஹோமம் : கல்வி, ஞாபக சக்தி பெற.
3. குபேர தனாகர்க்ஷண மஹாலக்ஷ்மி ஹோமம் : ஐஸ்வர்யங்களைப் பெற.
4. ஸ்ரீ சுதர்சன ஹோமம் (ஸ்ரீ விஷ்ணுவுக்கு) : சத்துரு பயம், வியாபாரத் தடை நீங்க.
5. சூரிய நவக்கிரக ஹோமம் : கிரக தோஷம் நீங்க, கண் வியாதிகள் அகல.
6. அதிருத்த மஹன்யாஸ மஹா மிருத்யுஞ்சய ஹோமம் : வியாதிகள் அகல, நீண்ட ஆயுள் கிடைக்க.
7. ஸ்வயம்வரா பார்வதி ஹோமம் : திருமணத் தடைநீங்கி, குழந்தை பேறு கிடைக்க.
8. சந்தான கோபாலகிருஷ்ண ஹோமம் : குழந்தை பாக்கியம் கிடைக்க.
9. மகா சிவராத்திரி ஹோமம் : வியாதிகள் தீர, ஆரோக்கியம் பெற.
10. ஆலஹந்தி ஹோமம் : அன்னம் குறைவில்லாமலிருக்க.
11. சரஸ்வதி தேவி ஹோமம் : கல்விச் செல்வம் பெற.
12. ஸ்ரீ சதசண்டீ மஹாயக்ஞ ஹோமம் : ஆரோக்கியம் மற்றும் சகல செல்வங்களையும் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகேசுர பூசை

மாகேசுரர் என்னும் சொல் மகேசுரனை வழிபடுவோர் என்னும் கருத்துடையது.மாகேசுர பூசையைக் குருபூசை என்று கூறுவர். மாகேசுரர் ஆசாரியாபிஷேகம் பெற்றவர் சமயதீட்சை பெற்றவர் என நால்வகையினர்.

இந் நால்வகை மாகேசுரர்களையும் விதிப்படி பூசித்துத் திருவமுது செய்வித்தல் மாகேசுர பூசை எனப்படும். சிவனடியாருக்குச் செய்யும் பூசையாகும். ஆகவே சிவபெருமானே எழுந்தருளிவந்து திருவமுது செய்கிறார் என்ற எண்ணம் உடையவராய் மிகுந்த அன்புடன் சிவனடியாருக்குத் திருவமுது செய்வித்தல் வேண்டும்.

சிவனடியார்களைப் போசன பந்தியில் இருத்தி பத்திர புஷ்பங்கொண்டு அர்ச்சித்து அவர்முன்னே மலர்களைத்தூவி நமஸ்கரித்தல் வேண்டும். சிவனடியார்கள் போசனஞ் செய்து முடிந்த பின்பு அவர்களுக்கு இயன்ற தட்சணை கொடுத்து வணங்கி வழியனுப்புதல் வேண்டும். அவர்கள் திருவமுது செய்து எஞ்சிய அன்னத்தை மாகேசுர பூசை செய்பவர் உண்ணுதல் வேண்டும்.

விரதங்களை அனுட்டிக்கும் பொழுதும் உபவாச முடிவு காலத்திலும் சிவசாஸ்திரங்களைக் கற்கத் தொடங்கும் போதும் அவற்றைக் கற்று முடிந்த பின்பும், புண்ணிய யாத்திரைக்குப் புறப்படும் பொழுதும், யாத்திரை முடிந்தபின்பும் ஆலயத்தில் மகோற்சவங்கள் நடைபெறும்பொழுதும், பிரதிட்டை முதலிய விசேட கிரியைகள் நிகழும் போதும், சிவதீட்சை பெற்றபொழுதும் குருவிடத்தே சிவலிங்க பூசைமுறையை பெற்றுக்கொண்ட பொழுதும் மாகேசுர பூசை செய்தல் வேண்டும்.

சமய குரவர், சந்தான குரவர், அறுபத்துமூன்று நாயன்மார் ஆகியோர் முத்தியடைந்த மாத நட்சத்திரங்களிலும் மாகேசுரபூசை செய்தல் வேண்டும். மாகேசுர பூசைக் காலத்தில் வரும் முடவர், வயோதிபர், வியாதியாளர், வறியவர் என்பவர்களுக்கும் உணவளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீலகண்டப் பதிகம்

திருஞானசம்பந்தர் திருத்தொண்டர்கள் சூழக் கொடிமாடச் செங்குன்றூரில் வீற்றிருந்த போது பனிகாலம் வர பெரும்பாலோர் பிணியுற்றனர். குளிர்சுரம் கொண்டு வாடினர். இதனை ஞானசம்பந்தர் திருமுன் சென்று இறைஞ்ச அவர் இது இந்நிலத்தின் இயல்பு எனினும் நமக்கு எய்தப் பெறா என்று அவ்வினைக்கு இவ்வினை என்னும் திருப்பதிகம் அருளினார். இப்பதிகம் அக்கொடிமாடச் செங்குன்றூர் மட்டுமன்றி நாடு முழவதும் பிணிநோய், வறுமைகள் தீர்ந்தமை இறையருளாகும்.

இப்பதிகம் நோய், பிணி நீங்கவும் நாடு நல்வாழ்வு வழிகாட்டும் பதிகமாகும். இதனை நாம் அனைவரும் படித்து நாட்டில் சாந்தி சமாதானம் மலர வழிசமைப்போமாக.

பண்:- வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

*அவ்வினைக் கிவ்வினையாமென்று சொல்லு ம∴தறிவீர்*
*உய்வினை நடாதிருப்பதும் உந்தமக் கூனமன்றே*
*கைவினை செய்தெம் பிரான் கழல் போற்றுது நாமடியோம்*
*செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம் 01*

**தெளிவுரை:** முன் செய்த வினையின் பயனாக இப்போது, இப்பிறவியில் யாம் துன்பம் அடைகின்றோம் என்று சொல்பவர்களே! இதனைப் பிராரத்தகன்மம் என்று அறிந்து உரைப்பவர்களே! இதிலிருந்து உய்தி பெற்றுக் கடைத்தேறும் வழியை நாடிச் செய்யாமல் இருப்பதும் உமக்குக் குறைவு தந்து ஊனத்தைத் தரும் அல்லவா! எனவே, அக்குறையைப் போக்க, கைகளால் செய்யும் செயலாகிய மலர் பறித்தல், குவித்து வணங்குதல் போன்ற செயல்களைச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடைய தலைவனாகிய ஈசன் திருவடியைப் போற்றுவோமாக. நாமெல்லாம் அப்பெருமானின் அடியவர்கள், ஆகையால் வினையானது வந்து தீண்டாது. திருநீலகண்டம் அவ்வினையை நிர்மூலமாக்கும் என்றவாறு.

**சிறப்புரை:** செய்வினை என்பது, செய்தவினை, செய்யும் வினை, செய்ய இருக்கும் வினை ஆகிய முக்கால நிகழ்ச்சியும் குறிக்கவல்லது - வினைத்தொகை.

நாம் அடியோம் என்ற தன்மையில் எமைத் தீண்டப் பெறா என்பது நம்மைத் தீண்டப் பெறாது என்னும் குறிப்பு ஆயிற்று.

நஞ்சனைய வினையாயினும் நஞ்செனும் நீலகண்டம், தன்வயத்தில் ஈர்த்து, மன்னுயிர்களின் வினைகளை நீக்கவல்லது என்பதும் குறிப்பாம். வினை – நல்வினை தீவினை.

*காவினை யிட்டுங் குளம்பல தொட்டும் கனிமனத்தால்*
*ஏவினை யால்எயில் மூன்றெரித் தீரென்றிரு பொழுதும்*
*பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்*
*தீவினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்* 02

**தெளிவுரை:** மலர்ச் சோலைகள் அமைத்தும் திருக்குளம் தோண்டியும், கனிந்த மனத்துடன், முப்புரம் எரித்த ஈசனே எனக்கொண்டு காலை மாலை ஆகிய இருவேளையும் பூப்பறித்து மலரடி போற்றுவீராக. நாம் அனைவரும் அடியவர்களாய் ஈசனுக்குத் தொண்டு புரிபவர்கள். தீயவினையானது வந்து நம்மைத் தீண்டித் துன்பம் தராது. தீருநீலகண்டம் துணை நின்று தடுத்துக்காக்கும். காவினை - பூஞ்சோலைகள் அமைத்தல்.

*முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்*
*விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்*
*இலைத்தலைச் சூலமும் தண்டு மழுவும் இவையுடையீர்*
*சிலைத் தெமைத் தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம்* 03

**தெளிவுரை:** காம நுகர்ச்சியின் வயங்கொண்டு, கொள்ளும் போகங்களால் நின் திருவடிக்கழலை விலகிச் சென்று தலைப்பட்டு அலையாத வண்ணம், ஆளாகக் கொண்டு, எம்மை ஆட்கொண்ட சடையுடைய ஈசனே! சூலமும் மழுவும் திருக்கரத்தில் உடைய பெருமானே! ஆரவாரம் செய்து மலைபோல் பெருகிவரும் தீவினையாது, எம்மைத் தீண்டவிடாது திருநீலகண்டம் காத்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விண்ணுல காள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்*
*புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே*
*கண்ணிமை யாதன மூன்றுடை யிருங் கழலடைந்தோம்*
*திண்ணிய தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம்* 04

**தெளிவுரை:** விண்ணுலகத்தில் விளங்குகின்ற வித்தியாதாரர்களும், வேதவிற்பன்னர்களும் புண்ணியர் என்று இருவேளையிலும் தொழப்படுகின்ற புண்ணியரே! இமைத்தல் புரியாத மூன்று கண்களை உடையவரே! உமது திருவடியை அடைந்தோம். திணிக்கப்பட்டு வரும் தீவினையானது தீண்டப் பெறாமல் திருநீலகண்டம் காக்க.

*மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் தோளுடையீர்*
*கிற்றெமை யாட்கொண்டுகேளா தொழிவதுந் தன்மை கொல்லோ*
*சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடியெ யடைந்தோம்*
*செற்றெமைத் தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம்* 05

**தெளிவுரை:** இணையில்லாத மலைபோன்ற திரட்சியான தோள்களை உடைய பெருமானே! வலிமையுடன் உறுதியாக எம்மை உமது ஆளாக்கிக் கொண்ட பின்னர், எம்மைப் பாராமுகமாய் விடுவதும் நற்பண்பு ஆகுமோ! வெறும் வாய்ச் சொற்கள் வாயிலாகத் துணை என்று சொல்லப்படுகின்ற வாழ்க்கையைத் துறந்து, உம்முடைய திருவடியே சரண் என்று அடைந்தோம். தீவினையானது எம்மைச் செற்றுத் தீண்டப் பெறாது, திருநீலகண்டம் விளங்குமாக.

**சிறப்புரை:** கர்ம பூமியாகிய இம்மண்ணுலகத்தில் வாய்ச்சொற்களால் அமையப் படுகின்ற உறவுகள், பற்றுகள் யாவும் மாயும் தன்மை உடையன என்பதும், அவை கர்மத்தை நுகர்வதற்கே வாய்த்தவை என்பதும், ஈசன் பொற்கழலே உண்மையாகப் பற்றக்கூடிய பொருள் என்பதும் "சொற்றுனை வாழ்க்கை" என்பது உணர்த்துவதாயிற்று.

ஞானப்பால் தந்து ஞானசம்பந்தர் ஆட்கொள்ளப்பட்ட நிலையானது, ஈசனார் வலிந்து வந்து ஞானம் பொலிந்த பெருங்கருணையும் அதன் உறுதியின் சிறப்பும்தோன்ற "இற்றெமை ஆட்கொண்டு" என்பது உணர்த்தியது. இதன் தன்மையினை "கிற்றவா! மனமே கெடுவாய் உடையான்" என மாணிக்கவாசகர் உரைத்தமையும் காண்க.

கிற்று- வலிமை கொண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கும் மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமையேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம் 06

**தெளிவுரை:** உலக மாயையால் மறக்கும் தன்மையுடைய மனத்தை மாற்றி, எம்மை வற்புறுத்திப் பிறவாப் பெரியோனாகிய நின் திருவடிக்கு ஆளாக்கி, நெஞ்சில் மாசற்ற நிலையாய்ச் செய்து, மலர்தூவி உம்மை ஏத்திப் பணி செய்யும் அடியவர்கள் நாங்கள். பெருமானே! எக்காலத்திலும் சிறப்பினைப் பெறாத தீவினையானது தீண்டப் பெறாது, திருநீலகண்டம் துணை நிற்க.

**சிறப்புரை:** ஈசனார் திருவடியானது, திரு உந்து அடியாக விளங்கி முத்திப்பேறு நல்குதலும், மன்னுயிரை, மாயத்தளையிலிருந்து திருந்தி வரச் செய்யும் அடியாதலும், குறிக்குமாறு திருந்தடி என உணர்த்தப் பெற்றது.

*கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே*
*உருகி மலர்கொடு வந்துமை யேத்ததும் நாமடியோம்*
*செருவில் அரக்கனைச் சீரிலடர்த்தருள் செய்தவரே*
*திருவிலித் தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம்* *07*

**தெளிவுரை:** இப்பிறவியில் உமது தருவடிக்கு மலர் தூவிப் போற்றுகின்ற செயலைப் புரிந்து உருகி நின்று, மீண்டும் பிறவா நிலையைப்பெறுவதற்கு ஏத்தும் அடியவர்கள் ஆயினம், பகை ஏதும் இல்லாதவனாயினும் வினைவலி காரணமாகி, சீர் அற்ற செயலைப் புரிய, அடர்த்துப் பின்னர் அருள் செய்த பெருமானே! எம்மைத் திருவற்ற தீவினையானது தீண்டப் பெறாது, திருநீலகண்டம் விளங்குக.

கருவைக் கழித்திட்டு - பிறவி நீக்குதல், பிறப்பறுத்தல்.

*நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணண் வாதுசெய்து*
*தோற்ற முடைய அடியும் முடியும் தொடர்வரியீர்*
*தோற்றினுந் தோற்றும் தொழுது வணங்குது நாமடியோம்*
*சீற்றம் தாம்வினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம்* *08*

**தெளிவுரை:** மணம் மிக்க தாமரை மலரில் விளங்கும் பிரமனும், திருமாலும், ஒருவருக்கு ஒருவர் வாதுபுரிந்து அடிமுடி காணாத பெருமானே! காணப் பெறினும் பெறுவீர் நீவிர்! யாம் உம்மைத் தொழுது வணங்கும் அடியவர்கள். சீற்றம் கொள்வதாகிய வினையானது தீண்டப் பெறாது, திருநீலகண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கியமின்றி யிருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 09

**தெளிவுரை:** சமணரும் சாக்கியரும் பாக்கியம் அற்றவராய் இருதலைப் போகமாக விளங்கும் இம்மை நலமும் மறுமைப் பேறும் பற்றுகின்ற தன்மையை ஒழித்தனர். கொன்றை மலரைச் சடைமுடியில் தரித்த பெருமானே! உமது திருவடியைப் போற்றுகின்றோம். தீக்குழியைப் போன்று கனல்வீசும் தீவினையானது எம்மைத் தீண்டப் பெறாது, திருநீலகண்டம்.

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில் இமையவர் கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 10

**தெளிவுரை:** எம்செல்வனாகிய ஈசன் கழலடியில் சேர்வதற்காக வழங்கப்பட்ட இப்பிறவியில், மீண்டும் பிறவி இருக்குமானால், திறன் மிக்க ஞானசம்பந்தன் செந்தமிழாகிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள், விண்ணுலகத்தில் தேவேந்திரனுடன் சேர்ந்திருப்பார்கள்.

**சிறப்புரை:** உயிர்கள் கொள்ளும் எழுவகைப் பிறப்புக்களாகிய, 1. தாவரம்: 2. நீர்வாழ்வன: 3. ஊர்வன: 4. பறப்பன: 5. விலங்குகள்: 6. மனிதர்: 7. தேவர் ஆகியவற்றுள் உயர்ந்ததாகிய தேவர் பிறப்பு கொள்வார்கள் என்பதனை வானவர் கோனோடும் கூடுவரே என்பது உணர்த்துவதாயிற்று. இது இத்திருப்பதிகத்தின் பயன் கூறுவதாயிற்று.

திறம் பயில் - உறுதி வாய்ந்த.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் களையும் திரு ஆலவாய் திருப்பதிகம்

சைவ வாழ்வை உணர்த்தவும், இடர்களை நீக்கவும், ஒருவர் செய்கின்ற தீவினை அவரிடமே திரும்ப செல்லவும் அதனால் அவர்கள் நல்வினை பெறவும் வழிகாட்டுவது திருஞானசம்பந்தப்பெருமான் திருஆலவாய் என்னும் தலத்தில் திருவாய்மலர்ந்த பதிகமாகும். இப்பதிகத்தை காலை மாலை பாராயணம் செய்பவர்கள் சிவமாம் தன்மை பெறுவார்கள் என்பது உறுதி. வெப்புநோயால் வாடிய பாண்டியமன்னன் சீர்நின்ற நெடுமாற நாயனார் என்னும் பேறுபெற்றார்.

இன்று எமது நாட்டின் துயர்களையவும், நாம் நல்வாழ்வு வாழவும் தினம் காலை மாலை பாராயணம் பண்ணி இறையின்பம் துய்ப்போமாக.

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்சல் லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வும்சுடர்
பைய வேசென்று பாண்டியற்கு ஆகவே 01

**தெளிவுரை:** எமக்குப் பாதுகாவலாக விளங்கும் பெருமானே! திரு ஆலவாயில் கோயில் கொள்ளும் தலைவனே! அஞ்சாதே என்று அருள் செய்வீராக. பொய்த்தன்மை உடையவராகிய அமணர்கள் என்னை எரிக்குமாறு பற்றவைத்த நெருப்பானது மெல்லச் சென்று பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

**சிறப்புரை:** ஈசன், சிவந்த திருமேனியராக விளங்குதலையும், அப்பெருமான் யாவற்றினையும் விளைவிக்கும் அடித்தளமாகத் திகழ்தலையும், பாதுகாவலாக மேவி இருத்தலையும் சுட்டுமாறு, "செய்யன்" என்று உணர்த்தப் பெற்றது. ஈசனை உள்கி, பாண்டியனின் மாண்பினையும் உள்கி, "பாண்டியர்க்கு ஆகவே" என்று அளிக்கப்பெற்ற ஆணையானது, அவ்வரசனுக்கு சைவத்தின் மெய்ப்பாங்கை உணரச் செய்யும் வெப்புநோய் ஆக்கப்பெறுதற்கும், பின்னர் நின்ற சீர் நெடுமாறன் ஆவதற்கு உரிய முகாந்தரம் ஆகுதற்கும் வழியாயிற்று. செய்ய - சிவந்த, நிலம், (சேறு), காவல், நெறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராம்அம ணர்கொளு வும்சுடர்
பத்தி மன்தென்னன் பாண்டியற்கு ஆகவே. 02

**தெளிவுரை:** ஈசன், எல்லாவிதமான ஆற்றல்களையும் உடைய சித்தர், திருஆலவாயில் மேவி விளங்கும் அன்பிற்குரியவர். "அஞ்சாதே" என்று அருள்புரிவீராக. வஞ்சனையுடைய அமணர்கள் என்னை எரிக்குமாறு பற்றவைத்த நெருப்பானது, சமணப்பற்றுடைய பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

**சிறப்புரை:** ஈசன், யாவும் செய்யவல்ல ஆற்றலுடைய பெருமான் என்பதனைச் சித்தன் என்னும் சொல்கொண்டு சுட்டறப்பெறுவதாயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர் "அத்தனே ! அண்டர் அண்டமாய் நின்ற ஆதியே! யாதும் ஈறில்லாச் சித்தனே! பத்தர் சிக்கெனப் பிடித்த செல்வமே! சிவபெருமானே!" (பிடித்தபத்து எட்டு) என அருளிச்செய்தவண்ணம் காண்க.

என் சித்தத்தில் வீற்றிருக்கும் பெருமானே! என்று போற்றும் தன்மையில், சித்தனே என அருளியதாயிற்று எனலும் பொருந்தும். அன்பிற்குரியவராகிய ஈசனை " அத்தனே" என ஏத்தப்பெற்றது. இத்தன்மையில், "அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்" என மாணிக்கவாசகரும், "அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே" என சுந்தமூர்த்தி சுவாமிகளும், "முத்தனே முதல்வா தில்லை அம்பலத்தாடுகின்ற அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே" எனத் திருநாவுக்கரசரும் அருளிச் செய்த பாங்கும் நோக்குக.

தற்போதைய நிலையிலிருந்து மாறி நாயனாராக திகழவிருக்கும் மாண்பினைப் புகழும் அருட்குறயாக, "பத்திமன் தென்னன் பாண்டியர்க்கு என்னும் சொற்றொடர் உணர்த்துதலாயிற்று.

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேஅஞ்சல் என்றருள் செய்எனை
எக்க ராம்அம ணர்கொளு வும்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே 03

**தெளிவுரை:** தக்கன் செய்த தீய வேள்வியைத் தகர்த்து அருள்தன்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிய ஆலவாயில் மேவும் சொக்கநாதனே! அஞ்சாதே என உரைத்தருள்வீராக. செருக்குடைய அமணர்கள் என்னை எரிக்குமாறு செய்வித்த தீயானது அத்தகையோர் பக்கமே சார்ந்து சென்று, பாண்டி மன்னனுக்கு ஆகுக.

**சிறப்புரை:** இத்திருப்பாட்டானது, இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசனின் திருநாமத்தை ஓதியருளிய வண்ணம் ஆயிற்று.

சிட்ட னேதிரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேஅஞ்சல் என்றருள்
துட்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டிமன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 04

**தெளிவுரை:** நன்நெறியாக விளங்கும் பெருமானே! திருஆலவாயின்கண் மேவிய அட்டமூர்த்தியே! அஞ்சாதே என உரைத்தருள்வீராக. தீய குணத்தையுடைய அமணர் என்னை எரிக்கும் தன்மையில் வைத்த நெருப்பானது, கல்வியில் வல்லவனாகிய பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

**சிறப்புரை :** ஞானமும் நல்லொழுக்கமும் உடைய ஈசனின் தன்மை சிட்டனே என உரைக்கப்பெற்றது. இத்தன்மையில் திருநாவுக்கரசர்.

சிட்டர் வானவர் சென்று வரம் கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும் அச்
சிட்டர் பால் அணு கான்செறு காலனே.

-5ம் திருமுறை, பா. வ.எண் 6-

என அருளிச் செய்தமை காண்க.

ஈசன் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் மற்றும் சூரியன், சந்திரன், ஆன்மா எனவாகிய தன்மையினை அட்டமூர்த்தியானவன் என சுட்டப்பெற்றது.

பாண்டிய மன்னன் கல்வியறிவுபெற்றவனாதலும், ஆயினும் மெய்க் கல்வியை உணராத நிலையை மாற்றி ஞானத்தை உணர்பவனாய் ஆக்கும் அருட்குறிப்புத் தோன்ற, "பட்டிமன் தென்னனை" எனச் சுட்டப்பெற்றது.

சிட்டன் - ஒழுக்கமுடையவன், ஞானி, ஈசன். துட்டர்- கொடியவர். பட்டிமன்- கல்வியறிவுடையவன், கூன் பாண்டியனைச் சுட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ண லார்புர மூன்றெரி ஆலவாய்
அண்ண லேஅஞ்சல் என்றருள் செய்எனை
எண்ணி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யற்றமிழ் பாண்டியற்கு ஆகவே 05

**தெளிவுரை:** பகைமைகொண்டு திரிந்த அசுரர்களின் மூன்று புரங்களை எரிசெய்த ஆலவாய் அண்ணலே! அஞ்சாதே என்று அருள் செய்வீராக. என்னை எரிக்கும் முனைப்புக் கொண்டவராய், நல்ல எண்ணம் இல்லாதவராகிய அமணர் கொளுத்திய நெருப்பானது பண்ணின் இசையுடன் தமிழ் வழங்கும் பாண்டியர்க்கு ஆகுக.

**சிறப்புரை :** திருஞானசம்பந்தர் தமது அடியார் திருக்கூட்டத்துடன் வீற்றிருந்த திருமடத்தில் தீவைத்து ஊறுவிளைக்கப் பெற்றதாயினும் பாண்டியன் பேணிய தமிழ்ப்பண்பின் செம்மை நனி உரைக்கப்பெற்ற பாங்கில் பண்ணியற்றமிழ் பாண்டியன்" எனச் சுட்டப்பெற்றது.

தஞ்சம் என்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்சல் என்றருள் ஆலவாய் அண்ணலே
வஞ்சம் செய்துஅம ணர்கொளு வும்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற் காகவே 06

**தெளிவுரை:** ஆலவாயில் வீற்றிருக்கும் அண்ணலே! தஞ்சமென்று உன்னைச் சரண்புகுந்த என்னை அஞ்சாதே என்று உரைத்தருள் புரிவீராக. வஞ்சம் உடையவராகிய அமணர்கள் என்னை எரிக்கும் தன்மையில் கொழுத்திய நெருப்பானது பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாஅஞ்சல் என்றருள் செய்எனை
கங்கு லார்அமண் கையர் இடும்கனல்
பங்கமில் தென்னவன் பாண்டியற்கு ஆகவே 07

**தெளிவுரை:** கனல்போன்ற விழியுடைய வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவரே! திருஆலவாயில் வீற்றிருக்கும் அழகிய விழி உடையவனே! "அஞ்சேல்" என உரைத்தருள்வீராக. என்னை எரிக்குமாறு இருள்கொண்ட நெஞ்சினராகிய அமணர்கள் வைத்த நெருப்பானது. பங்கம் இல்லாத பாண்டியனுக்கு ஆகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புரை: திருமடத்திற்கு தீ வைத்த செயலானது அரசின் செங்கோல் முறைமைக்கு பங்கமாயிற்று என வலியுறுத்தும் பாங்கிலும், ஆயினும் அரசனுக்கு இழிவு நேர்தல் ஆகாது. என்னும் கருத்திலும், "பங்கம் தென்னன்" எனச் சுட்டப்பெற்றது.

தூர்த்தன் வீரம் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்த னேஅஞ்ச என்றருள் செய்எனை
ஏத்தி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற்கு ஆகவே 08

**தெளிவுரை:** தீய பண்புடையவனும் சிந்தை திரிந்தவனுமாகிய இராவணனுடைய வீரத்தை அழித்து வாளும் வாழ்நாளும் நல்கி அருள்புரிந்தும், திகழும் ஈலவாய் நாதனே! அஞ்சேல் என்று உரைத்தருள்வீராக நன்கு ஏத்திப் போற்றுதற்கு உரியவராக இல்லாத அமணர்கள் என்னை எரிக்குமாறு கொளுத்தி வைத்த நெருப்பானது பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

**சிறப்புரை :** சிவபெருமானால் ஞானப்பால் அளிக்கப்பெற்று ஆளுடைய பிள்ளையாராய் விளங்கும் திருஞான சம்பந்தரை, ஏத்திப்போற்றி, பல நன்மைகளும், இக, பர நலன்களையும் கொள்ளாது அஞ்ஞானத்தால் மயங்கிய நிலையில் மேவிய தன்மை ஏத்திலா அமணர் எனச் சுட்டிற்று.
பார்த்திவன் - அரசன்

தூவி னானயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாய்அருள்
தூவி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற்கு ஆகவே 09

**தெளிவுரை:** உலகத்தைத் தாவி அளக்க, நெடி உயர்ந்தவராகிய திருமாலும், அயனாகிய பிரமனும் அறியாத வகையில் மேவிய நாதனே! திருஆலவாயில் வீற்றிருக்கும் பெருமானே! அருள்புரிவீராக. தூய்மை இல்லாத அமணர்கள் கொளுத்திய நெருப்பானது விரைந்து சென்று பாண்டியனுக்கு ஆகுக.
அளவிலா - தூய்மையில்லாத, ஈசனை மலர்தூவிப்போற்றாத தன்மை உடையமையைக் குறித்தலும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்தி சைக்கு எழில் ஆலவாய் மேவிய
அண்ட னேயஅஞ்சல் என்றருள் செய்எனைக்
குண்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் தென்னன் பாண்டியற்கு ஆகவே 10

**தெளிவுரை:** எட்டுத்திசைகளிலும் எழில்பரவும் பெருமை விளங்கும் ஆலவாயில் மேவிய அண்டர் நாயகனே! அஞ்சேல் என்று அருள் செய்வீராக. சிறுமையுடைய அமணர்கள் என்னை எரிக்குமாறு கொளுத்திய நெருப்பானது, தொன்மையாக விளங்கும் பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

**சிறப்புரை :** அண்டங்களுக்கு எல்லாம் நாயகனாகிய அரசனின் சிறப்பு, "அண்டனே" எனச் சிறப்பித்து உரைக்கபெற்றது. இது அண்டங்கள் யாவும் ஆகியவன் ஈசன் எனவும் உணர்த்தும். இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "அண்டா! நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே" என அருளிச்செய்துள்ள பாங்கும் காண்க.

பாண்டிய நாடு ஈசன் வீற்றிருந்து அருள்வளம் கொண்ட பழம் பதியாகிய சிறப்பினைப் "பாண்டிமன்" எனச் சுட்டுமாறு கொள்க. இத்தன்மையில், மாணிக்கவாசகர் "பாண்டிநாடேபழம்பதியாகவும், பக்தி செய் அடியாரைப் பரம்பரத்து உய்ப்பவன்" என அருளிய வண்ணமும் காண்க.

அப்பன் ஆலவாய் ஆதி அருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்கு
ஒப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே 11

**தெளிவுரை:** திரு ஆலவாயில் வீற்றிருக்கும் ஆதி மூர்த்தியாகவும், என் தந்தையாகவும் விளங்கும் ஈசனின் திருவருளால், நெருப்பின் வெப்பமானது பாண்டிய மன்னன்மீது பொருந்துமாறு, உலக நியதிக்கு ஏற்ற தன்மையில் ஞானசம்பந்தன் உரைத்த இத்திருப்பதிகத்தைச் சொல்ல வல்லவர்கள், தீமையினால் பற்றப்படாது செல்வந்தர்களாகத் திகழ்வார்கள்.

**சிறப்புரை :** ஈசனை அப்பன் எனக் குறிப்பிட்டுச் சுட்டப் பெற்றமை **காண்க.** இத்தன்மையில் "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என மாணிக்கவாசகரும், "அப்பன் நீ அம்மை நீ" எனத் திருநாவுக்கரசரும் ஈசனை ஏத்திஅருளிச் செய்துள்ளமையும் காண்க.

அப்பன்-தந்தை, கடவுள், கங்கை தரித்தவன், எனவும் (அப்பு-நீர்) குளிர்ச்சி பொருந்திய பிரான் உனக் கொள்ளுதலும் சிறப்புடையது.


திருச்சிற்றம்பலம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மலர்களும் பழங்களும்





பலவித வர்ணங்களின் பார்ப்பதற்கே அழகான சிருஷ்டியாக அமைந்திருப்பவை மலர்கள். அவற்றின் வாழ்க்கை மிகக் குறுகியது. ஆனால் அந்த சொற்ப நேரத்திலேயே அது காற்றில் மணம் நிரப்பி நம்மை எல்லாம் மகிழ்விக்கிறது. தன்னிடம் உள்ள மகரந்தத்தை வண்டுகளுக்கு கொடுத்துவிடுகிறது. தன்னுடைய பெருமையை எந்தவிதமாகவும் வெளிப்படுத்திக்கொள்ளாமல் தியாக உணர்வுடன் சேவை செய்கிறது.

அதேபோலப் பழங்கள் மரத்தின் சத்து அவ்வளவையும் உறிஞ்சி எடுத்து மனிதனும், மிருகங்களும், பறவைகளும் வாழ உணவாகக் கொடுக்கிறது. தகுந்த பக்குவத்தில் இனிமையுடன் தன்னைப் பிறருக்கு உணவாக ஈந்து தியாகம் செய்துகொள்கிறது. பழத்தைப் பறிக்காமல் விட்டுவிட்டாலும் அது கனிந்து உதிர்ந்து மண்ணுடன் கலந்து தனது சதையைப் புழு பூச்சிகளுக்கும் வித்தை மண்ணில் மீண்டும் உயிர்ப்பிக்கவும் கொடுத்து உதவுகிறது.

மலர்களும் கனிகளும் இயற்கையின் வடிவங்களில் தியாக உணர்வைக் காட்டும் அற்பமான சின்னங்கள். அதனால் அவை இரண்டும் ஆண்டவனுக்கு மிகவும் உகந்தவையாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பூரதீப பலன்

கற்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி அக்கினி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஓர் பற்றுமில்லாமல் முற்றும் கரையப்பெற்றது ஆகாயத்துடன் கலந்து அத்துவிதமாய் விளங்கல் போல ஆன்மா வெண்மை நிறமான சாத்துவித குணத்தைப் பொருந்தி, ஞானாக்கினி பற்றியவிடத்தே பசுந்தன்மை நீங்கிச் சிவத்தன்மை விளங்கப்பெற்று, தூலசூக்கும சாரீரங்கள் நீங்கப்பெற்று எல்லாப்பற்றுங்கழன்று சிவபெருமானோடு கலந்து அத்துவிதமாய்ப் பேரானந்தப் பெருவாழ்வு அடைதல் வேண்டுமென்னும் குறிப்பை உணர்த்துவதற்காகக் கற்பூர ஆராதனை செய்யப்படுகின்றது.

# தீபவகைகளும், தீபம் ஏற்றலும்.

## *தீபம் ஏற்றும் நேரம்*

காலை மூன்று மணி முதல் ஐந்து மணிக்குள் தீபம் ஏற்றுவது வீட்டில் சர்வமங்கள யோகத்தை உண்டாக்கும்.

வேலை வேண்டுவோர், நல்ல கணவன் வேண்டுவோர், புத்ரசுகம் வேண்டுவோர், சாயங்கால வேளையில் தீபம் ஏற்றி மகாலட்சுமியை வழிபட அப்பலன்களை அடையலாம்.

வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நெய், விளக்கெண்ணெய் இந்த ஐந்தும் கலந்து ஊற்றி எவன் ஒருவன் ஒரு மண்டலம் பூஜை செய்கின்றானோ அவனுக்கு தேவியின் அருள் மந்திரசக்தி போன்றவை ஏற்படும்.

விளக்கை வடக்கு திசையிலேற்றி வழிபட்டால் நிறைவான பொருள் வசதி சித்திக்கும். திருமணத்தடை நீங்கும். அறிவு வளர்ச்சியடையும்.

விளக்கை கிழக்குத் திசையில் ஏற்றி வழிபட்டால் துயரங்கள் யாவும் விலகும். மேற்குத் திசையில் விளக்கு ஏற்றி வழிபட்டால் கடன் தொல்லையை நீக்குவதோடு விரோதங்களையும் போக்கும். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகங்களின் பீடிப்பையும் நிவர்த்திக்கும். ஆனால் எந்த நிலையிலும் தெற்குத் திசை நோக்கி விளக்கு ஏற்றுதல் கூடாது.

## மயில்

இது முருகப் பெருமானுக்குச் சிறப்பாக உரியது. சூரபத்மனை வேலால் பிளந்து ஞானமீந்து மயிலாக்கி அடிமைகொண்டது.

முருகன் அழகுடையவன். அதை விளக்க அழகுள்ள மயிலை வாகனமாக்கினார். மயிலின் காலின் கீழ்ப் பாம்பு இருக்கிறது. அது சக்தியைக் குறிப்பது. சக்தியை அடக்கி ஆளும் சக்தி வடிவேலன் தான் என்பது.

திரோதான சக்தியாய், ஆன்மாக்களின் ஆணவ மலத்தை முதிர்வித்துப் போக்கி அருட்சக்தியாய் மலத்தை முதிர்வித்துப் போக்கி, அருட்சக்தியாய் நின்று ஆட்கொள்பவர் தாமே என்பது.

பிரணவத்தைப் பீடமாய்க்கொண்டு மேலாய் விளங்குபவர் தாமே என்பது.

விந்து தத்துவமாகிய சக்தியே உலகத்தை விரித்துக் காட்டுவது. அச்சக்தியின் விரிவை விளக்கவே மயில் தோகையை விரித்த வாகனமாய் இருப்பது என்று இன்னோரன்ன பல கருத்துக்களைக் கூறுவர்.

### நவக்கிரகங்களுக்குப் பிரியமான நிவேதனப் பொருட்கள்

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | - | சூடு ஆறாத சர்க்கரைப் பொங்கல் |
| சந்திரனுக்கு | - | பால் பாயாசம் |
| செவ்வாய்க்கு | - | பொங்கல் |
| புதனுக்கு | - | புளியோதரை |
| குருவுக்கு | - | தயிர்சாதம் |
| சுக்கிரனுக்கு | - | நெய்ப் பொங்கல் |
| சனீஸ்வரனுக்கு | - | எள் சாதம் |
| இராகுவுக்கு | - | உழுந்து சாதம் |
| கேதுவுக்கு | - | கொள்ளுப் பொடி கலந்த அன்னம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அமைதிக்கு வழி ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மனிதனுக்கு ஒரு வேலையைச் செய்ய பாமர அறிவும் சூட்சும அறிவும் தேவைப்படுகிறது. பாமர அறிவைத் தனது கல்வியினால் பெற்று எவன் ஒருவன் காரியம் செய்ய இறங்கும்போது அதில் நல்ல பலன் கிடைக்க சூட்சும அறிவை தூண்டிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. "ஓம்" என்பது மேலான உண்மைப் பொருளைக் (Supreme Realty) குறிப்பிடுவது. அதைச் சொல்லுவதன் மூலம் மனம் உயர்ந்த நிலைக்கு எழுகிறது.

சாந்தி என்பது அமைதியைக் குறிக்கும் சொல்லாகும். நம்மை வழிப்படுத்தும் சக்திகளை அமைதியைத் தரும்படி வேண்டிக்கொள்வதற்கே "சாந்தி" என்று சொல்லுகின்றோம். மூன்று முறை சாந்தி என்று சொல்லுவது நமக்கு தடைகளை ஏற்படுத்தக்கூடிய மூன்று வாய்ப்புக்களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதற்கே ஆகும். அந்த மூன்று தடைகள் என்ன?

1.ஆதிதைவிகம் 2. ஆதிபௌதிகம் 3. ஆத்யாத்மிகம்

ஆதிதைவிகம் என்பது மின்னல், இடி, மழை, பூகம்பம் போன்ற இயற்கையினால் ஏற்படக்கூடிய கேடுகள். அதனால் இதைத் தவிர்க்க முதன்முறை "சாந்தி" என்று சொல்லும்போது உரக்கச் சொல்கின்றோம். ஆதிபௌதிகம் என்பது சுற்றிலும் உள்ள சத்தம், மிருகங்கள், பறவைகளால் ஏற்படும் தொந்தரவு, பூச்சிகளின் உபத்திரவம் போன்ற இடையூறுகளைக் குறிப்பிடுவது. இத்தகைய சூழ்நிலையால் ஏற்படும் தடையை வெல்ல சற்று மெதுவாகவே இரண்டாவது "சாந்தி" யைக் கூறுகின்றோம். மூன்றாவதான ஆத்யாத்மிகம் என்பது நம்முடைய உடலின் நோயாலும், உள்ளத்தின் சஞ்சலத்தாலும் ஏற்படும் தடையைக் குறிப்பிடுவது. இதைக் கடந்து அமைதிப்படுத்திக்கொள்ள மூன்றாவது "சாந்தி"யை மிக மெதுவான இரகசியமான குரலில் சொல்லி முடிக்கின்றோம். கண்ணை மூடிக்கொண்டு இந்தப் பிரார்த்தனையை இப்படி முறைப்படி சொல்வதனால் சொல்பவருக்கும் அவரைச் சேர்ந்தவருக்கும் நன்மையும், மனஅமைதியும் கிடைக்கும்.

-சுவாமி.ஏ.பார்த்தசாரதி.-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவங்களும் ரோகங்களும்

விலக்கப்பட்ட பாவங்களைச் செய்தால் நரகத்தில் துன்பங்கள் அனுபவிக்க வேண்டும். சில பாவங்களுக்கு பிறவி எடுத்து அனுபவிக்கவும் வேண்டும். நோய்கள் வந்து தீர்க்கப்படமுடியாவிட்டால் அவற்றைக் கர்மநோய்கள் என்று உலகத்தார் கூறுவர். சிலவற்றை இதன் கீழ்க்காண்க.

சிவபெருமானை நிந்தித்தல், குருவை நிந்தித்தல், குருபத்தினியை நிந்தித்தல் முதலியன செய்தால் முயலகன் நோயால் வருந்துவர்.

குருவை, அந்தணரை கோபித்தால் மண்டை நோயும், குருவை மனிதராய்ப் பாவித்தால் யோனி நோயும்,, பிரமக்கொலை செய்தால் க்ஷய ரோகமும், குருதார கமனம், ஏரி குளங்களை வெட்டினால் குட்டமும், மெய்யடியார்களை நிந்தித்தாலும் குட்டமும், அதிதிகளுக்கு அன்னங்கொடாவிட்டால் கர்ணரோகமும், தபோதனருடைய அன்னத்தைத் திருடினோர், பொய்ச்சாட்சி சொன்னோர்க்கு வாய்ப்புண் நோயும், பிறர் பொருளைக் கவர்ந்தவர், அதற்குத் துணை செய்தவர், உபாயங்கள் சொன்னவர் நேத்திர ரோகமும், காலில் வியாதியும், புடவை திருடினோர் வெண்குட்டமும், பசுவதை, பிறவிக் குருடர் அன்ன சத்திரம், தண்ணீர்ப் பந்தல் அழித்தோர் நீர்த்தோஷமும், உதர நோயும், வேதாகமம், பெரியோர்கள் நிந்தனை செய்தோர்க்குப் பைத்தியமும் உண்டாகும்.

## தச தானங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | கோதானம் | 6) | வஸ்திர தானம் (உடுப்பு) |
| 2) | பூமி தானம் | 7) | தானிய தானம் |
| 3) | எள்ளு தானம் | 8) | வெல்ல தானம் |
| 4) | சுவர்ண தானம் (பவுண்) | 9) | வெள்ளி தானம் |
| 5) | நெய் தானம் | 10) | உப்பு தானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனைத் தட்டு

கோயிலுக்கு அர்ச்சனைத் தட்டு கொண்டுபோகும் போது நேரே அர்ச்சகர் வாங்குகிறார். கத்தியால் தேங்காய் உடைக்கிறார். உடைத்ததையும், பழம் முதலியவைகளையும் சுவாமிக்கு நைவேத்தியம் செய்கிறார். கற்பூரத்தை ஏற்றிச் சுவாமிக்கு முன் பிடித்து நம்மைத் தரிசிக்கும்படி செய்கிறார்.

அர்ச்சகர் - ஞானகுரு, கத்தி - திருவருட் சக்தி, கற்பூரம் - ஞானம், மூர்த்தி - சிவம், தேங்காய் - ஆணவம், பழம் முதலிய மற்றவைகள் - கன்ம, மாயாமலங்கள். எனவே ஞானாசாதியருடைய ஞானோபதேசத்தினால் திருவருட் சக்தி தோன்றி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்து அவைகளை அர்ப்பணம் செய்ய சிவஞானம் தோன்றும். அந்த ஞானப்பிரகாசத்தினாலேயே சிவத்தை தரிசிக்க வேண்டும். இவ்வாறு இவற்றின் பொருள்களைக் கூறுகின்றன.

### பழங்கள்:

தட்டில் கொண்டுபோன பழங்கள் நறுஞ்சுவைகள் உடையன. அவை பக்தனுடைய நல்வினைப் பயன்களைக் குறிப்பன. அவ்வினைகளையும் இறைவனிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதாம்.

### வெற்றிலை, பாக்கு முகவாசம்:

இவை ஆன்மாவைப் பொருந்திய இராசதம், தாமதம், சாத்விகம் என்னும் முக்குணாங்களைக் குறிப்பன. இக்குணாங்களையும் விடவேண்டும் என்பதாம்.

**பிரம்மஸ்ரீ சோ . ரவிச்சந்திரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித தீர்த்தம் ஆடல்

தீர்த்தம் ஆடும் சமயம் அவசிய கருமங்களை முடித்துக்கொண்டு, விரதமாய் இருந்து சங்கற்பஞ் செய்துகொண்டு மனத்தூய்மை உடையராய் ***"சிவபெருமானுடைய பரமானந்த வெள்ளத்தில் மூழ்குகின்றேன். இன்றோடு நான் செய்த பாவங்கள் எல்லாம் தொலைந்து புனிதன் ஆகின்றேன்"*** என்று வேண்டிக்கொண்டு மூழ்கக்கூடிய அளவான சலத்தில் நின்றுகொண்டு பெருவிரல்களால் காதுகளையும், சுட்டுவிரல்களால் கண்களையும், நடுவிரல்களால் மூக்கையும் மற்றைய விரல்களால் வாயையும் மூடிக்கொண்டு மூன்று தரம் தாழ்ந்து எழுதல் வேண்டும். அளவாய் ஸ்நானம் செய்தபின் கரையில் எறி ஈரந்துவட்டிய பின் காய்ந்த வஸ்திரம் தரித்துக்கொண்டு வீபூதி அணிந்து அநுட்டானம் முடித்துக்கொண்டு, சுவாமி தரிசனம் செய்துகொண்டு, பிதிர்க்கடன்களை முடிக்க வேண்டியவர்கள் முடித்துக்கொண்டு, இயன்ற அளவு ஏழைகளுக்கு அன்னம், வஸ்திரம், தட்சணைகள் முதலியன ஈதல் வேண்டும்.

தீர்த்தங்களில் எச்சிலுமிழ்தல், சீலை தோய்த்தல், மூக்குநீர் சிந்துதல், அடிக்கழுவல் முதலிய அசுத்தங்கள் எதுவும் செய்தல் பாவம் ஆகும்.

ஞானிகள் புறத்தீர்த்தம் ஆடுதலோடு அகத்தே உள்ள தீர்த்தங்களிலும் மூழ்குகின்றனர். அத்தீர்த்தங்கள் அவர்களின் மணிக்கட்டு விரல் அடிகளின் நுனிகளில் இறை நடுவுகளில் இருக்கின்றன என்றும் நூல்கள் கூறுகின்றன.

மேலும் உண்மை பேசுதல், தானஞ் செய்தல், இன்சொற் கூறல், அந்தக்கரணங்கள் அடக்கல், புறக்கரணமொடுக்கல், பொறுமை, உயிர்களுக்கு இரங்கல், கடவுள் தியானம் ஆகிய உள்ளிருக்கும் தீர்த்தங்களில் மூழ்கி கருப்பையிற் செலுத்தும் மும்மல அழுக்கையும் கழுவ வேண்டுமென்றும் அந்த ஞான நூல்கள் கூறுகின்றன.

***சிவஸ்ரீ மு. சண்முகரத்தினக் குருக்கள்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை பூரணை

பூரணை விரதம், அமாவாசை விரதம் என்னும் இவை பிதுர் விரதங்களாகும். இவ்விரண்டும் முக்கியமானவை. சோதிடக்காரர், மாதுருகாரகன், பிதுர்காரகன் என சந்திரனையும், சூரியனையும் கூறுவர். பூரணை விரதம் தாயார்க்கு செய்யும் விரதம். இதிலே ஐப்பசி, சித்திரை, பூரணை மிகவும் சிறப்புடையன. கடைசி இவ்விரண்டு மாதமாவது அனுஷ்டிப்பது மிகச்சிறப்புடையது.

சித்தரை மாதம் தேவர்களுக்கு பகல் 15 நாளிகை முதல் 20 நாளிகை வரையுள்ள ஐந்து நாளிகைப்பொழுதாகும். இது அவர்கட்கு மத்தியான வேளையாகும். மத்தியான வேளையும் பிதுர்காலமும் ஒன்றாதலால் இம்மாதப் பூரணை மிக விசேடமானதாகும்.

சித்திரை மாதமென்பது சித்திரா நட்சத்திரத்தோடு மதியாகிய சந்திரன் நிற்கும் காலமாகும். அச்சமயம் பூமி மேடராசியில் நிற்கின்றது. சந்திரன் சித்திரையோடு கூடிச் சித்திரைக்குரிய துலாராசியில் நிற்கின்றது. மேடத்திலிருந்து துலாம் ஏழாம் இடம் ஆதலால் பூமிக்கு ஏழாம் பாகையில் நிற்கின்ற சந்திரன் முழு வலி பெற்று முழுக்கிரணத்தையும் சித்திரையின் கிரணத்தோடு கூட்டி பூமிக்கு அன்று தருகின்றது. சந்திரனாற் பெறவேண்டிய குணக் கிரணத்தில் அந்நாள் விசேடமாயிருத்தலால் சித்திராபூரணை விசேடமானது. இப்படி ஒரு நாள் ஒரு வருடத்தில் வேறு இடமில்லையாதலின் இத்தினம் மிக விசேடமானது.

இம்மாதத்துச் சித்திரை நாளிற் பிறந்தமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரபுத்திரனார் எனவும், அன்று அநுட்டிக்கப்படும் விரதம் சித்திரகுப்த விரதமெனவும்படும். இந்திரன் விமானத்தினின்றிறங்கி இத்தினத்தில் பூசித்தானாதலின் சித்திரைச் சித்திரை விசேடமானதெனவும். இந்நாளில் விரதமிருத்தல் மிகவிசேடமானது எனவும் திருவிளையாடற் புராணம் சிறப்பித்துக் கூறுகின்றது.

தமிழ்நாட்டில் விசேடமாக எட்டிக்குடி முருகன் சந்நிதானத்தில் இவ்விழா மிகவுஞ் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாறு சிறப்புக்கள் கொண்ட பௌர்ணமியில் விரதமிருந்து தீர்த்தமாடி கடமைகள் புரியின் பிதிரர்கள் சுகமடைவர்.

## எந்தெந்தக் கோவில்களுக்குச் சென்றால் என்னென்ன பலன் கிடைக்கும்

| | |
|---|---|
| திருப்பதி | ஐஸ்வரியம் |
| சமயபுரம் மாரியம்மன் | சுகம் பெற |
| நாகர் கோவில் | சர்ப்ப தோஷம் நீங்க |
| திருமணஞ்சேரி | திருமணம் நடக்க |
| திருக்கருகாவூர் | சுகப் பிரசவம் ஏற்பட |
| தில்லையம்மன் ஆலயம் | மனநோய் தீர |
| திருவீழிமிழலை | திருமணம் நடக்க |
| பாபநாசம் | பாபப் பரிகாரம் |
| காசி - இராமேஸ்வரம் | குழந்தை பாக்கியம் பெற |
| திருக்கடவூர் | நீண்ட ஆயுள் கிடைக்க |
| தனுஷ்கோடி | பாவப் பரிகாரம் |
| வைத்தீஸ்வரன் கோவில் | நோய்கள் குணம் அடைய |
| சங்கரநயினார் கோயில் | நாகதோஷம் நீங்க |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி அமாவாசை

அமாவாசை என்றால் நம் சமயத்தவர்களுக்கு மிகவும் பயபக்தி உண்டாகின்றது. ஆடி அமாவாசை சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் மிகவும் சிறப்பான தினம். பிதுர் வழிபாட்டைக் குறிக்கும் ஒரு புண்ணியமான சிரார்த்த தினமாகும்.

திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தை-பாகத்தைக் குறிப்பிடும் ஒரு சொல். அமா என்றால், ஓரிடத்தில் பொருந்தியது (குவிந்தது, அடுத்தது) என்று பொருள். ஒரு இராசியில் சூரியன் சந்திரன் இருவரும் சேர்ந்து உறவாகும் வாசியான நாள் அமாவாசி எனப்படும். வான மண்டலத்தில் தமது அளப்பு வேலையைச், சிருட்டியின் ஆரம்ப காலத்திலிருந்தே தொடங்கிய இருவரும் அமாவாசை நாளிலன்றுதான் ஒருங்கு கூடுகின்றனர்.

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும்பொழுது அமாவாசைத் திதி உண்டாகும். சந்திரன் சூரியனிலிருந்து பிரிந்து பூமியைச் சுற்றி வருகின்ற மார்க்கத்தில் பூமிக்கும் சூரியனுக்கும் 180 ஆவது பாகையில் வரும்பொழுது பௌர்ணமித் திதி நிகழும்.

திதிகள் பூர்வபக்கத் திதிகள், அபரபக்கத் திதிகள் என இருவகைப்படும். அமாவாசைக்கடுத்த பிரதமை முதல் பௌர்ணமி இறுதியாகவுள்ள 15 திதிகளும் பூர்வபக்கமெனப்படும் பௌர்ணமிக்கடுத்த பிரதமை முதல் அமாவாசை இறுதியாகவுள்ள 15 திதிகளும் அபரபக்கமெனப்படும். பூர்வபக்கம், அபரபக்கம் என்பன முறையே சுக்லபட்ஷம், கிருஸ்ணபட்ஷம், வளர்பிறை, தேய்பிறை எனவும் கூறுவர்.

அமாவாசையின் கருத்தை ஞானமுறையிற் கவனித்தலும் நல்லது. சூரியன் ஞானகாரகன், ஆத்மகாரகன் ஆவான். பிராணிகளின் ஆத்ம அமைப்பு சூரியனாற்தான் நிகழ்கின்றது. ஆண்மை, ஆற்றல், பராக்கிரமம், வீரம், தீரம், தவம் யாவும் சூரியனாலேயே தோன்றுகின்றன..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் மனத்திற்கு அதிபதி. மகிழ்ச்சி, தெளிந்த அறிவு, உற்சாகம், இன்பம் முதலியன சந்திரனால் அடையத்தக்கன. இத்தகைய சூரிய சந்திரர் இருவரும் ஒரு ராசியில் சஞ்சரிக்கும் நாள் புனிதமான நாள். உயிர்களின் சுகபோகமாகிய மாறுதலையுணர்த்தும் நாள். சகல தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாவர். அன்று நோன்பு நோற்றல், விரதங்காத்தல், சிறந்ததும், இறைவனுக்கு மகிழ்ச்சியளிப்பதும், பெருமை தருவதுமான நன்னாளாகும்.

இன்னும் நமக்கு இரண்டு சரீரங்கள் உள்ளன. அவை தூல சரீரம், சூக்கும சரீரம் (குண சரீரம்) எனப்படும். நமது உடம்பு தூல சரீரம், இது தூல காயம், தூல தேகம் புறவுடல் எனவும் அழைப்பர். ஆயுள் முடிவில் முன்னுடல் விட்டு மற்றொரு உடம்பெடுத்தற்கு ஏதுவாயிருப்பது அருவுடம்பு. இது சூக்கும காயம், சூக்கும தேகம், உள்ளுடம்பு எனவும் கூறுவர்.

இவற்றுள் தூல சரீரமானது பஞ்சபூதங்களாலும் பரிணமிக்கப்பட்ட உருவுடம்பு. சூக்கும சரீரமாவது தன்மாத்திரைகளைந்தும் அந்தக்கரணங்கள் நான்கும் கூடிய மனோமய கோசத்தினால் அமைந்தது அருவுடம்பாகும்.

ஒருவர் இறக்கும்போது தூல சரீரம் அழிந்துபோகும். சூக்கும சரீரம் அழிவதில்லை. அவை சர்வ சங்காரகாலத்திலே அல்லது முத்தி நிலையிலாவது அழியும். ஒரு உயிர் தூல சரீரத்தைவிட்டு நீங்கும்போது சூக்கும சரீரத்தோடு செல்லும். அங்ஙனஞ்சென்ற உயிர், பூமியிற் தான் புரிந்த வினைகளுக்கேற்ப இன்பதுன்பங்களைச் சுவர்க்கநகரத்தில் அனுபவிக்கும். சுவர்க்கத்திலே இன்பங்களை அனுபவிக்கும்போது அச்சூக்கும சரீரம் அதற்கென்றே ஒரு சரீரத்தைப் பெற்றுக்கொள்கின்றது. அது பஞ்சபூதங்களின் சாரங்களினால் ஆக்கப்பட்டது. ஆதலின் அது பூதசார சரீரம் எனப்படும். தேவ சரீரம் எனப்படுவது அதுவேயாகும். நரகத்திலே துன்பங்களை அனுபவிக்கின்ற சூக்கும சரீரமும் அதற்கென்றே ஒரு சரீரத்தைப் பெற்றுக்கொள்கின்றது. அது நோய் கொண்டதாயும், எவ்வகைத் துன்பங்களையும் தாங்கவல்லதாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். அது யாதனா சரீரம் எனப்படும். இவ்விதம் அனுபவித்துத் தொலையாமல் எஞ்சி நின்ற (பிராரத்துவ) வினைகளினாலே மீண்டும் பூமியில் வந்து பிறக்கும்.

இறந்தவர்களுடைய தூல உடம்பும், சூக்குமவுடம்பும், பிறவிக்குக் காரணமான வினையுமெனப்பட்டவெல்லாம் தகனக்கிரியை, அந்தியேட்டி இவற்றால் நீங்கிவிடும். அபுத்திபூர்வமாகச் செய்தன அந்தியேட்டி, தகனக் கிரியைகளால் மாறும். புத்திபூர்வமாகச் செய்தன அனுபவித்தேயாகவேண்டும். உயிர், சபிண்டிகரணம் (பிதிர்பூசை) என்னுங்கிரியையினாலே சிவலோகத்தையடையும். அங்கு பிதாவினுடைய உயிர் ஸ்கந்த சொரூபமாக இருக்கும். பாட்டனுடைய உயிர், சண்டபதத்திலே சண்ட சொரூபமாக இருக்கும். முப்பாட்டனுடைய உயிர் கணாதீச பதத்திலே கணாத சொரூப்மாக இருக்கும். இவர்களுக்குத் தலைவர்களாக ஸ்கந்த, சண்டா, கணாதீதர் என்னும் மூவர் அதிதெய்வங்களாக விளங்குவர். இவர்கள்தான் பிதிர் தேவதைகள் என அழைக்கப்படுவர். இவர்களைப் பிரீதி செய்து வழிபடுவதுதான் சிரார்த்தம் எனப்படும். நிருவாண தீட்சை பெற்றவர்களுடைய பிதிர் தேவர்கள், ஈசர், சதாசிவர், சாந்தர் எனப்படுவர்.

மண்டலங்கள், சூரிய மண்டலம், சந்திர மண்டலம், மேக மண்டலம், பூ மண்டலம் எனப் பலவகைப்படும். இறந்துபோன உயிர்கள் தாம் செய்த புண்ணிய பாவத்திற்கேற்பச் சுவர்க்க நரகங்களையடைவனவும், முத்தியடைவனவுமன்றிச் சில உயிர்கள் உடனே ஒரு தூல தேகத்தை எடுப்பனவுமாகவும் இருக்கும். அன்றி அவை இறக்கின்ற கால நேரங்களைப் பொறுத்ததாக உயிர்களை நற்பதவியடையச் செய்தலுக்குச் சிராத்தம் இன்றியமையாததாகும்.

சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டுப் பூமிக்கு நேரே நேர்படுஞ் சமயமே இதற்கு மிகவுஞ் சிறந்தது. ஒவ்வொரு அமாவாசையும் பிதிர் கருமத்திற்கு விசேஷமானது. எனினும் ஆடி அமாவாசை மிகவும் புனிதமும் விசேஷமானதுமாகும். தை அமாவாசையும் சிறந்தது. ஏனெனில் சூரிய மண்டலத்துக்கு அப்பாலுள்ள இடம் பிதிர்களுக்குரிய இடமாகும். இது பிதுர் லோகம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு நோக்கிச் சஞ்சரிக்கும் சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் ஆரம்பகாலம் ஆடி மாசமாகும். ஆகவே ஆடி அமாவாசை பிதிர் தருப்பணத்திற்கு மிகவும் சிறந்த காலமாகும்.

அமாவாசை பௌர்ணமி நாட்களில் கடல் தீர்த்தமாடுதல் மிகவும் நல்லது. கடல் நீரை, நமது பாபத்தைக் கழுவும் பரிசுத்த நீராகவும், இறைவனது அருள் நீராகவும், நினைந்து காலஞ்சென்ற பிதிரர்களை எண்ணி அவர்களது பாவத்தைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும் வண்ணம் இறைவனை வேண்டி நீராடல் வேண்டும்.

உடல் நலத்தின் பொருட்டும் கடல் நீராடுதல் நன்மையாகும். அமாவாசை, பௌர்ணமி நாட்களில் கடலின் நிலையும், நமது உடலின் நிலையும் மாற்றமடைகின்றது. கடல் நீராடுவதனால் அநேக உள் ரோகங்களும், பிற ரோகங்களும் பரிசுத்த சுகமடைகின்றன

நீராடினால் சரீரம் சுத்தமாகின்றது. ஆரோக்கியம், உற்சாகம் என்பன உண்டாகின்றன. மன ஒருமைப்பாடும், மனப் பரிசுத்தமும் உண்டாகின்றது. அதிக பசி உண்டாகின்றது. ஆதலின் இடையிடையே கடல் நீராடலும் அவசியமாகும்.

அமாவாசை நாளில் மாதரின்பந்துய்த்தல் மாபாவமென கூறப்படுகின்றது. ஆத்மகாரகனான சூரியனுடன் மனத்தின் காரகனாகிய சந்திரன் ஒருங்கே கூடி இருக்கும்பொழுது மானிடரின் ஆத்ம சக்தி குன்றி இருக்கும். மாதர்கள் மனமும் மிகவும் சோர்ந்திருக்கும். இதனை மீறி இன்பம் துய்த்தலால் அங்கவீனமுள்ள ஆண்பெண் அற்ற அலிகள் போன்ற குழந்தைகள் பிறப்பார்கள் எனச் சொல்லப்படுகின்றது.

***"காலற்றன உடலற்றன தலைஅற்றன நாளில்***
***கோலக்குய மடவார் புதமைக்கூடின் மலடாவர்***
***மாலிக்கொரு கோயில் செயின் அதுவும் வெகுபாடாம்***
***ஞாலத்தவர் வழிபோமின் நலமுய்திடாரவமே பயன்"***

ஆதலின் இப்புண்ணிய தினத்திலே மூர்த்தி தலம், தீர்த்தம் அமைந்த புண்ணிய தலங்களிலாயினும், வீடுகளிலாயினும் பிதிர்க் கருமங்களை முறைப்படி செய்தல் இன்றியமையாததொன்றாகும்.

"ஈசுர பக்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும்பாக்கியம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாளயம்

மாளயம் என்பது புரட்டாதி மாதத்திலே செய்யப்படும் ஒரு பொதுச் சிரார்த்தமாகும். மாளயம், மகளயம் என்பன ஒரு பொருட் சொற்கள். புரட்டாதி மாதத்து அபரபக்கப் பிரதமை முதலாகப் பூர்வபக்கச் சதுர்த்தி வரையுள்ள காலம் மாளய பக்ஷமெனப்படும். சிரார்த்தம் என்பது சிரத்தையோடு செய்யப்படுவது. இறந்தோர்க்குச் செய்யும் ஒரு கிரியை. இருபத்தொரு யாகங்களிலொன்று. இது பிதிர் தேவதைகளுடைய திருப்தியின் பொருட்டுச் செய்யப்படும் பிண்ட கருமம். சுபகருமத்தின் கண்ணும், அசுபகருமத்தின் கண்ணும் செய்யப்படும் சிரார்த்தம் சாந்தியென்றும், அப்பியுதமென்றும் சொல்லப்படும். பிரேத திருப்தியின் பொருட்டும் அதன் விமோசனத்தின் பொருட்டும் செய்யப்படுவது பிரேத சிரார்த்தம் எனப்படும். மரணமடைந்தோர் நரகமெய்தாதபடி சுசித்திருப்பதைக் குறித்துச் செய்யுங் கிரியையாம். பிதிர் தேவதைகளின் பொருட்டுச் செய்யப்படுவது பைதிருக சிராத்தம் எனப்படும்.

**"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"**

என்பது வள்ளுவர் வாக்கு.

இதில் தென்புலத்தாரென்றது பிதிரரை. "பிதிரராவார், படைப்புக் காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி, அவர்க்கிடம் தென்றிசையாதலின் தென்புலத்தாரென்றார்." என்கின்றார் பரிமேலழகர்.

தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் சூரியனின் தென்பாகத்து நடுப்பாகம் புரட்டாதி மாசத்தில் பூமிக்கு நேரே நிற்கின்றது. அப்போது சந்திரனது (அபரபக்கம்) தென்பாகமும் நேராக நிற்கின்றது. அத்தருணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதிர்கருமங்களுக்கு விசேக்ஷமான காலமாகும். எங்களுடைய ஒரு மாசம் பிதுரர்களுடைய ஒரு நாள். பூர்வ பக்கம் பகல், அபர பக்கம் இரவு. பூர்வ பக்கம் பிரதமை உதயமாகும். இராக்கால முடிவு அமாவாசை. பகற்கால முடிவு பூரணையாகும்.

சிராத்த கருமங்களுக்குரிய சிறந்த தலங்கள் காசி, கயை, பிரயாகை, குருக்ஷேத்திரம், கோகர்ணம், குரு ஜாங்கலம், புட்கலக்ஷேத்திரம் முதலியனவாகும். இவற்றுட் கயா சிராத்தம் மிக விசேடமுடையது. இறந்த தினம் அமாவாசை, மாளய பட்சகாலம் என்பன சிராத்தத்துக்குரிய காலமாகும்.

தேவர்கள் வருடக்கணக்கின்படி புரட்டாதி மாதம் நடுராத்திரியாகும். நடுராத்திரி காலம் நிசப்தமாயிருக்கும். தேவர்களாராதனைக்கும் பிதுரர்களுபசாரத்திற்கும் அக்காலமே உரியதும் சிறந்ததுமாகும்.

சாத்திரங்களினதும், நூன்முறைகளினது கூற்றுக்களும் அதுவேயாகும். எனவே அக்காலத்தில் பிதுரர்களுக்குத் தருப்பணஞ் செய்து பிரீதி செய்ய வேண்டியது அவசியமாகும்.

தபாற்கந்தோருக்கு வரும் கடிதங்கள், பணங்கள், காசோலைகள் முதலானவற்றிற்கு உடையவர்கள் இருக்குமிடங்களைக் கந்தோர்க்காரர்கள் நன்கறிவர். அறிந்து அவரவர்க்குரியனவற்றை அவரவரிடத்திலே சேர்ப்பர். இறந்தவர்கள் தென்புலத்தில் எவ்வெவ்விடத்திலுள்ளார்களென்பதைப் பிதிரர்கள் அறிவர். இறந்தவர்களுக்குச் செய்யும் பிதிர் தருப்பணத்தால் அவரவர்களுக்குரிய பலன்களை அவர்கள் அவரவரிடத்திற் கொண்டு சேர்ப்பர். ஆதலின் அக்காலத்தில் உபவாசமிருந்து பிதிர் தருப்பணம் செய்து இயன்றவரை சாதுக்கள், அடியார்களுக்கு அமுது செய்வித்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்தல் பிதிரர்களுக்குப் பிரீதியளிக்கும்.

(ஆதாரம் - திருவாவடுதுறை ஆதீனநூல்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசியம்

மாசியம் என்பது இறந்தோர்க்கு மாதந்தோறும் செய்யுங்கடன். எந்த மாதம், எந்தப் (பக்ஷம்) பக்கம், எந்தத் திதியில் மரிக்கின்றானோ அந்தத் திதியில் மாசியஞ் செய்தல் வேண்டும். மாசியம் செய்து வரும்போது ஆசௌசம் நேருமானால் அம்மாசியத்தை மறுமாசியத்தோடு சேர்த்துச் செய்தல் வேண்டும். எவனொருவன் மிகவும் வருத்தப்பட்டு இறக்கின்றானோ அவனைக் குறித்து ஏகோதிட்ட சிரார்த்தஞ் செய்தல் வேண்டும். அதனால் அவன் அமைதியும், இன்பமும் அடைகின்றான். மரித்த தினந்தெரியாவிட்டால் அமாவாசையில் சேர்த்துக் கிரியை செய்தல் வேண்டும். தினந்தெரிந்தும் மாதம் தெரியாவிடின் ஆடி, புரட்டாதி, மார்கழி, மாசி இம்மாதங்களில் அபர பக்கத்தட்டமி அல்லது அமாவாசையில் செய்தல் ஆகும். மாதந்தோறும் பிதிர் தருப்பணஞ் செய்வது மிகவும் உத்தமமாகும். அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களில் மரித்தவர்களுக்கு உடனே சமஸ்காரஞ் (மந்திரசுத்தி பண்ணுங்கிரியை) செய்தல் வேண்டும். இத்திதிகளில் இறந்தால் பஞ்சமி எனப்படும். இவ்வைந்து நட்சத்திரங்களும் தோஷ நட்சத்திரங்கள் ஆகும். இவற்றிற்கு முறையே 6 மாதம், 3 மாதம், $1^1/_2$ மாதம், 15 நாட்கள் பஞ்சகக் குற்றமாகும். இக்குற்றம் நீங்கத் தனிஷ்டா பஞ்சக சாந்தி செய்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்யிற் தோஷம் நிவாரணமாகும். இறந்தகால தோஷ நிவிர்த்தியின் பொருட்டுச் சில கருமங்களை அதிகமாகச் செய்தல் வேண்டும்.

குறித்த நட்சத்திரங்களில் மரித்தவர்களுக்கு நற்கதி கிடையாதாகையால் அதன்பொருட்டு எள்ளு, நெய், பொன், துணிமணி முதலியன தானம் புரிதல் வெண்டும். இவ்வாறு செய்யாவிடின் செய்ய வேண்டியவன் துன்பப்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் பிறை

ஒரு காலத்தில் விநாயகக் கடவுள் அருள்சுரந்து தேவர்கள் களிக்கத் திருநடனஞ் செய்தருளினர். தேவாதிதேவர்கள் அதனைக்கண்டு அதிசயித்தனர்.

விநாயகக் கடவுளின் சரிந்த தொந்தியையும், மோதகக் கையையும், துவாரமுள்ள துதிக்கையையும் கண்ட சந்திரன் அதிசயப்பட்டு நகை செய்தான். பெருமான் அதனைக்கண்டு பெருங்கோபங்கொண்டு, "சந்திரா! நீ நம்மைப் பார்த்து நகைசெய்தனை. ஆகையால் இத்தினத்தில் உன்னைப் பார்த்தவர்கள், பணிந்தவர்கள் பழிபாவங்களை அடைந்து துன்பத்தில் மூழ்கி வருந்துவார்களாக" எனச் சபித்தருளினர்.

இதனை அறியாத திருமால் நான்காம் பிறையைப் பார்த்து கஸ்ரங்கள் பல அடைந்தார் எனவும், ஆவணிமாதச் சதுர்த்தியில் மாத்திரமன்றி ஏனைய மாதங்களில் வரும் நான்காம் பிறைகளையும் கூடப்பார்த்தல் கூடாதெனவும் கூறப்படுகின்றது.

## குத்துவிளக்கும் அதன் பலன்களும்

விரத நாட்களிலும், மற்ற நாட்களிலும் நாம் தீபம் ஏற்றுவதற்கு குத்து விளக்கைப் பயன்படுத்துகிறோம். அதில் எத்தனை முகம் ஏற்றுகிறோமோ அதைப் பொறுத்து அத்தனை விதமான பலன்கள் கிடைக்கின்றன.

| | | |
|---|---|---|
| ஒரு முகம் ஏற்றினால் | - | மத்திம பலன் தரும். |
| இரண்டு முகம் ஏற்றினால் | - | குடும்ப ஒற்றுமையைத் தரும். |
| மூன்று முகம் ஏற்றினால் | - | புத்திர சுகம் தரும். |
| நான்கு முகம் ஏற்றினால் | - | பசு, பூமி, ஆகியவற்றைத் தரும். |
| ஐந்து முகம் ஏற்றினால் | - | செல்வத்தைத் தரும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் வளர துவாதசி

துவாதசி மகத்துவத்தை விளக்க ஒரு கதை வழங்குகின்றது. சூதாடித் தோல்வியடைந்த பாண்டவரை வனத்திற்குத் துரத்திய துரியோதனன் அம்மட்டோடு மகிழ்ந்தானில்லை. பாண்டவர் அட்சய பாத்திரம் பெற்றுள்ள மகிமையினால் ஆரணியத்திலும் அன்னதானம் செய்கின்றனரெனவறிந்து பொறாமைப்பட்டான். சூழ்ச்சி புரிந்து பாண்டவரை மேலுந் துன்புறுத்த வேண்டுமெனத் தீர்மானித்தான். எக்காரணத்தாலோ அவனது விருப்பம் போலத் துருவாச முனிவரும் அத்தருணம் எதிர்ப்படலானார். துரியோதனன் தனது மனக் கருத்தை மறைத்து விருந்தளித்து மிகச் சாதுரியமான வேண்டுகோள் ஒன்றை (விருந்துக்குச் செல்லுமாறு) அவரிடம் விடுத்தான். அவரும் தமது சீடர் குழாத்தோடு பாண்டவர் வாழும் காட்டுக்குச் சென்றார். அன்று துவாதசி நாளாகும்.

பாண்டவர் அனைவரும் அதிகாலையில் விருந்தினருடன் பாரணை பண்ணி அட்சய பாத்திரமுங் கவிழ்க்கப்பட்டாயிற்று. இந்நிலையிற் துருவாசர் சீடர்களோடு அங்கு வந்தார். தருமர் அவரை உபசரித்து "நீங்கள் சீடர் குழாத்துடன் சென்று கங்கை நீராடி வாருங்கள், "இதோ உணவு தயார்" எனக் கூறினார். விதி செய்த விளையாட்டைத் திரௌபதி உணர்ந்தாள். மனதிலே கண்ணனைத் தியானித்தாள். கண்ணபிரானும் ஓடோடி வந்து "திரௌபதியே! பசி அதிகமாயிருக்கிறது" என்றார். "கண்ணா உணவுண்டு அட்சய பாத்திரத்தை இப்பொழுதுதானே கவிழ்த்து விட்டு வந்தேன்" என்றாள் திரௌபதை. "அதற்கென்ன பாத்திரத்தை இங்கே கொண்டுவா பார்ப்போம். ஒரு சிறு பருக்கை இருந்தாலும் போதும்" என்றான் கண்ணன். திரௌபதை பதைபதைப்போடு சென்று பாத்திரத்தைக் கொணர்ந்தாள். பார்த்தான் கண்ணன். அதில் ஒரு கீரைத் தண்டும் பருக்கையும் இருந்தன. அவற்றையுண்டு நீரும் மொண்டு ஆனந்தங் கொண்டு ஏப்பமும் விட்டான் கண்ணன்.

கங்கைக்கு நீராடச் சென்ற துருவாசரும், சீடரும் அதே சமயத்தில் நீராடும் பொருட்டு நீரில் மூழ்கினர் மூழ்கியது தான் தாமதம்! அனைவரின் வயிறும் ஆகாரம் நிறைந்தது போற் புடைக்கலாயிற்று. அசீரண ஏப்பமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத் தொடங்கியது. வணங்கா முடி மன்னன் சூழ்ச்சியையும் கண்ணன் வரவையும் அப்பொழுது தான் உணர்ந்தார் துருவாசர். உடனே சென்று பாண்டவரை ஆசீர்வதித்துக் கண்ணனிடம் விடைபெற்றுக் கொண்டு மீண்டார்.

பாண்டவர்க்கு முனிவரின் ஆசியும் கண்ணனின் ஆசியும் கிடைத்தது. எனவே இப்புண்ணிய நாளில் ஞானிகள், அடியார்கள், அதிதிகளுக்கு அமுது படைத்தல் ஈசனுக்கே அர்ப்பணஞ் செய்தல் போலாகும். இத்தினத்தில் மனமுவந்து விரதமிருந்து அன்னதானஞ் செய்வோருக்கு மேலான புண்ணியமுண்டாகும். செல்வமும், புகழும், சிறப்பும் பெருகும்.

## பூஜைக்குப் பயன்தரும் பூக்களும் தரும் பலன்களும்

1) மனோரஞ்சிதம் - தம்பதிகளுக்குள் ஒற்றுமையைத் தரும்.

2) நீலச் சங்கு புஷ்பம் நீலக் கனகாம்பரம் - நீண்ட ஆயுள், சனி பகவான் அருளும் கிடைக்கும்.

3) மஞ்சள் அரளி, பொன் அரளி, செவ்வந்தி - கடன்கள் அடைபடும், திருமணம் கைகூடும், வியாழ தோஷம் நீங்கும்.

4) சிவப்பு அரளிப்பூ - குடும்ப ஒற்றுமை தரும், கவலையைத் தீர்க்கும்.

5) வெண் தாமரை வெள்ளை நந்தியா வட்டை, மல்லிகை, ஜாதிமல்லி, பிச்சிப்பூ, மர வல்லி - மனச் சஞ்சலத்தைப் போக்கும்.

6) செந்தாமரை - ஆத்ம பலம், நீண்ட ஆயுள், செல்வம், வியாபார விருத்தி, சூரிய பகவான் அருள் என்பன கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூலவிரதம்

சிவனுக்கு சூலபாணி எனவும் ஒரு பெயருளது. சூலப் படையைக் கையில் தாங்கியிருப்பதனாலும், சூலபாணியைக்குறித்து அனுட்டிப்பதனாலும் சூலவிரதமெனலாயிற்று. பாசுபத விரதம் எனவும் கூறப்படும். இது உத்தராயண ஆரம்ப காலமாகிய தைமாத அமாவாசையில் அப்பெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். நீராடி, ஆலயதரிசனம் செய்து சூலபாணியின் திருவுருவை விருப்பமிகுந்த அன்போடு தியானித்து, ஒருபொழுது பகலிலே உணவுகொள்ளுதல் வேண்டும்.

திருமால் இதனை அனுட்டித்து கொடியகாலநேமி என்னும் அசுரனைச் சக்கிராயுதத்தினால் பிளந்து அவனுயிரைப் போக்கினார். வயிற்றுநோயால் நடுக்கமெய்திய பிரமன் சூலவிரதம் அனுட்டித்து அந்நோய் நீங்கப் பெற்றான். பெருந்தவம் புரிந்த பரசுராமன் அனுட்டித்துக் கார்த்தவீரியார்ச்சுனனை யுத்த களத்தில் அவனுக்கிருந்த விசாலமான ஆயிரங் கைகளையும் வெட்டியெறிந்தான்.

தேவர்கள், பெருநிலப் பிரபுக்கள், பிணியாளர், பாவிகள் யாவராயினும் இவ்விரதத்தை அனுட்டிப்போர் அவற்றினின்று நீங்கி பெருநலன் அடைவர்.

*தேவ ராயினு மிருநிலஞ் சிறந்தவ ரெனினும்*
*யாவா ராயினு மிடையதாப் பெரும்பிணி யினராய்ப்*
*பாவ ரா்யுழந் திதுமுறை நோற்பரேற் பயின்ற*
*நோவொ ழிந்துபின் னிருங்கதிப் பெருநல னுகர்வார்*

- உபதேச காண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடர்கள் அறிந்து கடைப்பிடித்து வாழ வழிகாட்டும் தகவல்கள்

## நமது முன்னோர்கள் விரதமிருந்து கடைப்பிடித்த உபவாச முறைகள்

1) உமிழ் நீரைக்கூட உள்ளே இறக்காமல் உபவாசம் இருப்பது. இது யோகிகளால் மட்டுமே சாத்தியம் என்பர்.
2) தேன் அல்லது இளநீர் ஆகியவற்றுள் ஒன்றை மட்டும் அருந்தி உபவாச விரதமிருப்பது.
3) பசுவின் பாலை மட்டும் அருந்தி உபவாச விரதம் இருப்பது.
4) தொடர்ந்து பன்னிரெண்டு நாட்கள் எந்த உணவுமின்றி நீரை மட்டுமே அருந்தி உபவாச விரதம் இருப்பது.
5) காலை நேர உணவு மட்டுமே சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது.
6) பகல் நேர உணவு மட்டுமே சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது.
7) இரவு நேர உணவு மட்டுமே சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது.
8) மூன்று நாட்கள் தொடர்ந்து காலை நேர உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசமிருப்பது.
9) மூன்று நாட்கள் பகல் நேர உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசமிருப்பது.
10) மூன்று நாட்கள் இரவு நேர உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசமிருப்பது.
11) கடுமையான விரத முறையில் இருபத்தொரு நாட்கள் வெறும் பசுப்பால் மட்டும் சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது.
12) மூன்று நாட்கள் பகல் ஒரு வேளை மூன்று கைப்பிடி அன்னம் மட்டும் சாப்பிட்டு உபவாச விரதம் இருத்தல்.
13) இரவில் மட்டும் மூன்று பிடி அன்னம் சாப்பிட்டு உபவாச விரதம் இருத்தல்.
14) ஒரு நாள் பகல் நேரத்தில் சுத்தமான எள்ளுப் பிண்ணாக்கு மட்டுமே சாப்பிட்டு உபவாசமிருப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) ஒரு நாள் இரவில் மட்டும் பசுவின் பால் அருந்தி உபவாச விரதம் இருத்தல்.

16) ஒரு நாள் மோரை மட்டுமே அருந்தி உபவாசமிருப்பது.

17) ஒரு நாள் முழுவதும் சுத்தமான நீரை மட்டுமே அருந்தி உபவாசமிருப்பது.

18) ஒரு நாள் முழுவதும் வெறும் பொரிமா மட்டுமே சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது. இந்தப் பொரிமா என்பது புழுங்கல் அரிசியை நன்கு பொடித்து நெய், தேங்காய், சர்க்கரை ஆகியவற்றைப் போட்டு பிசைந்து வைத்துக்கொள்வதாகும்.

19) ஒரு நாள் முழுவதும் தினை மாவு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருப்பது.

20) தேய்பிறை அன்று ஆரம்பித்து வளர்பிறை முடிந்து திரும்பத் தேய்பிறை நாட்கள் வரை முதல் தினம் ஒரு பிடி அன்னத்தை மட்டும் சாப்பிட்டுப் பின்னர் தினம் ஒவ்வொரு பிடி அன்னத்தை அதிகமாக்கிக்கொண்டு, சுக்லபட்சம் முடிந்த பிறகு ஒவ்வொரு பிடி அன்னமாகக் குறைப்பது.

21) ஒரு நாள் முழுவதும் வில்வ தளத்தையும்(இலை) நீரையும் மட்டுமே அருந்தி உபவாச விரதம் இருப்பது.

22) ஒரு நாள் முழுவதும் அரச இலைத் தளிர்களையும், நீரையும் அருந்தி உபவாச விரதம் இருப்பது.

23) ஒரு நாள் முழுவதும் அத்தி இளந் தளிர்களையும், நீரையும் மட்டும் அருந்தி உபவாச விரதம் இருப்பது.

24) இருவேளை உணவுடன் உபவாசமிருப்பது.

25) முதல் நாள் ஒரு வேளை பகல் உணவு மட்டுமே உட்கொண்டு மறுநாள் இரவு மட்டும் உணவு கொள்வதான உபவாச விரதம் இருப்பது.

26) மாமிச உணவுகள், மசாலாக்கள் இல்லாத சைவ உணவுகள் மட்டும் சேர்ந்த உணவுகளை மட்டுமே குறைந்த அளவு சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது.

27) வாழைக்காய், பூடு, வெங்காயம், பெருங்காயம் ஆகியவை சேர்ந்த உணவுகளைச் சேர்த்துக்கொள்ளாமல் உபவாச விரதம் இருப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய ஏதாவது ஒன்றைத் தேர்ந்து எடுத்து உபவாசம் இருக்கலாம். ஆனால் எதுவுமே அருந்தாமல் நீர் மட்டும் அருந்தி உபவாசம் இருப்பது சிறந்தது என்பர். உபவாசம் = (இறைவன்) பக்கத்தில் இருப்பது என்ற பொருள் உடையது.

## இரண்டு விரதங்கள் சேர்ந்திருந்தால் அனுஷ்டிக்க வேண்டிய விரத விதி

1) வெள்ளிக்கிழமை விரதம் இருப்போர் வேறு விரதங்கள் சேர்ந்தால் இரு விரதங்களையும் சேர்த்து விரதம் இருக்கலாம். உபவாசம் சேர்ந்தால் உபவாசம் இருக்கவும்.

2) சனிக்கிழமை விரதம் இருப்போர் வேறு விரதங்கள் சேர்ந்தால் தலையில் எண்ணெய் வைக்காமல் முழுகி இரண்டு விரதங்களையும் உரிய காலத்தில் நோற்ற பின்பே உணவு உட்கொள்க. உபவாச நோன்பாயின் உபவாசம் இருக்கவும்.

3) சிவராத்திரி விரதத்தோடு வேறு விரதங்கள் சேருமாயின், உதாரணமாக சிராத்தம் வரின் திவசத்தைச் செய்து உணவை நுகர்ந்து விட்டு உபவாசம் இருக்கலாம். சிவராத்திரி உபவாசம் இராதவர் குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ளலாம்.

4) ஒரே நாளில் மூன்று விரதங்கள் சேர்ந்தால் மூன்று விரதங்களையும் அந்தந்த காலங்களில் அனுஷ்டித்து முடித்த பின்பு உணவு உட்கொள்ளவும். மூன்று விரதங்களில் ஒன்று உபவாசமாய் இருப்பினும் உபவாசம் இருக்கவும். சனிக்கிழமை விரதம் முடிந்ததும் வேறாக சமைக்கப்பட்ட உணவைக் காகத்திற்கு இட்டு மற்ற விரதத்தைத் தொடரவும். சிராத்த நாள் என்றால் திவசம் செய்து உணவை நுகர்ந்த பின்பு மற்ற விரதத்தைத் தொடர வேண்டும்.

5) தீபாவளியுடன் அமாவாசை சேருமாயின் விடியற் காலையில் எண்ணெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து முழுகி புத்தாடை அணிந்து பின்னர் வழமை போல் குறித்து அமாவாசை விரதம் நோற்க வேண்டும். சிராத்தம் என்றாலும் மேற் கூறியவாறு செய்யவும். இயலாதவர் ஒரு துளி எண்ணெய் வைத்து முழுகிப் புத்தாடை அணிந்து அமாவாசை விரதம் அனுஷ்டித்தல் வேண்டும்.

6) ஏகாதசி விரதத்தோடு மற்றைய விரதம் சேருமானால் இரண்டையும் உரிய காலத்தில் அனுஷ்டிக்கவும். மற்றைய விரதம் உபவாசம் எனில், உபவாசம் இருக்கவும். சிராத்தம் வரின் திவசம் செய்த பின் உணவை நுகர்ந்து விட்டு உபவாசம் இருக்கவும். உபவாசம் இராதவர் குறித்த நேரத்தில் உணவு உட்கொள்க.

7) சிவ விரதமாகிய சோம வார விரதம் இருப்போர் வேறு விரதம் சேர்ந்தால் இரண்டு விரதங்களையும் அனுஷ்டிக்க வேண்டும. சிராத்தம் வரின் உணவை நுகர்ந்து பின் உபவாசம் இருக்கவும். அமாவாசை வரின் தர்ப்பணம் செய்து சோமவார விரதம் இருக்கவும்.

8) விரத பூர்த்தியாகிய பாரணம் செய்யும் தினத்தன்று வேறு விரதம் சேர்ந்தால் காலையில் குளித்து முழுகி பூஜை முடித்துத் தீர்த்தத்தை உட்கொண்டு அதன்பின் மற்றைய விரதத்தை அனுஷ்டிக்கவும்.

## அர்ச்சனைக்கு உகந்த பத்திரங்கள்

| | | |
|---|---|---|
| 1) சௌபாக்கிய வாழ்வுக்கு | - | வெள்ளறுகம்புல் |
| 2) வாக்குவன்மை பெற | - | அரச இலை |
| 3) கல்வியில் மேன்மைக்கு | - | இலந்தை இலை |
| 4) தீய சக்திகள் அகல | - | மரு (இலை) |
| 5) தர்மசிந்தனை வளர | - | முல்லை இலை |
| 6) துயரங்கள் நீங்க | - | அகத்திக் கீரை |
| 7) பொருள் பெற | - | கரிசலாங்கண்ணி இலை |
| 8) பில்லிசூனியம் நீங்க | - | தாழை இலை |
| 9) இன்பம் பெற | - | வில்வ இலை |
| 10) ஞானத்தன்மைக்கு | - | ஜாதி மல்லிகை இலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரபுத்திரநாயனார் கதை.

அண்ட புவனாங்களெங்கும் பாவபுண்ணிய பலன் தெரியவேண்டிப் பரமசிவன் உமையம்மையார் மூலம் தங்கப் பலகையழைப்பித்து உருவமைத்தருளினார். அதனை உமையாள் கண்டு அதிசயப்பட்டு கருவுருவாய்ப் பேசும் கிருபை பாலிக்கவேண்டுமென இரந்தாள். இறைவன் அப்படியே கிருபை செய்து மந்திரம் உபதேசித்து சித்திரபுத்திரன் என்று பெயர் வைத்து அருள்புரிந்தருளினார். அண்டபுவனாங்களிலுமுள்ள முன்னாற் கணக்குகளையும், பிரமவிட்டிணு முதலானவர்களுடைய பாவபுண்ணிய முதலானவற்றையும் தினமும் தமக்கு அறிவிக்குமாறு உத்தரவு செய்தருளினார். சித்திரபுத்திரனார் கையிலையில் இருந்துகொண்டு கொண்டு கணக்குகளை எழுதி வந்தார். இங்ஙனமாக தேவேந்திரன் மகவாசை கொண்டு தருமங்கள் பல புரிந்து இறைவனை நோக்கி இந்திராணியுடன் தவம் புரிந்தான். சிவபெருமான் காமதேனுவை அழைத்து இந்திரன் இந்திராணி தவத்தை எடுத்துரைத்துப் பின்னர் சித்திரபுத்திரரை இந்திரனுக்குப் புத்திரனாகப் பிறந்து அவன் வாஞ்சையைத் தீர்க்குமாறு அருள்புரிந்தருளினார். அங்ஙனமே சித்திரபுத்திரனார் காமதேனுவின் வயிற்றிலுதித்துப் பாவபுண்ணியங்களைப் பகுத்து வந்தார். இதனை,

*"ஆயிராங் கிங்கிலியார் அசைக்க*
*வொண்ணாப் புத்தகமும்*
*பொன்னினெழுத்தாணியுமே*
*பொற்பாகக் கைப் பிடித்து"*

*என்னும் பாடலடிகளினூடாக*புகழேந்திப் புலவர் இயற்றிய சித்திரபுத்திரநாயனார் கதை செப்புகின்றுது. சித்திரா பூரணை நாளில் ஆலயங்களில் இக்கதை படிக்கப்பட்டு அன்னதானங்கள் நடைபெற்று வருகின்றன. சித்திரைக்கதை, சித்திரைக் கஞ்சி எனவும் அழைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரபுத்திரனார் கணக்குப் பார்த்தல்

தூலப் பொருள், சூக்குமப் பொருள் போலவே தூல உலகம், சூக்கும உலகம் எனவும் கூறப்படும். மனிதர் இறந்த பின்னர் "இறந்துவிட்டோம்" என்ற தெளிவு ஏற்படும்வரை வீடுவாசல், மனைவி, மக்களின் பக்கமாக உலாவித் தம் மனதுக்கமையாதவற்றைத் தடுக்கவும், உவந்தவற்றில் தம்மகிழ்ச்சியைத் தெரிவிக்கவும் முயற்சிக்கின்றனர். அது முடியாதுபோகும் நிலைமையிலேயே உண்மையாக இறந்துவிட்டதாகப் புலப்படுகின்றது. ஆகவே இறந்தவர்கள் ஒருவித மூர்ச்சை அடைகின்றனர்.

ஜடவுலகில் கடினப்பொருள், திரவப் பொருள், ஆவிப்பொருள் போன்ற பல நிலைகள் இருப்பதுபோலக் காமலோகம், சுவர்க்கலோகம் முதலான சூக்கும லோகங்களும் படி முறையான எழுவகைப் பொருள்நிலைகளைக் கொண்டனவாய் அமைந்துள்ளன. இறந்தவர்கள் மயக்கத்தில் ஆழ்ந்தவுடன் காமலோகத்தில் நடுப்பகுதியாகிய நான்காம் பகுதியில் அதற்கென இருக்கும் தேவர்கள் இறந்தவர்களை அங்கு கொண்டு சென்றுவிடுவர். இந்த நான்காவது படியே யமலோகம் எனப்படும். மூர்ச்சை தெளிவடைந்த பின்னர், பாவஞ்செய்தோர்களை காமலோகத்தில் கீழ் மூன்று படிகளுக்கும், புண்ணியம் புரிந்தவர்களை மேல் மூன்று படிகளுக்கும் அனுப்பிவைப்பார்கள். இங்ஙனம் அனுப்புபவர்களைத்தான் யமதூதுவர்கள் என்றும், இவர்களின் தலைவனையே யமன் என்றும் அவ்வப்பகுதிகளுக்கு அனுப்புவதையே யமலோகத் தீர்ப்பு எனவும் கூறப்படும். மூர்ச்சை தெளிந்தவுடன், இறந்தவர்களின் பாவ புண்ணியத் தன்மைகளை பரிசீலனை பண்ணுவதைத்தான் சித்திரபுத்திரனார் கணக்குப் (பேரேடு) பார்த்தல் என்பர்.

உலகின் பல்வேறு மதங்களிலும் பலவிதமாக இதனைக் கூறுவர். கிறிஸ்தவர்கள் இதனை வெளிப்படுத்தல் (Purgatory) என்பர். முஸலிம் மக்கள் நியாயத் தீர்ப்பு என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத்திரீய முனிவர் உபதேசம்

தைத்திரீய முனிவர் தம் மாணவருக்கு உபதேசித்த வேதப் பகுதியை தைத்திரீய சாகை என்பர். கிருஸ்ண யசுர் வேதத்திலே தைத்திரீய உபநிடதம் அமைந்திருக்கிறது. இது மூன்று பகுதிகளை உடையது. அப்பிரிவுகளாவன சிக்ஷாவல்லி, ஆனந்தவல்லி, பிருகுவல்லி என்பன.

சிக்ஷாவல்லியில் பிரமச்சரிய ஆச்சிரம ஒழுக்கமுறைகளும், ஓங்கார மந்திரத்தின் உண்மைப் பொருளும், சில முனிவர்களின் வாழ்க்கை வரலாறுகளும் கூறப்படுகின்றன. ஆனந்தவல்லியில் பேரின்பப்பேறாகிய பிரமானந்தத்தின் சொரூபமும் அதன் பெருமையும் கூறப்படுகின்றது. பிருகுவல்லியில் உலகம் எதிலிருந்து தோன்றி எதில் ஒடுங்குகிறது என்பது பற்றி கூறப்படுகின்றது. இது வருணன் தன் மகனாகிய பிருகுவிற்கு உபதேசித்ததாகக் கூறப்படுகிறது.

குருவிடமிருந்து கல்வி கற்கும் பிரமசாரிக்கு குரு பின்வருமாறு உபதேசிக்கும் உபதேசம் சிக்ஷாவல்லியிற் காணப்படுகிறது. "உண்மைபேசு, தருமநெறியில் நட, வேதத்தை நாள்தோறும் பாராயணஞ்செய், தேவகாரியங்களையும் பிதுர் காரியங்களையும் தவறாது செய், மாதா பிதா குரு என்போரை தெய்வமாகப்போற்று, தானதர்மங்களை பக்தியுடன் செய்" இத்தகைய உபதேசங்கள் பல சிக்ஷாவல்லியிற் காணப்படுகின்றன.

உலகனைத்தும் பிரமத்திலிருந்து தோன்றி பிரமத்திலே ஒடுங்கும். நம்முடலில் ஐந்து கோசங்கள் உண்டு. நம்முடலுக்கு ஆதாரம் பிரமமே. அப்பிரமத்தை உபாசித்து சிவோகம்பாவனை செய்து வருபவன் மோட்சத்தை அடைவான் என்பது ஆனந்தவல்லியின் கருத்தாகும்.

எங்கும் வியாபித்திருப்பதும், எல்லாவற்றையும் இயக்குவதும் பிரமமே என்பதை உணர்ந்து அகந்தையற்றுச் சிவத்தியானத்தில் ஒன்றியிருப்பவர் பிரமானந்தத்தை அடைவர் என்பது பிருகுவல்லியின் சாரமாகும்.

இம்மூன்று உபநிடதப் பகுதிகளையும் தைத்திரீய முனிவர் தம்மாணவர்களுக்கு உபதேசித்தார். அவருடைய உபதேசத்தைக் கேட்ட மாணவர்கள் அதனை உலகிற்கு அளித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரன்தவம்

சுரசையின் மகளாகிய மாயை தங்குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரிடம் பலவித மாயைகளைக் கற்று அவருபதேசப்படி காசிப முனிவர் தவம் செய்யுமிடத்தை அடைந்தாள். அங்கு அவரது தவத்தை தனது மாயையால் கலைத்து தன்னிடம் மோகங்கொள்ளச் செய்தாள். காசிப முனிவர் மாயையை மணந்து சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் மூன்று புதல்வர்களையும் அசமுகி என்னும் புதல்வியையும் பெற்றார். அப்புதல்வர்கள் காசிபரை வணங்கி "நாங்கள் என்ன செய்தல் வேண்டும்" என்று வினாவினார்கள். காசிப முனிவர் அவர்களை நோக்கி

மக்காள்! வேதாகமங்கள் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் உண்மைப்பொருடகள் என்று கூறும். இறைவன் உயிர்களின் பொருட்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல். அருளல் எனும் ஐந்தொழில்களையும் செய்கிறார். சிவபெருமானே பதியாவர். பாசத்தால் கட்டப்பட்ட உயிர் பசு எனப்படும். உயிர்கள் நல்வினை தீவினைகளால் இன்பதுன்பங்களை அனுபவித்து இறைவனருளால் தவமே மேலானது என அறிந்து தவநெறிநின்று சிவப்பேறடையும். ஆகவே தவமே எல்லாவற்றிலும் மேலானது. ஆகவே நீங்கள் பாவச் செயல்களை ஒழித்து புண்ணியங்களைச் செய்து சிவபெருமானைக் குறித்து தவமியற்றுங்கள். அத்தவத்தால் நல்வாழ்வு பெறுவீர்கள். தவத்தால் அடையமுடியாத பொருள் எதுவுமில்லை. குச்சக முனிவர், மிருகண்டு முனிவர், மார்க்கண்டேயர் ஆகியோர் தவத்தினால் பெரும் பேறுகளைப் பெற்றார்கள். நீங்களும் தவம் செய்தால் சிவனருள் பெறுவீர்கள் இது நிச்சயம்" என்று உபதேசித்தார். இவ்வுபதேசத்தை பெற்ற சூரபன்மன் பெருந்தவமியற்றி சிவனிடம் பெருவரம் பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வினை தீவினை

## கருட புராணத்திலிருந்து நல்வினை தீவினை பற்றிய உண்மையை அறிவோம்

கருடன் திருமாலைப் பார்த்து, "பரந்தாமா! ஒருவனுடைய பிறப்பிற்கும் இறப்பிற்கும் நல்வினை, தீவினை காரணமாக உள்ளதா?" இதைப்பற்றி விளக்கிக் கூறவேண்டுமென்று வேண்டினான். அதற்குத் திருமால் பதிலளிக்லானார். "கருடனே! இறந்த ஒருவன் இன்பமடைவதற்கும் துன்பமடைவதற்கும் அந்த உயிர் செய்த நல்வினை தீவினைகளே காரணமாக அமைகின்றன.

இறந்தவர்கள் எத்தனைபேர்கள் இருந்தாலும் அவரவர் செய்த வினைகளின் பலன்கள் தவறாமல் அவர்களை வந்தடையும்" என்றார் திருமால். இதைக்கேட்ட கருடன், "மகாவிஷ்ணுவைத் தொழுது பகவானே ஒருவன் நன்மை செய்தவன் அல்லது தீமை செய்தவன் என்பதை எப்படி அறிவது?" என்று கேட்டான். அதற்குப் பகவான் கருடனை நோக்கிக் கூறலானார். கருடனே! ஒருவனைப் பார்த்தமாத்திரத்திலேயே அவன் எத்தகைய பாவத்தைச் செய்தவன் என்பதை அறியலாம்.

ஒருவன் பேசமுடியாமல் நெஞ்சடைப்பு உள்ளவனாக இருந்தால் அவன் பொய் சொன்னதால் பூர்வ ஜென்மத்தில் நரக வாசம் அனுபவித்தவன் என்று கூறலாம். உயிர்க்கொலை செய்தவன் குஷ்டரோகியாக பிறப்பான். தீய பானங்களைக் குடித்தவன் புழுக்களையுடைய பற்களுடன் காட்சியளிப்பான். தங்கத்தைத் திருடியவன் புழுநெளியும் நரகத்தில் தொழில் செய்வான். தன் குருவினுடைய மனைவியைத் தீண்டியவன் விகாரமுடைய தோற்றத்துடன் காட்சி தருவான். வேறு ஒரு பரத்தையுடன் தொடர்பு கொண்டவன் சண்டாளனாகப் பிறப்பான். முன்ஜென்மத்தில் யாருக்கும் எதையும் கொடுக்காதவன் ஏழ்மையுடன் இருப்பான்.

ஒரு கிராமத்திலுள்ள பிராமணன் பாவம் செய்தால் அக்கிராமத்திலுள்ள எல்லாப் பிராமணர்களுக்கும் அந்தப் பாவம் போய்ச்சேரும். அவ்வாறன்று அந்தக் கிராமத்தில் ஒரு பிராமணன் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் எல்லாப் பாவங்களும் அந்தப் பிராமணனையே சேரும். அவன் கழுதையாகப் பிறப்பான். குளித்துவிட்டு சூரிய நமஸ்காரம் மற்றும் பூஜைகளைச் செய்யாமல் உண்பவன் காக்கையாகப் பிறப்பான். வெட்டவெளியில்வைத்து உணவைப் புசித்தவன் காட்டில் குரங்காகப் பிறப்பான்.

பிறரை மிரட்டிக்கொண்டு வாழ்ந்தவன் பூனையாகப் பிறப்பான். பச்சைச் செடிகளை கொழுத்தியவன் மின்மினிப் பூச்சியாகப் பிறப்பான். பிராமணரை ஏமாற்றி தீய பதார்த்தங்களைக் கொடுத்தவனும், கூடக்கூடாத பிற ஜாதிப் பெண்ணைப் புணர்ந்த பிராமணனும் வண்டியை இழுத்துச் செல்லும் மாடாகப் பிறப்பார்கள். எந்தத் தவறும் செய்யாதவரை விரோதித்தவன் குருடனாகப் பிறப்பான். புத்தகங்களைத் திருடியவன் பிறந்த சிறிது காலத்தில் குருடனாவான். பிராமணக் குடும்பத்தை அழித்தவனுக்கு பிள்ளைகள் நிலைக்கமாட்டார்கள். பசித்தவர்களுக்குச் சோறுபோடாதவர்களுக்கு புத்திர பாக்கியம் கிடைக்காது.

பிறருக்குச் சொந்தமான ஆடைகளைத் திருடியவன் உடும்பாகப் பிறப்பான். பிறருக்கு விஷம் கொடுத்துக் கொன்றவன் பாம்பாகப் பிறப்பான். குருவின் மனைவிமீது அசை வைத்தவன் ஓணானாகப் பிறப்பான். வாசனைப் பொருள்களைத் திருடியவன் உடம்பில் துர்நாற்றம் வீசும். ஒருவன் செய்யும் தொழிலைக் கெடுத்தவன் ஆயிரம் பசுக்களைக் கொன்ற பாவத்திற்கு ஆளாவான். பசுவைக் கொல்வதும், அடிப்பதும் பாவமாகும். பன்னிரெண்டு வயதுவரையுள்ள குழந்தைகள் செய்யும் பாவம் பெற்றோரைச் சாரும். பெற்றோர் இல்லாவிட்டால் வளர்ப்பவரைச் சாரும்.

கருடனே ! இந்தப் புராணத்தை தந்தை இறந்த காலத்தில் தீட்டு நீங்குவதற்குள் ஒருவன் கேட்டால் அந்த இறந்த தந்தை மோட்சத்தை அடைவான். தாய் இறந்தபோது இந்தப் புண்ணியத்தைக் கேட்டால் அந்தத் தாய் சொர்க்கத்தை அடைவாள். தைமாதம் விஷு புண்ணிய காலத்திலும் கிரகண காலத்திலும் திவச தினத்திலும் இதைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் நல்லுலகை அடைவார்கள். ஜமலோக பயம் ஏற்படாமல் இருக்கவும், சொர்க்கத்தை அடையும் வழியையும் தெரிவிப்பதற்கே இந்தப் புராணத்தை உனக்குக் கூறினேன்" என்றார் திருமால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடன் திருமாலை வலம் வந்து பணிந்து இப்புராணத்தை தங்கள் வாயால் சொல்லக் கேட்க என்ன பாக்கியம் செய்தேனோ? என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

இவ்வாறு சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு கருடபுராணத்தைச் சொல்லி அருளினார். அதைக் கேட்டு மகிழ்ந்து முனிவருக்கு நன்றி தெரிவித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளைக் காணிக்கையாக அளித்து வணங்கினர். பின்பு அனைவரும் அவரவரது ஆசிரமத்தை அடைந்தனர்.

## தெரிந்திருக்க வேண்டியவை

### *சமயாசாரியர் குருபூசைத் தினம் (முத்தியடைந்த தினம்)*

1. சித்திரைச் சதயம் அப்பர் சிறந்த வைகாசிமூலம்
அப்பரைப்பணி சம்பந்தர் ஆனிமா மகத்திலந்தம்
முத்தி நயவாதவூரர் முகிய நல்லாடி தன்னில்
சுத்தமாஞ் சோதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்தார்.

### *சமயாசாரியர் வயது*

அப்பருக் கெண்பத் தொன்றருள் வாதவூரருக்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன் ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினாறறி

### சந்தானசாரியார் குருபூசைத்தினம் (முத்தியடைந்த தினம்)

"சித்திரை அத்தம் உமாபதி, ஆவணித் திங்கடனில்
உத்திரஞ் சீர் கொள் மறைஞான சம்பந்தர் - ஓது கன்னிச்
சுத்தமெய் பூரம் அருணந்தி ஐப்பசி சோதி
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேத ஜென்மம்

பிரேத ஜென்மம் அடைந்தவனும், பிரேத ஜென்மம் நீங்க வழியும் பற்றி கருடபுராணம் கூறுகிறது. கருடபுராணம் கூறும் பிரேத ஜென்மம் பற்றி அறிவது அவசியம்.

கருடன் விஷ்ணுபெருமானிடம் "பெருமானே! பிரேத ஜென்மம் பற்றிக் கூறினீர்கள். இவ்வாறு பிரேத ஜென்மம் அடைந்தவனைப் பற்றிய சரித்திரம் ஏதாவது உள்ளதா?" என்று கேட்டார். அதற்கு பகவான், "நீ கேட்டது நல்ல கேள்வி. பிரேத ஜென்மம் அடைந்த ஒருவனின் கதையைப் பற்றிக் கூறுகிறேன் கேள்" என்று கூறி ஆரம்பித்தார்.

திரோதா யுகத்தில் மஹோதயம் என்ற நகரத்தில் இருந்துகொண்டு பப்ருவாகனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் தான் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்து வந்தான்.

பப்ருவாகனனுக்கு ஒரு நாள் வேட்டையாடவேண்டுமென்ற ஆசை எழுந்தது. உடனே தன் வீரர்கள் சிலரை அழைத்துக்கொண்டு காட்டிற்குக் கிளம்பினான். காட்டில் ஒரு மானைக் கண்டான். அந்த மானின் மீது அம்பெய்தினான். அடிபட்ட மான் கீழே விழுந்து மீண்டும் எழுந்து ஓடியது. அரசன் மீண்டும் அம்பெய்தான். அந்த அம்பும் மான் மீது பாய்ந்தது. ஆனால் இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்த நிலையிலும் அந்த மானானது ஓடி மறைந்தது.

மானின் இரத்தச் சவட்டைப் பின்பற்றிச் சென்ற அரசன் வெகுதூரம் சென்றுவிட்டான். புள்ளிமானை எங்கும் காணவில்லை. அரசனுக்கு இப்போது தாகம் ஏற்பட்டது. தண்ணீரைத் தேடி காடு முழுவதும் அலைந்தான். கடைசியாக ஒரு தாமரைத் தடாகத்தை அடைந்தான். அதிலிருந்து நீரைப்பருகி, அதன் கரையில் இருந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்தான். வெகுநேரமாகியும் அவனது படைவீரர்கள் அங்கு வந்துசேரவில்லை.

எங்கும் இருள் சூழ்ந்தது. அப்போது எலும்போ, சதையோ, நரம்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத பல பிரேதங்கள் அங்குமிங்கும் ஓடின. அவை பயங்கரமாகச் சப்தங்களை எழுப்பின. அவை பசியுடனும், தாகத்துடனும் காணப்பட்டன. அவற்றில் ஒரு பிரேத ஜென்மம் அரசனின் அருகில் வந்து பேசத் தொடங்கியது. "அரசே உங்களைப் பார்த்தால் என் பிரேத ஜென்மம் நீங்கும் என்று நம்புகிறேன்" என்றது. இதைக் கேட்ட அரசன், "உன்னைப் பார்த்தால் கோரமான உருவத்துடன் காணப்படுகிறாய்? உன்னால் எவ்வாறு பேச முடிகிறது?" என்று கேட்டான்.

பிரேத ஜென்மம் தன் வரலாற்றைக் கூற ஆரம்பித்தது. "அரசனே என் பெயர் தேவன். நான் வைதீசம் என்ற நகரத்தில் வைசிய குலத்தில் பிறந்தேன். நான் திருமணம் செய்துகொண்டு சீரும் சிறப்புமாய் வாழ்ந்தேன். தான தருமங்களைச் செய்தேன். ஏழைகளுக்கு உதவிகள் செய்தேன். அந்தணரையும், அறவோரையும் வழிபட்டு வந்தேன். எனக்கு என்று பிள்ளையோ, குடும்பமோ, சுற்றத்தாரோ யாரும் இல்லை. எனவே நான் இறந்தபிறகு யாரும் கருமம் செய்யவில்லை. இறந்த ஒருவனுக்கு அவனுடைய மகனோ அல்லது உறவினரோ சமஸ்காரம், சஞ்சயனம், விருஷோறசர்க்கம், சோடசம், சபிண்டிகரணம், மாசிகம், சிரார்த்தம் முதலிய சடங்குகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் இறந்தவன் பிரேத ஜென்மம் அடைவான். அரசே யாரும் கருமம் செய்யாததால் நான் பிரேத ஜென்மம் அடைந்தேன். மக்களைக் காக்கின்ற அரசனாக நீ இருப்பதால் எனக்குரிய கருமகாரியங்களைச் செய்ய வேண்டும். அதனால் எனது பிரேத ஜென்மம் நீங்கும்" என்றான்.

அதைக்கேட்ட பிரேதம் "அரசே, பிறர் பொருளை அபகரித்தல், தெய்வ சொத்துக்களை அபகரித்தல், எளியவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோரின் சொத்துக்களை அபகரித்தல், பாவகாரியங்களைச் செய்தவர்கள், எந்தவிதமான தானதருமங்களைச் செய்திருந்தாலும் நரகத்தை அடைவார்கள். பிறன் மனைவியை விரும்பியவனும், பிரேத ஜென்மத்தை அடைவான். பிறர் செய்த உதவியை மறந்தவனும், உதவி செய்தவருக்கு தீமை செய்தவனும் நரகத்தை அடைவார்கள்" என்று கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக்கேட்ட அரசன், "பிரேத ஜென்மம் நீங்க வழி யாது? அதுபற்றிக் கூறவேண்டும்" என்றான். பிரேத ஜென்மம் அவனைப் பார்த்து கூற ஆரம்பித்தது. "அரசே, இதற்காகச் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றிக் கூறுகிறேன் கேள். முதலில் ஸ்ரீமந் நாராயணனைப்போல ஒரு விக்கிரகத்தைச் செய்ய வேண்டும். அதில் சங்கு, சக்கரம் ஆகியவை இருக்குமாறு அலங்காரம் செய்ய வேண்டும். பிறகு கிழக்குத் திசையில் ஸ்ரீதரனையும், தெற்குத் திசையில் மகா சூரனையும், மேற்குத் திசையில் வாமனையும், வடக்கில் கதாகரனையும் நிலைநிறுத்த வேண்டும். அவற்றின் நடுவில் பிரமன், ருத்திரன் ஆகியோரோடு ஸ்ரீமகா விஷ்ணுவையும் நிறுத்தி ஆராதனை செய்ய வேண்டும். வலம் வந்து வணங்க வேண்டும். பின்னர் அக்கினியிலே ஹோமம் செய்ய வேண்டும்.

இதன்பிறகு மீண்டும் நீராடிவிட்டு விருஷோற்சர்க்கம் என்ற சடங்கைச் செய்து பிராமணர்களை அழைத்துவந்து அவர்களுக்குக் குடை, மாரடி, பலகை, வஸ்திரம், பொன் முதலான பொருட்களை வழங்கி உணவு அருந்தச் செய்ய வேண்டும். பின்னர் சய்யாதானம், கடகதானம் முதலிய தானங்களைச் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் மரித்தவன் பிரேத ஜென்மத்திலிருந்து விடுபடுவான்" என்று கூறியது.

இவ்வாறு பிரேத ஜென்மம் சொல்லிமுடிந்ததும் அரசனைத் தேடி படைவீரர்கள் அந்தக் குளக்கரைக்கு வந்துசேர்ந்தனர். இதைக்கண்ட பிரேத ஜென்மம் யாருடைய கண்ணுக்கும் புலப்படாமல் மறைந்துவிட்டதைக் கண்ட அரசன் ஆச்சரியப்பட்டான். பிரேத ஜென்மம் கூறிய்வாறே கர்மகாரியங்களை அரசன் செய்தான். இதனால் பிரேத ஜென்மம் நற்கதி அடைந்தது.

In the depth of Silence only, you can hear the voice of God

அமைதியின் ஆழத்தில் மாத்திரமே கடவுளின் குரலைக் கேட்க முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய தமிழ் வழிபாடு

காலைக் கடன்களை நிறைவு செய்து இறைவனை வணங்கும்பொழுதும் ஆலயங்களில் பூசைகள் நடைபெறும் பொழுதும் முறையே செய்கையினாலும், மனத்தினாலும் இறைவனை வழிபடுவதற்கு தமிழிலே திருமுறைகள் எமக்கு வழிகாட்டுகின்றன. அவ்வழியாகச் சென்று இறையின்பம் அடைவோமாக.

## தூபம் காட்டும்பொழுது

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தே னடியேன் அதிகைக் கெடில
வீராட்டானத் துறையும் மானே. - அப்பர்

## நைவேத்தியம் காட்டும்பொழுது

ஆலந்தான் உகந்து அமுது செய் தானை
ஆதியை அமரர் தொழுதேத்துஞ்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுள்ளானை
ஏலவார் குழலாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பனெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே. - சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுக்கு விளக்குக் காட்டும்பொழுது

சோதியே சுடரே சூழொளி விளக்கே
கரிகுழற் பனைமுலை கடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப் பெருந்துறையில்
நிறை மலர்க்குருந்த மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்ற ருளாயே -மாணிக்கவாசகர்

## குட விளக்குகள் காட்டும்பொழுது

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்த தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

- திருவிசைப்பா

## ஐந்து விளக்குகள் காட்டும்பொழுது

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே

- திருமூலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று விளக்குகள் காட்டும்பொழுது

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே

- அப்பர்

## கற்பூரம் காட்டும்பொழுது

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சித்தத்தின் மேலாம்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி

- சேக்கிழார்

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்த லிங்கம் - பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரி உமையாள்
அத்தனே ஆலவாயா.

- ஸ்ரீகுரு ஞானசம்பந்தர்

## அம்பிகைக்குக் கற்பூரம்

கரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற் கண் எம் பிராட்டி
அரும்பமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி.

- பரஞ்சோதி முனிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூப தீபங்களின் அதி தேவதைகள்

| | | |
|---|---|---|
| தூபத்தில் | - | அக்கினி தேவன் |
| மகா தீபத்தில் | - | சிவன் |
| நாக தீபத்தில் | - | கேது |
| விருஷ தீபத்தில் | - | தர்ம தேவதை |
| புருஷாம்ருக தீபத்தில் | - | விஷ்ணு |
| பூரண கும்பத்தில் | - | உருத்திரன் |
| பஞ்ச தட்டுகளில் | - | பிரம்ம தேவதைகள்: (ஈசானம்,தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்) |
| நட்சத்திர தீபங்களில் | - | 27 நட்சத்திரங்கள் |
| மேரு தீபத்தில் | - | 12 சூரியர்கள் |
| திருநீறு - விபூதியில் | - | பரமேஸ்வரன் |
| கண்ணாடியில் | - | சூரியன் |
| குடையில் | - | சந்திரன் |
| சாமரத்தில் | - | மகாலட்சுமி |
| விசிறியில் | - | வாயு |
| கொடியில் | - | நந்திதேவர் |
| ஆலவட்டத்தில் | - | பிரம்மா |
| கற்பூரத்தில் | - | அக்கினி |

அன்போடு நாளினை தொடங்கிடு
அன்போடு நாளினை செலவு செய்க
அன்பினால் நாளினை நிரப்பிடுக.
அன்பினால் நாளினை நினைவு செய்க.
இதுவே இறைவனை அடையும் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிஷேகப் பொருட்களும் அவற்றினால் கிடைக்கும் பலன்களும்

| | | |
|---|---|---|
| தூய நீர் | - | சாந்தி |
| மலரிட்ட தூய நீர் | - | மலநீக்கம் |
| வாசனைத் திரவியம் | - | நீடித்த ஆயுள் |
| சந்தனம் | - | செல்வம், சாயுச்சிய முத்தி |
| பால் | - | ஆயுள் விருத்தி |
| தயிர் | - | புத்திர பாக்கியம் |
| நெய் | - | மோட்சம் |
| தேன் | - | இசைஞான விருத்தி |
| கருப்பஞ்சாறு- | | நித்திய சுகம் |
| சர்க்கரை | - | சத்துரு நாசம் |
| வாழைப்பழம் | - | பயிர் விருத்தி |
| பலாப்பழம் | - | உலக வசீகரம் |
| மாம்பழம் | - | வேண்டியதைப் பெறுதல் |
| மாதுளம் பழம் | - | பகை நீக்கம் |
| நாரத்தம் பழம் | - | சற்புத்தி |
| தேங்காய்ப்பூ | - | அரசுரிமை |
| இளநீர் | - | நன்மக்கட்பேறு |
| கோரோசனை | - | தீர்க்காயுள் |
| பச்சைக் கற்பூரம் | - | பயம் நீங்கும் |
| கஸ்தூரி | - | வெற்றி உண்டாகும் |
| பன்னீர் | - | சாலோக முத்தி |
| அன்னம் | - | ஆரோக்கியம் |
| மாக் காப்பு | - | மலநாசம் |
| மஞ்சட் காப்பு | - | இராசவசியம் |
| பஞ்ச கவ்வியம் | - | ஆன்மசுத்தி |
| பஞ்சாமிர்தம் | - | செல்வம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றை இடும்போது அனுசரிக்க வேண்டிய சில விதிகள்

1) இரண்டு கைகளால் வாங்க வேண்டும்.

2) கிழக்கு அல்லது வடக்கு முகமாகத் திரும்பி இட வேண்டும்.

3) வாங்கி அணியும் போது திருநீறு மிஞ்சி விட்டால் கீழே போடுதல், வாயால் ஊதி விடுதல் தவறாகும்.

4) இறைவன் திருமுன்னும், குரு முன்னும், அக்கினி முன்பும் நின்று அணியாது முகத்தைத் திருப்பி நின்று அணிந்து கொள்ள வேண்டும்.

5) நடந்து செல்லும்போது அணியக்கூடாது.

6) உட்கார்ந்து கொண்டு வாங்குதல் கூடாது.

7) நிலத்தில் சிந்திவிட்டால் அதை எடுத்தபின் நீரால் சுத்தம் செய்ய வேண்டும்.

8) திருநீற்றைக் காலை, நண்பகல், மாலை, நள்ளிரவு, உணவின் முன்னும், பின்னும் நித்திரைக்கு முன்பதாகவும், பின்னும் அணிந்து கொள்ள வேண்டும்.

9) உத்தூளனமாகவும், திரிபுண்டமாகவும் தரிக்கலாம். உத்தூளனம் என்பது, பரவிப் பூசுதல் ஆகும். திரிபுண்டரம் என்பது புனித நீரால் குழைத்த திருநீற்றை உரிய மந்திரங்களை ஓதியவண்ணம் உச்சி, நெற்றி, மார்பு, தொப்புள், இரு முழந்தாள், இரு தோள், முழங்கைகள், மணிக்கட்டுகள், இரு காது, கழுத்து, முள்ளந்தண்டின் அடி ஆகிய பதினாறு இடங்களிலும் முக்குறிகளாக அணிவது திரிபுண்டரம் எனப்படும். திரிபுண்டரமாகத் திருநீற்றைத் தரிப்பவர்கள் முறைப்படி சமய தீட்சை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

ஓடுகின்ற நீரை ஓர் அணையைக் கட்டி அதில் தேக்கி வைத்து எமது தேவைகளுக்குப் பயன்படுத்துவது போல, எல்லாம் வல்ல எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளின் மாபெரும் சக்தியைத் திருக்கோவில்களில் தேக்கிவைத்து கிடைத்தற்கரிய மானிடப் பிறவி எடுத்த நாம் மேன்மையடையப் பயன்படுத்திக்கொள்கின்றோம். இதுவே ஆலய வழிபாட்டின் அடிப்படையாகும்.

இறையருளை யாம் பெறுவதற்கு இறை சிந்தனையுடன் எமது பணிகளை ஆற்றவும் வாழ்வை மேம்படுத்தவும் ஆலய வழிபாட்டின் தத்துவம் வழிவகுக்கின்றது.

இறை சிந்தனையுடனேயே மனிதன் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்பதனை எமது நகரசபை அலுவலர்கட்கும், நகரசபையின் பணிகளுக்கும் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் எமது விறுமர் பெருமான் நகரசபை அலுவலக வளாகத்தினுள்ளே தனக்கென ஓர் ஆலயம் அமைப்பிக்கத் திருவுளங்கொண்டு எமது மதிப்பிற்குரிய நகரசபைச் செயலாளர் அம்மா **திருமதி.கு.ஆறுமுகம்** அவர்களின் சிந்தனையில் அனுக்கிரகஞ் செய்தருளினார். விறுமர் பெருமானின் பெருங்கருணையாலும், அனுக்கிரகத்தினாலும் ஆலயம் ஸ்தாபிப்பதற்கான அத்திவாரம் எனும் பெருஞ்சாந்தி **26.10.2007**ம் திகதி இடம்பெற்றது. எந்தவித இடையூறுமின்றி ஆலயம் அமையப்பெற்று **22.11.2007**ம் திகதி பிரதிஷ்டா கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே நிறைவேறியது. தொடர்ந்து பூஜை வழிபாடுகள் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு அன்புடனும் நம்பிக்கையுடனும் வழிபட்டுவரும் பக்த அடியார்களுக்கு எவ்வித இடையூறுமின்றி தமை வணங்கி பூஜை வழிபாடுகளை ஆற்றுவதற்கு அருள்பாலித்துவரும் விறுமர் பெருமானின் கருணை அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் அனுக்கிரகத்தை எந்தவித சோர்வுமின்றி உறுதியுடன் செயல்வடிவில் இறையருளால் நிறைவேற்றி, நகரசபையின் பணிகளை இறை வழிபாட்டுடன் ஆற்றுவதற்கு வழிசமைத்துத் தந்த எமது சபையின் செயலாளர் அவர்கட்கு இறையாசி கிடைக்கப் பிரார்த்தித்து எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெருங்கருணையுள்ளம் படைத்த இறைவனின் ஆலயக் கட்டிட அமைப்புப் பணிகளுக்கும், கும்பாபிஷேக வைபவத்திற்கும் நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி வழங்கிய சகல அலுவலர்களுக்கும், இவ்வாலய பிரதிஷ்டா கும்பாபிஷேக வைபவங்களை ஆகமவிதிப்படி நெறிதவறாது சிறப்புற நிகழ்த்திய அந்தண சிவாச்சாரியப் பெருமக்கள் அனைவர்க்கும், தொடர்ச்சியாக வெள்ளிக் கிழமைகளிலும், விசேட புண்ணிய காலங்களிலும் நடைபெற்றுவரும் பூசை வழிபாட்டுக் கருமங்களை ஆற்றித்தரும் பூசகர்களுக்கும ஆலயப் புனரமைப்புப் பணிகளுக்கு, மாதாந்தம் நிதி அன்பளிப்பு வழங்கிவரும் சகல அலுவலர்களுக்கும், வெள்ளிக்கிழமைகளில் உபயம் ஏற்றுச் செய்யும் அலுவலக பக்த அடியார்களுக்கும், பொங்கல், பூசை, வழிபாட்டுக் கருமங்களில் உதவிபுரியும் சகல அலுவலர்களுக்கும், விசேடமாக ஆலய மூலஸ்தானப் பணிகளில் பக்தியுடனும், மனவிருப்புடனும் ஈடுபட்டு கருமங்களை சிறப்பாக நிறைவேற்றித்தரும் நூலகப் பகுதி பக்த அலுவலர் **திரு.அ.கேசவலிங்கம்** அவர்கட்கும்,

ஆலய அமைப்புப் பணிகள், தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டுவரும் புனரமைப்புப் பணிகள் யாவற்றிற்கும் தொழில்நுட்ப ரீதியான ஆலோசனைகளை வழங்கி விரைவாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றி யுதவிய வேலைகள் அத்தியட்சகர் **திரு.கு.செல்வரட்ணம்,** அவர்கட்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவர்க்கும், கட்டிட புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட அனைத்து நல்லுள்ளம் கொண்டவர்கட்கும்,

ஓராண்டு நிறைவையொட்டி விறுமரருளால் நன்மணங் கமழ மலர்ந்துகொண்டிருக்கும் **"மாங்கலநாதம்"** மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கிச் சிறப்பித்த சமயப் பெரியார்கட்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமான்கட்கும்,

எல்லாவற்றுக்கும் மேலாக இம்மலருக்கு மானிடர்களாகிய நாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டத்தக்கதான ஆக்கங்களை அழகுறத் தொகுத்து வழங்கியுதவிய எமது பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் **சைவப்புலவர் திரு கு.சுமுகலிங்கம் ஐயா** (சமாதானநீதவான்) அவர்கட்கும்,

இம்மலருக்கான ஆக்கங்களை வழங்கிய அன்புள்ளங்கட்கும், இம்மலரில் இடம்பெற்றிருக்கும் இறைவன் திருவுருவ படங்களை படம் பிடித்துதவிய படப்பிடிப்பாளர்களுக்கும்,

ஓராண்டு நிறைவையொட்டி நடைபெறும் இன்றைய விறுமர் பெருமானின் மணவாளக்கோல விழாவிற்கும், இதனையொட்டி இடம்பெறும் "மாங்கலநாதம்" எனும் இந்நூல் வெளியீட்டிற்கும் மனமுவந்து சகலவிதமான ஆதரவுகளையும் வழங்கிய அத்தனை நல்லுள்ளங்கட்கும், இந்நூல் பற்றிய ஆய்வுரையை அழகுற எடுத்தியம்பிய எமது மதிப்புமிக்க மட்டுவில் மகாவித்தியாலய அதிபர், **புலவர் மு.பாலசுப்பிரமணியம் ஐயா** அவர்கட்கும், மேலும் மொட்டவிழ்ந்து மலர்ந்துகொண்டிருக்கும் விறுமர் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலரான "மாங்கலநாதம்" என்னும் இந்நூலை சிறந்த முறையில் அழகுற அச்சுப்பதித்து வழங்கிய **மட்டுவில் வடக்கு ரம்யன் அச்சகத்தினருக்கும்,**

நகரசபை அலுவலக பக்த அடியார்களின் வாழ்வு வளம் பெறவும், நகரசபையின் பணிகள் சிறக்கவும், நகரசபையின் சேவைகளைப் பெறும் இந்நகர மக்களின் வாழ்வு மேம்படவும் விறுமர் பெருமானின் பாதம் பணிந்து இறையாசிவேண்டிப் பிரார்த்திப்பதுடன் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

சுபமங்களம்.

***திருமதி. க. கணேசலிங்கம்,***

பொருளாளர்,

விறுமர் ஆலய பரிபாலனசபை,

நகரசபை, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனினுடங்காது
பூக் கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

## பிழைபொறுத்தல்

கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின்ஞ்செழுத்தை
சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொருத்தருள்வாய் கச்சியே கம்பனே.

## தீப மங்கள மந்திரம்

ஓம் தீப மங்கள ஜோதி நமோ நமோ
ஓம் தூய சொரூபா நமோ நமோ
ஓம் விறும தேவா நமோ நமோ
திரு அருள் தாராய் நமோ நமோ

## வேண்டுகோள்

இந்நூலினை முழுதும் படித்து முற்று உணர்வு பெற்று நல்வாழ்வு வாழவேண்டுகிறேன். குறைநீக்க கருத்துக்கள் எனக்கு நேரடியாக எழுதி அனுப்பவும் எதிர்வரும் காலங்களில் சிறப்பாக அமைய உங்கள் கருத்துக்கள் உதவியாக அமையும் என்பதை அன்புடனும் பணிவுடனும் வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

வாழிநின் சேவடி போற்றி பூம்பாத வாரிசங்கள்
வாழிநின் தாண்மலர் போற்றிநின் தண்ணளி வாழிநின் சீர்
வாழிஎன் உள்ளத்தில் நியுநின் ஒற்றி மகிழ்நரும் நீ
வாழி என் ஆருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயுதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகம் முந்துயர் தீர்கவே

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## மங்களம்

ஆதிகணேசனுக்கு அருள் மங்களம்
அன்பே வடிவான விறுமருக்கு ஜெயமங்களம்
அன்பழகன் வேலனுக்கு ஜெயமங்களம்
ஞானநாத சிவானர்க்கு மங்களம் மங்களம்
அன்னை முத்துமாரி அம்பிகைக்கு அருள் மங்களம்
சிவபூசை செய்பவர்க்கு சிவமங்களம்
சிவபூசை கொண்டவர்க்கு அருள்மங்களம்
வேதாகமமோ தினோர்க்கு சிவமங்களம்
திருமுறையோ தியோர்க்கு ஜெயமங்களம்
பக்த சிவனடியார்களுக்கு பரமசிவமங்களம்
திருத்தொண்டு செய்தவர்க்கு திருமங்களம்
நம்புமடியார்களுக்கு ஜெயமங்களம்
நகராட்சி மன்றத்திற்கு நல்ல திருமங்களம்
நகர்வாழும் மக்களுக்கு ஜெயமங்களம்
நாதவடிவான எங்கள் ஞானவைரவர்க்கு மங்களம் மங்களம்
மங்களம் ஜெயமங்களம்
மங்களம் ஜெயமங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


1. திருமுறைகள் - 1,2.3
2. கும்பாபிஷேகமலர் - திருகோணமலை அருள்மிகு
   ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
3. சிவபூசை விளக்கம் - துடிசைகிழார்
   அ. சிதம்பரனார் (1940)
4. ஸ்ரீ கருடபுராணம் - வேங்கடவன்
5. சிவதொண்டன் மாதவெளியீடு
6. சைவசமய புண்ணியகாலம் (1957) த. சுப்பிரமணியம்
7. சைவசமயதீபம்
8. சைவாழ்வியலும் இடர்களை பதிகங்களும்- சைவப்புலவர்
   கு. சுமுகலிங்கம்
9. பகவான் சத்தியசாயி பஜனாவளி
10. கிராமிய வழிபாடு - மு. மனோகரன்
11. நாவலர் பிரபந்தத் திரட்டு - நாவலர்
12. சமயாசாரியர், சந்தனாசாரியர்,
    சரித்திர சங்கிரகம் - செ. வெ.ஜம்புலிங்கபிள்ளை (1923)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අ ආ ඇ ඈ

ඉ ඊ උ ඌ එ ඒ

ඓ ඔ ඕ ඖ

---

අ ආ ඇ ඈ ඉ ඊ උ

ඌ එ ඒ ඓ ඔ ඕ ඖ

---

අ ආ ඇ ඈ ඉ ඊ උ

ඌ එ ඒ ඓ ඔ ඕ ඖ.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயிலிலே செய்யும் தொண்டுகளும் அதனாற் பெறும் பலன்களும்.

1. திருவலகிடுதல் - திருவீதிகள், திருச்சந்நிதி குப்பைகளை துடைப்பத்தினால் கூட்டி ஒதுக்குதல் திருவலகிடுதல் என்பர். இப்பணி செய்வோர் காமம், வெகுளி, மயக்கம், கோபம், பொய் ஆகிய மனமாயைகளை நீக்கி பரிசுத்தர்களாவார்கள்.

2) திருமெழுக்கிடல் - கோபம், லோபம், மோகம் போன்ற மன அழுக்காறுகளை ஒருங்கே நீக்கி, தத்துவம் என்னும் நறும் சாணத்தைக்கொண்டு அன்பென்னும் சலத்தோடு கலந்து திருமெழுக்கிடுபவர் மனக் கோயிலில் சிவலிங்கம் தோன்றப்பெறும்.

3) அருட்பா ஓதல் - சிவபெருமான் திருமேனி நாதவுருவானதென்று சுருதி கூறுகின்றது. அவ்வுண்மையை விளக்கவே அவரின் திருமுன்னிலையில் அருட்பாக்கள் பாடப்படுகின்றன. இதனைச் செய்வோர் உண்மை ஞானம் கைவரப்பெற்று முத்திப்பேறடைவர்.

4) தூபம் தாங்குதல் - ஆணவ மலம் நீக்கப் பெறுவர்.

5) திருவிளக்கேற்றுதல், தீபம் தாங்குதல் - திருஅருட் சிவஞானத்தைப் பெற்றுத் திளைப்பார்கள்.

6) சாமரை இரட்டுதல் (வீசுதல்) - மல நிவாரணமும், திருவருட் செல்வமும் அடைவர்.

7) குடை பிடித்தல் - ஆஞ்ஞாசக்கரத்தையும், பலத்தையும் மனோவீரத்தையும் பெறுவர்.

8) வாகனந்தாங்குபவர் - கணநாதராய் திருக்கைலாயத்தை அடைந்து இன்புற்றிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ரம்யன் அச்சகம். மட்டுவில்